Koviloor Digital Library

தன்வந்திரி தைலம் 500

Acc. No: 44883
R 689

தாமரை நூலகம், சென்னை - 26.

Koviloor Digital Library

Koviloor Digital Library

91/4

தன்வந்திரி பகவான் தைலம் 500

பதிப்பாசிரியர்

ஆர். சி. மோகன்

KOVILOOR ANDAVAR LIBRARY, KOVILOOR
A. No. 44883

தாமரை நூலகம்

7. என்.ஜி.ஓ. காலனி, 3ம் தெரு

வடபழனி சென்னை-600 026

தொலைபேசி எண்:044 23620249

Koviloor Digital Library

தாமரை வெளியீடு எண்: 168
முதல் பதிப்பு : ஜனவரி 1996
இரண்டாம் பதிப்பு : ஜனவரி 2000
மூன்றாம் பதிப்பு : அக்டோபர் 2014
நான்காம் பதிப்பு ஜனவரி 2020

நூல் பற்றி: உரிமை பெற்றது

நூலின் பெயர்	: தன்வந்திரி தைலம் 500
பதிப்பாசிரியர்	: ஆர்.சி மோகன்
வெளியிட்டோர்	: தாமரை நூலகம் சென்னை-26
பதிப்பு ஆண்டு	: 2020
உரிமை	: பதிப்பகத்துக்கு
நூல் வடிவம்	: 18 க்கு 12 செ.மீ.
அச்சுத்தாள்	: 10.7கி வெள்ளைத்தாள்
மொத்த பக்கங்கள்	: 120
விலை	: ரூ. 40
அச்சிட்டோர்	: கிரியேட்டிவ் ஆப்செட் சென்னை-34

Koviloor Digital Library

91/4

பதிப்புரை

தைலங்களைப் பற்றி மட்டுமே தனி நூல்கள் இருப்பது மேல் நாட்டு மருந்துவ விஞ்ஞானிக்கு விந்தையாக இருக்கலாம். ஏனென்றால் இன்றுவரை கூட, அவர்கள் உடம்பின் மேல் பூசப்படும் தைலங்களால் உள் உறுப்புக்களுக்கு மருத்துவப் பயன் உண்டு என்பதை ஒப்புக் கொள்ளவில்லை.

எகிப்திய பிரமிட்களில் தைலங்களால் பதப்படுத்தப் பட்ட உடல்கள் ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்குப் பின்பும் அழிவின் சின்னம் ஏதுமின்றி அப்படியே இருப்பதைப் பார்த்த பிறகும் கூட அவர்கள் தைலங்களின் மருத்துவ குணத்தைப் பற்றிச் சிந்திக்கவில்லை.

தைலங்களைப் பூசுவதால் வாத நோய்கள் கடுமையான பக்கவாதம் (பாரிசவாயு) முதலானவற்றை குணப்படுத்தும் முறை சித்த ஆயுர்வேத மருத்துவ முறைகளிலேயே உண்டு. இன்று வரை வாதத்திற்கும் வாதத்தினால் கை கால்கள் விழுந்து போவதற்கும் மேல்நாட்டு முறைகளில் மருத்துவமே கிடையாது. ஆனால், தாரா, பிழிச்சல், நவரக்கிழி போன்ற மருத்துவ முறைகளால் கேரள மருத்துவர்கள் மனித சமுதாயத்திற்கு அற்புதமான சேவைகளைப் புரிந்து வருவது உலகத்திற்கே தெரியும்.

தைலத்தைத் தேய்க்கும் போது உடம்பின் மேல் செலுத்தப் பெறும் அழுத்தத்தினால் (மசாஜ் செய்வது) பயன் ஏற்படுகிறது. தைலத்திலுள்ள மருந்துகள் உடம்பினுள் செல்வதால் அல்ல. தோலுக்கு மேலே தேய்க்கப்படும் தைலத்தினாலோ அல்லது வேறு பொருளாலோ உடம்புக்குள்

Koviloor Digital Library

எவ்விதமான மருத்துவப் பயனும் உண்டாக்க முடியாது என்றே சமீபகாலம் வரை நம்பிக் கொண்டிருந்த மேல்நாட்டு மருத்துவ விஞ்ஞானிகள் இன்று கொஞ்சம் கொஞ்சமாக அந்த மூட நம்பிக்கைகளிலிருந்து விடுபட்டு வருகிறார்கள். தங்களுடைய மருத்துவம் தோன்றுவதற்கும் ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்பே தோன்றிய சித்த ஆயுர்வேத மருந்துவ முறைகளை ஏளனம் செய்தது, நம்ப மறுத்தது முட்டாள்தனம் என்பது இப்போது அவர்களுக்கு கொஞ்சம் கொஞ்சமாகப் புரியத் தொடங்கியுள்ளது.

அவர்களுடைய ஆய்வுக்கருவிகள் எல்லாவற்றுக்கும் அப்பாற்பட்ட எல்லாவற்றையும் தூக்கி விழுங்கிவிடக் கூடிய மருத்துவ முறைகள், - வர்மம், அக்குபஞ்சர் போன்றவற்றில் உள்ளன என்பதை அவர்கள் கண்கூடாகப் பார்த்து வருகிறார்கள். மேலே பூசப்படும் தைலங்களால் அற்புதமான முறையில் நோய்கள் குணப்படுத்த முடியும் என்பதை நம்நாட்டு மருத்துவர்கள் வெகுநாட்களுக்கு முன்பே உணர்ந்திருந்தனர். ஆனால் வெள்ளையர் ஆட்சிக்காலத்தில் நம் நாட்டு மருத்துவ முறைகள் ஒடுக்கப்பட்டதன் காரணமாகவும் ஊசி போடுவது போன்ற புதுமையான முறைகள் அப்பாவி மக்களுக்கும் அரைகுறைப் படிப்பாளிகளுக்கும் வெகு வினோதமானதாகவும் சுவாரஸ்யமானதாகவும் தோன்றி அதிலே அவர்களுக்கு ஒரு அபாரமான நம்பிக்கை, பிரமை ஏற்பட்டு விட்டதாலும் நம் நாட்டு மக்களே நமது மருந்துவ முறைகளைப் புறக்கணிக்கவும் தொடங்கினர்.

அதேசமயம், சரியான ஆதரவின்மையால் நலிந்து போன மருத்துவர்கள் நம்பிக்கையிழந்து போய் விட்டனர். கடுமையான பிரயாசையின்மேல் தயாரிக்க வேண்டிய அற்புதமான மருந்துகளை செய்யா தொழிந்தனர்.

Koviloor Digital Library

91/H

இந்நிலையில் அங்கங்கே மூலைமுடுக்குகளில் பரம்பரை வைத்தியர்கள் குடும்பங்களில் சில மருந்துகள், தைலங்கள் அபூர்வமாகப் பாதுகாக்கப்பட்டும் வந்தன. அவற்றைப்பற்றி அந்தந்த ஊர்களின் சுற்றுப்பகுதிகளில் வசிக்கும் மக்களுக்குத் தவிர மற்றவர்களுக்குத் தெரிய இடமில்லாமலே போய்விட்டது.

புத்தூர் எலும்பு முறிவு மருத்துவம், தெலுங்க பாளையம் எண்ணெய், பீடம்பள்ளி எண்ணெய், முடக்கறுத்தான் தைலம் போன்ற பெயர்களைக்கூட பெரும் பான்மையான மக்கள் கேள்விப்பட்டிருக்க மாட்டார்கள். தலைமுறை தலைமுறையாக நூற்றுக்கணக்கான ஆண்டு களாகப் பாதுகாக்கப்பட்டு வந்த சில மருத்துவ முறைகளுக்கு இவை எடுத்துக்காட்டாகும். பீடம்பள்ளி எண்ணெய் என்பது குழந்தைகளுக்கு மார்பில் உரம் விழுந்து இரண்டு பக்க விலா எலும்புகளும் தூக்கிக் கொண்டு ஒரே முக்கோணம் போல் அமைந்துவிடும் நோயைக் குணப்படுத்துவதாகும்.

இன்று இந்த வைத்தியத்தின் மேல் மக்களுக்கு ஓரளவு நம்பிக்கை ஏற்பட்டு வரும் நிலையில் நமது நாட்டு சித்த மருத்துவர்களுக்கு ஒன்றை நினைவூட்ட விரும்புகிறோம். ஒரு நோய்க்கு மருந்தளிக்கும் பொழுது கஷாயம், கிருதம், லேகியம், மாத்திரை, தைலம் என்று எல்லாவகை மருந்துகளையும் பிரயோகிக்கும் கேரள மருத்துவர்களின் முறைதான் சிறந்தது. எடுத்துக்காட்டாக கபரோகிக்கு குளிக்காதே. தலைக்குத் தண்ணீர் விட்டுக் கொள்ளாதே என்று எம்.பி.பி.எஸ். மருத்துவர்களைப் போல் ஆலோசனை கூறும் சித்த வைத்தியர்களை நான் பார்த்திருக்கிறேன். ஆனால் கபரோகிக்கு மிளகுத் தைலம், போன்ற தைலத்தைப் பூசிக் குளிப்பதாலேயே நோய் குணமாகும் என்று இந்த நூலில் தன்வந்திரி பகவான் கூறியிருக்கிறார்.

Koviloor Digital Library

தைலங்களைத் தயாரிப்பது சற்று கடினமான காரியம். அதற்காக தைல சிகிச்சை முறையை புறக்கணித்து விடமுடியாது. அகத்தியரும் தேரையரும் எத்தனையோ தைல வர்க்கங்களை கூறியிருக்கிறார்கள். தன்வந்திரி பகவான் இந்த நூலில் மிக அருமையான முறைகளைக் கூறியிருக்கிறார். இவற்றைப் படித்து சமுதாயம் பயன் பெற வேண்டும். இந்த நூல்கள் நமக்கு முன்னோர்கள் விட்டுச் சென்றுள்ள விலை மதிப்பிட முடியாத அரிய செல்வங்கள், அறியாமையால் இவற்றைப் புறக்கணித்தால் நாம் எத்தனையோ செல்வங்களை இழந்து விட்டோம். இனியேனும் இவற்றைப் பாதுகாத்து நல்ல முறையில் நாம் பயன் அடைவதோடு உலகம் முழுவதற்கும் இந்தச் செய்தியை எட்டச் செய்ய வேண்டும் என்று விரும்புகிறோம்.

இந்த அரிய நூல் நெல்லை மாவட்டம் கீழ்ச்சாலைப் புதூர் ஏ.வி. எஸ் வேலவன் அவர்களால் ஓலைச் சுவடியாக அளிக்கப்பட்டது. தமிழகத்திற்கு அவர் செய்துள்ள இந்த மாபெரும் தொண்டினை என்றும் நன்றியுடன் நினைக்கக் கடமைப்பட்டுள்ளோம். இதுபோல் பழைய நூல்கள், ஓலைச்சுவடிகள் வைத்திருப்பவர்கள், அச்செல்வங்கள் அழிந்துவிடக் கூடாதென்ற நல்லெண்ணத்தோடு மனமுவந்து கொடுக்க முன் வந்தால் உவகையுடன் பெற்றுக் கொண்டு அவற்றையும் வெளியிடுவோம் என்று உறுதிகூறுகிறோம்.

சென்னை. எஸ்.பி.ராமச்சந்திரன்
10.1.96 பதிப்பாசிரியர்

Koviloor Digital Library

தன்வந்திரி பகவான் தைலம் 500

பொருளடக்கம் பக்கம்

மகாசந்தனாதித் தயிலம்	10
சிறுசந்தனாதித் தயிலம்	13
மகாவில்வாதித் தயிலம்	"
வெட்டிவேர்த் தயிலம்	15
கருமுள்ளித் தயிலம்	16
மகாசாட்டரணைத் தயிலம்	"
கடுக்காய்த் தயிலம்	17
சுக்குத் தயிலம்	18
நெல்லிக்காய்த் தயிலம்	"
அறுகன்வேர்த் தயிலம்	19
மிளகுத் தயிலம்	20
கருஞ்சீரகத் தயிலம்	21
கார்போகவரிசித் தைலம்	"
விஷமுஷ்டித் தயிலம்	22
பொன்னாங்கண்ணித் தயிலம்	23
கீழாநெல்லித் தயிலம்	24
ஓமத் தயிலம்	"
ஏலக்காய்த் தயிலம்	25
ஆவாரை பஞ்சாங்கத் தயிலம்	26
துவரங்குச்சித் தயிலம்	27
வேலம்பட்டைத் தயிலம்	"
நொச்சியிலைத் தயிலம்	28
மலைவேம்புத் தயிலம்	"
சன்னி பதிமூன்றுக்கும் மேற்பூசும் தைலம்	29
வாதுமைக் கொட்டைத் தயிலம்	"
சித்தாமுட்டித் தயிலம்	30
லவங்கப்பட்டைத் தயிலம்	"

Koviloor Digital Library

நன்னாரித் தயிலம்	31
மாம்பட்டைத் தயிலம்	32
கையாந்தகரைத் தயிலம்	33
மருதம்பட்டைத் தயிலம்	"
கொழிஞ்சிப்பட்டைத் தயிலம்	34
அழிஞ்சில் தயிலம்	"
பஞ்சமூலித் தயிலம்	35
பஞ்சபூரணத் தயிலம்	36
பித்தம்தீரத் தயிலம்	"
சிலேத்துமந் தொண்ணூற்றாறுக்குத் தயிலம்	37
சோகை காமாலைக்குத் தயிலம்	38
பித்தவாந்தி கண்ணோய் தீரத் தயிலம்	39
கண்ணோய்க்குத் தயிலம்	40
சொறிசிரங்குத் தயிலம்	41
மேகம் 21க்கு தயிலம்	42
சகல வாயுவுக்குத் தயிலம்	43
சூரி வித்துத் தயிலம்	44
கீழ்க்காய் நெல்லித் தயிலம்	45
தீரும் வியாதி	"
காசரோகத் தயிலம்	"
கிராணிக்குத் தயிலம்	46
திமிர்படைக்குத் தயிலம்	47
சூசிகா வாய்வுக்குத் தயிலம்	48
சீரகத் தயிலம்	51
கிச்சிலித் தயிலம்	"
எலுமிச்சம்பழத் தயிலம்	52
கோரோசனைத் தயிலம்	53
கஸ்தூரித் தயிலம்	54
குங்குமப்பூத் தயிலம்	55
சன்னி பதின்மூன்றுக்கு மேற்பூசும் சாம்பிராணித் தயிலம்	55

Koviloor Digital Library

கற்பூரத் தயிலம்	56
அண்டவாதத் தயிலம்	"
காமலைக்குத் தயிலம்	57
4448 வியாதிக்கும் ஏகமூலித் தயிலம்	"
புஷ்பபாணத் தயிலம்	63
மகிழம்பட்டைத் தயிலம்	65
அகிற்கட்டைத் தயிலம்	"
காஞ்சுறாத் தயிலம்	66
நிலக்கடம்புத் தயிலம்	67
மனோரஞ்சிதபாணத் தயிலம்	69
பரிமளகந்தித் தயிலம்	70
சுகந்தவாரித் தயிலம்	71
மன்மதலீலைத் தயிலம்	"
சீதாதேவித் தயிலம்	73
கோறைக்கிழங்குத் தயிலம்	"
மகாகீழா நெல்லித் தயிலம்	74
மகாதேவரஞ்சிதத் தயிலம்	75
வாலுழுவைத் தயிலம்	76
செந்நாவற்பட்டைத் தயிலம்	77
உடல் தளர்ச்சி தீர சர்வாங்க ராஜயோகத் தயிலம்	78
கபாலப்புற்று பீனிசம் காதிற்சீழ் தீருவதற்கு மகா பூர்வக்கியான தயிலம்	79
மகாமேரு கற்பகத் தயிலம்	81
அஷ்டமூலித் தயிலம்	82
பஞ்சமூலித் தயிலம்	83
மகாநந்தி தயிலம்	"
சன்னி பதின்மூன்றுக்குத் தயிலம்	88
நேத்திரவாயு மண்டையிடிக்குத் தயிலம்	89
நேத்திராஞ்சனத்தயிலம்	90
சகலபிணிதீரத்தயிலம்	91

Koviloor Digital Library

உ

தன்வந்திரி பகவான்

திருவாய்மலர்ந்தருளிய

தைலம் 500

காப்பு

கலிவிருத்தம்

பாதியாளுமை பாதம்பணிந்துயான்
நீதியான நெகிழுந்தயிலத்தை
ஆதியானதோ ரண்டமுடிகூட்டி
சோதியாகவே துலங்கவுரைத்ததே 1

நூல்

மகாசந்தனாதித்தயிலம்

உரைக்குந்தயில முயர்ந்த சந்தனாதி
நிரைக்குஞ் சந்தநெருங்குந் தேவதாரம்
திரைக்குங் கோஷ்டந் திறமாங்கருஞ்சீரம்
வரைக்கு மதுரம் வனமாய்ச்சமன் தூக்கே. 2

தூக்கி வாலுமுவை யரிசியும்
தேக்குபத்திரி தேர்ந்த தாளிசமாம்
போக்கில்லாத பொருந்து மேலஞ்சுங்கு
தாக்குபத்திரி தக்ககார் போகியே. 3

Koviloor Digital Library

போகுமாஞ்சில் புகழுஞ் சதாவேரி
ஆகுங் குப்பியறையு நன்னாரியாம்
ஏகும்பச்சை யெழிலான கிச்சிலி
பாகுஞ் சர்க்கரை பலமாய்நிறுத்திடே. 4

நிறுத்துச்சீரம் நெடிதா மகிலமாம்
கறுத்தகாலின் கருங்காலிப் பட்டையாம்
திருத்தமான தெளிந்ததோர் திப்பிலி
பொருத்தமான புகழ்சீந்தில் சேர்த்திடே 5

சேர்த்துமே கருவாப்பட்டை மிட்டானும்
பார்த்துநெல்லி பகருங் குடமல்லி
தீர்த்துகிராம்பு தெளியுமஞ் சிட்டியாம்
தூர்த்துநாகத் துடியா மிருவேலி 6

வேலியிந்து விரும்பு முத்தக்காசு
நீலிசிட்டம் நெடிய பொன்னாங்கண்ணி
காலிகத்திரி கழறு மரத்தையாம்
மூலிநெய்ச்சிட்டி முனையாகக் கூட்டிடே. 7

கூட்டிமஞ்சங் குலாவுமிரு மஞ்சங்
நீட்டுநற்பனை நிலையா நிலப்பனை
கூட்டுமுட்டி குறியாம் விலாமிச்சு
நாட்டும்வெட்பாலை நவில்சமன் தூக்கிடே.8

தூக்கிச் சண்பகந் துடியாமொருபலம்
போக்கில்லாமற் புகழு மிருவாட்சி
நோக்குந்தாழை நுவலு மிருதாழை
வாக்குதப்பாமல் வகையா யெடுத்திடே. 9

Koviloor Digital Library

எடுத்துக்கூந்த லெழிலான மாணிக்கம்
அடுத்துக் கொட்டை யறையுங் கரந்தையாம்
தொடுத்த பூலாவுந்தோன்று பாதிரியும்
விடுத்த பச்சை விரும்புமகரமே. 10

விரும்புமூலம் விளங்கு கார்த்திகையாம்
குரும்புரோணி குறிக்கும் நிலக்குமிழ்
திரும்புஞ் சாறடைதெளிந்த யெருக்கொடு
அரும்புமூல மழகா யெடுத்திடே. 11

எடுத்துப்பாண்ட மெழிலா யிடித்துமே
தொடுத்துமேசலம் தொண்ணூற் படியாகும்
கடுத்தகியாழங் கருதும் பதமதாய்
விடுத்தமாகவே விளங்க யிறக்கிடே. 12

இறக்கியே பசும்பாலிற் சமன் கூட்டு
முறக்குமெண்ணை முதிரச சமனுடன்
திறக்கமாகவே தேறவே காச்சிடு
சிறக்கமாகத் தெளிய வடித்திடே. 13

வடிக்கும்போது வழங்கு கற்பூரமாம்
நடிக்குங்கஸ்தூரி நவிலுங் குங்குமப்பூ
வெடிக்கும்ரோசனம் விரும்பிப் பொடித்திடு
முடிக்குந் தயிலமுறையாகப் போற்றிடே. 14

போற்றுமாயன் புகலும் பதாம்புயம்
ஏற்றுந்தீப மெழிலாய்க் கொடுத்துமே
ஆற்றுமண்டல மன்பாய் முழுகிடில்
தூற்றுமே பலநோய்க ளகலுமே. 15

Koviloor Digital Library

அகலும் நாலாயிரத்துச் சில்வானமும்
பகலுஞ்சூரியன் முன்பனிபோ லகன்றிடும்
நிகலுமாந்தர்க்கு நேரா யுரைத்திட்டேன்
வகலுந் தன்வந்திரி வாக்குபொய்யாதிதே. 16

சிறுசந்தனாதித் தயிலம்

பொய்யாதையா புகலுங் குருமொழி
ஐயாசிறு சந்தனாதி யறைகிறேன்
கையானமூலி கருது சந்தனமும்
மெய்யாம்பாலை விரும்பி யெடுத்திடே. 17

எடுத்துவேலி யெழிலா மதுரமாம்
தொடுத்தசண்பகந் தோன்றும் விலாமிச்சு
அடுத்தசீர மறையும் வாலுமுவை
கொடுத்துமே பாண்டங் குலாவியிடித்திடே.18

இடித்துமே சலமெழிலாய்ப் பதக்கிடு
கடித்தக்கியாழம் நவிலுந் தரத்திலொன்
றெடுத்துமே பசும்பாலிற் சமனெடு
கொடுத்துநல்லெண்ணெய் குறிப்பாய் சமன்கூட்டே 19

கூட்டியொன் றாய்க் குறுக்கவே காச்சிடு
நீட்டுமண்டல நேராய் முழுகிடில்
மூட்டும்வியாதி முடிவிட் டகன்றிடும்
பாட்டுதன்வ ந்திரிபகர் மொழிதப்பாதே. 20

மகாவில்வாதித் தயிலம்

தப்பாதையா தரணியில் மாந்தர்க்கு
ஒப்பாந்தயில முரைக்கும் வில்வாதியாம்
செப்பாமேபழந் தேர்ந்தவிரு நூறாம்
அப்பா சீரமறையுந் தசமாமே. 21

Koviloor Digital Library

ஆமேசந் தமறையுங் கருஞ்சீரம்
தாமேகோஷ்டந் தனிலவங்கப் பட்டை
போமேமாஞ்சில் புகலுங் கிராம்புடன்
நாமேவேலி நவிலு முசுக்கையே. 22

முசுக்கைச்சீந்தில் முனையாங் கருநெல்லி
வசுக்கையான வாலுமுவை யரிசியும்
பசுக்கைமஞ்சள் பகருந் திரிமஞ்சள்
நசுக்கையாகவே நவில்சமன் தூக்கிடே. 23

தூக்கிப்பாண்டந் துவள விடித்துமே
தாக்குமேசலந் தண்ணீறு நாழி
போக்குமே பதினாறி லொருபங்கு
வாக்குதப்பாமல் வாகாகக் காச்சிடே. 24

காச்சியே பசும்பாலிற் சமனிடை
ஆச்சுமெள்ளெண்ணை யறையுஞ் சமனெடை
நீச்சுபோகவே நேர்ந்த மெழுகதாய்
மூச்சிடாமல் முதிர விறக்கிடே. 25

இறக்குமரோசன மெழிலான குங்குமம்
திறக்கமானதோர் தேர்ந்த கஸ்தூரியும்
உறக்கமாகவே யோங்கப் பொடித்திட்டு
பறக்கமாகவே பரமனைப் போற்றிடே. 26

போற்றிமண்டலம் புகழாய் முழுகிடில்
ஆற்றும்பித்த மறையு நாற்பதுவும்
காற்றுங் காந்தலுங் கண்ணீரருகலும்
தூற்றும்பீனிசந் துடியாக நீங்குமே. 27

Koviloor Digital Library

நீங்கும்வெட்டை நெருங்கு மழலையும்
பாங்குகண்ணோய் பகருந்தொண் ணூற்றாறும்
தீங்குமேசெய்யுந் தேர்ந்ததோர் சன்னியும்
வாங்கிப்போமென வகுத்தார் முனிவரே. 28

வெட்டிவேர்த் தயிலம்

வகுத்தவேலி வலுவா மிருவேலி
தொகுத்தசுக்குடன் தோன்றுங் கருஞ்சீரம்
பகுத்த கோஷ்டமும் விலாமிச்சு
மிகுந்தசந்தனமே னிச்சம னெடே. 29

எடுத்துக்கியாழ மெழிலாகக் காச்சியே
கொடுத்துமே பசும்பாலிற் சமன்சேரு
சொடுத்து மெள்ளெண்ணெய்குலாவு மவ்விடையாம்
அடுத்துமே பாண்டமன்பாகக் காச்சிடே. 30

காச்சியே ரேசனங்கரு துகுங்குமப்பூ
வீச்சம்பூரம் விரும்பும் பச்சைப்பூரம்
தீச்சிடாமல் சிறுகப் பொடித்துமே
பாச்சுமெண்ணெயிற் பாங்காகச் சேர்த்திடே.31

சேர்த்துமுழ்கச் சிறக்கும் பீனிசம்போம்
கோர்த்துநீர்வரும் குழிக்கண் புழுவறும்
கார்த்துமேகமுங் கண்சிவப்பா னறும்
ஏர்த்தபித்தமு மேங்கித் தவிக்குமே. 32

தவிக்குமே கபந்தானோடிப் போகுங்காண்
அவிக்குங்கண்ணின்பூ வானிப்பூ தானறும்
கவிக்குங் கண்திரை காணாதொடுங்கிடும்
புவிக்குண்மாதர்க்குப் புகழா யறைந்ததே. 33

Koviloor Digital Library

அறைந்தமாமுனி யாயுறு வேதந்தான்
திறைத்தே னிம்முறை தெளிவுறமாந்தர்க்கு
கறைந்தேனிந்நூல்போற் கருதாரென் னூலிலும்
சிறந்தகன்வந்திரி தெளிவை மிகப்பாரே. 34

கருமுள்ளித் தைலம்

பார்த்துமே கருமுள்ளி பலம்நூறு
சேர்த்துமதுரஞ் சிறந்த கோஷ்ட முடன்
ஆர்த்து தும்மட்டிக்கா யிருநூறுடன்
கோர்த்துமே சலம்படி நூறெடுத்திடே. 35

எடுத்துப் பாண்டத்திட் டெழிலாய்க் கியாழஞ்
செய்தடுத்திடாமல் தனிப்பசும் பால்சமன்
அடுத்து மெள்ளெண்ணெ யதற்குச் சரிசமன்
தொடுத்து மொன்றாய்த் தீயதைமூட்டிடே. 36

மூட்டிப்பாக முதிராய் வடித்தெடு
நீட்டிமண்டல நேராய் முழுகிடு
சூட்டும்வாதஞ் சுவாசகாச மீளை
கோட்டுமந்தார காசம்விட்டோடுமே. 37

ஓடுங்கிரந்தி யுறையு மரையாப்பு
நீடும்வெள்ளை நெருங்கு மண்டவாதம்
சாடும்பாண்டு சரீரவீக்க முதல்
நாடுபோமெனக் கழறினார் முனிவரே. 38

மகாசாட்டரணைத் தயிலம்

முனிவர்வாக்குமுறை பொய்யா தொருநாளும்
தனியாஞ் சாட்டரணைப் பலமுன்னூறு
வனியாமருகு வாகாய்ச் சமனிடை
தொனியாய்ப் பாண்டந் துவளவிடித்திடே. 39

Koviloor Digital Library

இடித்துமே சலமிரு மரக்காலரை
நடித்தகியாழமும் நாலிலோர் பங்கெடை
தொடுத்துமே பசும்பாலிற் சமனெடை
அடுத்துமெள்ளெண்ணை யவ்விடை தூக்கிடே 40

தூக்கித்தயிலந் துவளவே காச்சிடு
தாக்குமண்டலந் தனிவார மிருமுறை
போக்கில்லாமற் பொருந்த முழுகிடு
வாக்குதப்பாது வகுத்த முறையிதே. 41

தப்பாது தப்பாது தன்வந்திரிமுறை
அப்பா ரோகமறையும் வாதரோகம்
செப்பா மேகந்தெளிந்திடு மேனியாம்
ஒப்பாமாந்தர்க் குறைத்தது வுண்மையே. 42

கடுக்காய்த் தைலம்

உண்மையாக வுரைக்கிறேன் மாந்தர்க்கு
கண்மையான கடுக்காய் நூறுபலம்
தண்மையானதோர் கூகைநீறெண்பலட
வெண்மையாஞ் சலம்விரும்புந் தூணிசேரே. 43

சேர்த்துப்பாண்டந் திறமாகக் காச்சிடு
கோர்த்துமே பசும்பாலிற் சமனெடை
ஆர்த்துஞ் செவ்விளநீரது மவ்விடை
தூர்த்துமென்னை துடியாகச் சேர்த்திடே. 44

சேர்த்துமெழுகு பதத்தில் வடித்திடு
பார்த்துமாயன் பதாம்புயம் போற்றியே
தீர்த்து மண்டலந்தீர முழுகிடு
ஆர்த்துக் கண்ணோ யலறியேவோடுமே. 45

Koviloor Digital Library

ஓடும்பீனிச முறையு மண்டைச்சூலை
நீடும்வாய்வு நெருங்குங் கபரோகம்
கூடுமேகங் குறிக்குங் கழல்வாதம்
சாடுங்காச்சல் தழலோடிப் போகுமே. 46

சுக்குத் தயிலம்

போகுமாந்தர்க்குப் புகலத் தயிலமொன்
றாகுஞ்சுக்குத் தனியா விருசேரு
பாகுமே சலம்படி சலமெட்டதாம்
ஆகும்பாண்டத்தி லன்பாகக் காய்ச்சிடே. 47

காய்ச்சுமே வாலுமுலைவ யரைத்திடு
பாய்ச்சிடு மெண்ணெய்பகரு நற்பாலிலே
தீச்சிடாமல் சிறக்கப் பதம்வடி
ஆச்சியம் பாளடியிணை போற்றிடே. 48

போற்றிமண்டலம் பொருந்த முழுகிடில்
காற்றுபோல் வீசும் கண்ணெரிச்சல்முதல்
ஆற்றுங்கோப மழலைதணியுங் காண்
தூற்று தேகந்துடர்ந்த வனம்போமே. 49

போமேதோஷம் புகலுந்திரி தோஷம்
தாமே யீளைதகுந்த சயமேகும்
நாமேசொன்னோம் நவில முனிவோரும்
ஆமேமாந்தர்க் கறைமொழி யுண்மையே. 50

நெல்லிக்காய்த் தயிலம்

உண்மையாக வுரைக்கிறேன் மாந்தர்க்கு
தண்மை நெல்லிதனிக் காயிருசேரு
வண்மையான வல்லாரை யொருசேரு
கண்மையான கழறுஞ் சலமாறே. 51

Koviloor Digital Library

ஆருபாண்ட மறைய விடித்திடு
தூறுகியாழந் துடியாம் நாலிலரை
நீறுமே பசும்பாலிற் சமனெடை
கூறுமெள் ளெண்ணெய் குறிக்குஞ்சமன்கூட்டே 52

கூட்டும்பாகங் குதிக்கு மிளப்பாகும்
நீட்டுந்தயிலம் நேரா முழுகிடில்
சூட்டுபித்தஞ் சுழலுமத மூர்ச்சை
மாட்டும்ரோக மகன்றோடிப் போகுமே. 53

போகுமூர்ச்சை புகலுமத மூர்ச்சை
ஆகும்பித்த மறையுங் கரும்பித்தம்
ஏகுங்கிறுப்பு யெழிலான சன்னியும்
போகுமென்று புகன்றனர் சித்தரே. 54

அறுகன்வேர்த் தயிலம்

சித்தர்வாக்குத் திசையிலும் பொய்யாது
பக்தர் ஞானியர் பகரா ரொருக்காலும்
உத்தமாந்தர்க் குறுதியா யாகுதற்
கத்ததன்வந்திரி கழறின துண்மையே. 55

உண்மைகேளு முரைக்கிறேன் மாந்தர்க்கு
தன்மையான தனியறுகன் வேரு
வண்மையான வரட்பூலா வேர்சமன்
திண்மையாய்ப் பாண்டந்திறமா யிடித்திடே.56

இடித்துப்பாண்ட மெழிலாய்ப் பொதிந்துமே
வடித்துமே சலம்வாகா யிருநாழி
தடுத்திடாமல் தனிப்பதமாய்க் காச்சி
அடுத்துமாவின் பாலன்பாய்ச் சரிசேரே. 57

Koviloor Digital Library

சேர்த்து மெழுகுபதமாய் வடித்திடு
தூர்த்து மீசனார் துய்யபதம் போற்றி
ஆர்த்துந்தயில மறையுமோர் மண்டலம்
பார்த்துப் பதமாய்ப் பாங்காய்முழுகிடே. 58

முழுகும்போது முறைகாச்ச லோடிடும்
அழுகுங் கண்ணீரறையும் நீர்ப்பாச்சலும்
புழுகுவெட்டுப் புகலு நரைமறை
நழுகும்ரோகம் நவின்றோடிப் போகுமே. 59

போகுமண்டைப் புகைச்சல் கணப்போடு
ஏகும்பித்த மெழிலாக நாற்பதும்
வாகுரோகம் வகுக்குங் கணக்காச்சல்
சாகுமாந்தை சடலம்விட் டோடுமே. 60

மிளகு தயிலம்

ஓடுமாந்தர்க் குறுதியா யுறைக்கிறேன்
நீடுமிளகு நேர்ந்த நன்மிளகாம்
ஆடுமேபல மறுபது தானெடு
கூடுந்தக்காளி குறுகச் சமனெடே. 61

எடுத்துப்பாண்ட மெழிலாக காய்ந்தபின்
தொடுத்தக்கியாழம் தோன்றச் சமனதாய்
அடுத்துமே பசும்பாலுஞ் சமன்சேரு
விடுத்தயெள் ளெண்ணெய்மேவச் சமன்கூட்டே 62

கூட்டியொன்றாய்க் குறுகவே காய்ச்சிடு
நீட்டிமண்டல நேராய் முழுகிடு
கூட்டும்ரோகங் குறிக்கும் கபரோகம்
பூட்டுமேகம் புகலப் பறக்குமே. 63

Koviloor Digital Library

கருஞ்சீரகத் தயிலம்

பறக்குமாந்தர்ப் பகருங் கருஞ்சீரகம்
சிறக்கமாகவே சேர்ந்த பலம்நூறு
திறக்கமாகவே தேர்ந்த கியாழஞ்செய்
முறக்கமாகவே முசியப்பாண்ட மிடே. 64

இட்டேதீப மெழிலாக மூட்டியே
கட்டேகியாழங் கருதவே காய்ந்தபின்
சட்டமானதோர் சார்ந்த பசும்பாலும்
வட்டமாகவே வாகாய்ச் சமன்கூட்டே. 65

கூட்டிப்பாண்டம் குலாவியே காய்ச்சிடு
நீட்டிமண்டலம் நேராய் முழுகிடில்
பூட்டுமேகம் புகலுங் கருமேகம்
வாட்டுஞ்சீதம் வரைந்தோடி நீங்குமே. 66

நீங்கு மீளைநேருங் கபமீளை
ஓங்குமேசொறி வுயர்ந்த பெருஞ்சொறி
தீங்குபித்தம் தெறித்திடு நாற்பதும்
பாங்குமேனி பதிவிட்டே யோடுமே. 67

கார்போகவரிசித் தைலம்

ஓடுமாந்தர்க் குறுதி யுரைக்கிறேன்
ஆடுங்கார்போக வரிசி நூறுபலம்
தேடுநெல்லித் தெளிந்த மாசிக்காயும்
பாடுநாலத்தில் பாங்கா யெடுத்திடே. 68

எடுத்துப்பாண்ட மெழிலா யிடித்துமே
தொடுத்துக்கியாழம் தோன்றவே காச்சிடு
அடுத்துமே பசும்பாலிற் சமன்சேரு
நடித்தயெள்ளெண்ணெய் நலமாய்ச்சமன் தூக்கே.69

Koviloor Digital Library

தூக்கித்தயிலந் துவளவே காய்ச்சிடு
தாக்கிதேவியின் தாமரைத் தாள்போற்றி
போக்கில்லாமல் புகழாய் மூழ்கிடு
வாக்குதப்பாது வறைந்தார் முனிவரே. 70

அறைந்தமாமுனி ஆயுறு வேதமாம்
நிறைந்தசூலை நெருங்குங் கபசூலை
பறைந்தவாயு பகரும் பித்தமுடன்
துறைந்த சேத்துமந் தெண்ணூறகலுமே. 71

அகலும் ரோகம் அறையுமத மூர்ச்சை
நிகலும்வாந்தி நெருங்குங் காசமுடன்
புகலும்மாலை புகைக்கண் திரையறும்
சகலமானநோய்த் தாண்டிப் பறக்குமே. 72

விஷமுஷ்டித் தைலம்

பறக்குமுஷ்டி பகரும் விஷமுஷ்டி
திறக்கமாகவே சிறந்த நூறுபலம்
முறக்கமானதோர் முசுக்கை சரிபலம்
சிறக்கமான நெய்ச்சிட்டி சமன்சேரே. 73

சேர்த்துக்கியாழம் சிறக்கப் பதமதாய்
கூர்த்துப்பாண்டங் குலாவி யிறக்கிடு
ஆர்த்துமே யிளநீரும் நிம்பச்சாறு
பார்த்துப்பதமாய்ப் பாங்காகக் கூட்டிடே. 74

கூட்டியெள்ளெண்ணெய் குலாவும் சரியெடை
நீட்டித்தீயும் நெருக்கமாய் மூட்டியே
பூட்டுமேபதம் புகலவே காய்ச்சிடு
மீட்டுமண்டலம் நுவல முழுகிடே. 75

Koviloor Digital Library

முழுகும்போது முறைக்காய்ச்ச லோடும்
வழுகுமாந்தை வகுக்குங் கணக்காய்ச்சல்
பழகுமேனி படிகம்போலே மின்னும்
அழுகும்ரோகம் அவனி விட்டோடுமே. 76

ஒடுங்கிரந்தியு முற்ற பெருஞ்சூலை
ஆடும்வெள்ளை அறையு மரையாப்பு
சாடுரோக மதனிக் கழல்வாதம்போம்
நீடும்வியாதி நெருங்கப் பறக்குமே. 77

பறக்குமென்றல்லோ பாடினார் சித்தரும்
சிறக்கமானதோர் தேர்ந்ததின் னூலாகும்
திறக்கமாந்தர்க்குத் தெளிய வுரைத்தது
பறக்கவியாதி பகர்ந்தனர் சித்தரே. 78

பொன்னாங்கண்ணித் தைலம்

சித்தர்வாக்குத் திசையிலும் பொய்யாது
சுத்தமான சுகந்தபொன் னாங்கண்ணி
துத்திமூலி சுகந்த பெருமூலி
முத்தக்காசு முயலச்சமன் தூக்கே. 79

தூக்கிப்பாண்டந் துகள விடித்துமே
நோக்கிக்கியாழம் நுவலவே காய்ச்சிடு
போக்கில்லாமல் பொருந்தும் பழரசம்
வாக்குத்தப்பாமல் வாகாகக் கூட்டிடே. 80

கூட்டுமிளநீர் குறிப்பாய் சமனதாய்
மூட்டுப்பாண்ட முசியவே கூட்டிடு
பாட்டுமெண்ணெய் பகரும் நல்லெண்ணெயாம்
ஆட்டுமேசரி யன்பாகச் சேர்த்திடே. 81

Koviloor Digital Library

சேர்த்துக்காய்ச்சி திறமா யிறக்கிடு
பார்த்துமண்டலம் பகரிரு மண்டலம்
பூர்த்தியாகப் புகழாய் முழுகிடில்
மோர்ததுமே பிணிகுணமாக நீங்குமே. 82

கீழாநெல்லித் தயிலம்

நீங்குமாந்தர் பிணியக லும்படி
ஓங்குங் கீழ்க்காயினெல்லி பதக்கெடு
தீங்கில்லாத தெளிந்த பொடுதலை
பாங்குதக்காளி பகரச் சமனெடே. 83

எடுத்துப்பாண்ட மெழிலாய்க் கலந்துமே
தொடுத்து மெள்ளெண்ணெய் தோன்றச் சமன்கூட்டு
அடுத்துமே பதமன்பாகக் காச்சிடு
எடுத்துமண்டல மெழிலாய் முழுகிடே. 84

முழுகும்போது முறையும் வாதரோகம்
நழுகும்பித்தம் நவிலும் நாற்பதுவும்
ஒழுகுங்கண்ணீரு மோங்குந் திரைமறை
பழகுமே சொறிபறக்குங் காண்பீரே. 85

பாரீரோகம் பகருஞ் சிரோபாரம்
நாரீரோகம் நவிலும் படைரோகம்
தேரீர்மாந்தை தெரிக்கு நேத்திராஞ்சனம்
சிரீர்பல்நோய் சிறக்கப் பறக்குமே. 86

ஓமத்தயிலம்

பறக்குமோமம் பகருந் தசபலம்
சிறக்குமேசலஞ் சேரவிருதூணி
திறக்கமானதோர் தேர்ந்த நற்சீரகம்
அறக்குதாரமு மவ்விடை கூட்டிடே. 87

Koviloor Digital Library

கூட்டுபாண்டங் குலாவிப் பொதிந்துமே
நீட்டுமேசலம் நேராயொரு தூணி
சூட்டுமே பசும்பாலிற் சமனுடன்
மூட்டுபாண்ட முசியவே யேற்றிடே. 88

ஏற்றித்தீப மெழிலாக மூட்டியே
தூற்றுமக்கினி துய்ய பதமதாய்
ஆற்றிக்காய்ச்சி யறைய விறக்கிடு
போற்றிமாயனைப் புகழ்ந்து பணிந்திடே. 89

பணியுமெண்ணெய் பகருமோர் மண்டலம்
துணியும்வாரந் து'ʔ-யா மிருமுறை
அணியுமேனி யடைவாய் முழுகிடில்
வணியுமே பிணிவடர்ந்த வனம்போமே. 90

போமேசன்னி புகலும் பதின்மூன்றும்
தாமேநீர் பேதிதணியுந் தணியுங்காண்
நாமேசொன்னோம் நன்றாக மாந்தர்க்கு
ஆமேசித்தரு மன்பா யுரைத்ததே. 91

ஏலக்காய் தைலம்

உரைத்தேனாயுறு வேதமா மிந்நூலு
திரைத்தேன் தன்வந்திரி தெளியவுரைத் திட்டேன்
மறைத்தபொருள்களி யாவுமிதிற் றோன்றும்
உரைத்தயேலக்கா யுற்றபலம் நூறே. 92

நூறுடனே நுவலும் லவங்கமாம்
கூறுமேலக்காய் கொள்ளு மதிற்பாதி
நீறுபோல நெருங்க விடித்துமே
ஆறுமே படிசலமு மெடுத்திடே. 93

Koviloor Digital Library

எடுத்துப்பாண்ட மெழிலாய்க் கலந்துமே
தொடுத்துமே பதந்தோன்றவே காச்சிடு
அடுத்துச் சந்தனமதிற் பலமூன்றிடு
கொடுத்துதீபங் குலாவி யிறக்கிடே. 94

இறக்கியீச னெழிற்பதம் போற்றியே
சிறக்கமண்டலஞ் சீராய் முழுகிடில்
பறக்குஞ்சன்னிப் பகரப் பதின்மூன்றும்
துறக்கமாகவே துலைந்தோடிப் போமே. 95

போகும்பித்தம் பொருந்துஞ் சிலேத்துமம்
ஏகும்வாத மெழிலான ரோகமும்
நோகுமேனி நொறுங்கு மதிசாரம்
வாகுதன்வந்திரி வகுத்தது வுண்மையே. 96

ஆவாரை பஞ்சாங்கத் தயிலம்

உண்மையாக வுரைக்கிறேன் மாந்தர்க்கு
தண்மையான தனிப்பஞ்ச மாவாரை
வெண்மையான விரும்பும் பசும்பாலிற்
திண்மையாகத் தெளிவுறக் காச்சிடே.97

காச்சியெண்ணெய் கருதச் சரிசமன்
தீச்சிடாமல் தெளியப் பதம்வடி
மூச்சிடாமல் முழுகவோர் மண்டலம்
போச்சுமே பிணிபுகல அகலுமே. 98

அகலுமேக மறையு மந்தாரம்போம்
புகளுமீளை பொரும லிரைப்புடன்
நிகலும்வெட்டை நெடிய கபரோகம்
சகலநோய்களும் தாண்டிப் பறக்குமே. 99

Koviloor Digital Library

துவரங்குச்சித் தயிலம்

பறக்குமூலம் பகருந் துவரையாம்
சிறக்ககக்குடன் சேர்ந்த பறங்கியாம்
அறக்குச் சந்தனமகிற் கட்டைநன்னாரி
திறக்கமாகவே சேரச்சமன் கூட்டே. 100

கூட்டிப்பாண்டங் குமுற விடித்துமே
கூட்டுமே சலங்குறிக்க விருதூணி
கூட்மே பதங்குலாவி யிறக்கிடு
கூட்டுமெண்ணெய் குணமாய் முழுகிடே. 101

முழுகும்போது முறைக்காச்சல் தானறும்
முழுகும்போது முசியாப் பித்தமறும்
முழுகும்போது முறைசன்னி தானறும்
முழுகும்போது முழுமே னியிறுகுமே. 102

வேலம்பட்டைத் தயிலம்

இறுகுமேனி பிணங்கும் பிணியற
குறுகும் வேலமாம்பட்டை யறுபலம்
அறுகன்வேரு மறையச் சமனெடை
சிறுகவேசலஞ் சிறக்கப் படிகூட்டே. 103

கூட்டிப்பாண்டங் குலாவி யுழக்கதாய்
நீட்டுமெள்ளெண்ணெய் நேராய்ச் சமனெடை
மூட்டிக்காய்ந்து முதிர விறக்கிடு
சூட்டிமண்டலஞ் சிறக்க முழுகிடே. 104

சிறக்குமேபிணி சேரா தொடுங்கிடும்
பறக்குஞ்சன்னி பகரப்பதின் மூன்றும்
உறக்கமான வுயர்ந்த மேகப்படை
சிறக்கமாகத் தெளிய வறைந்ததே. 105

Koviloor Digital Library

நொச்சிலித் தயிலம்

அறைந்தமாமுனி யாயுறு வேதமாம்
நிறைந்தமூலி நெருங்கு மிக்காவியம்
பறைந்தநொச்சிலி பகருஞ் சமூலமாம்
முறைந்த பாண்ட முசிறப்பொதிந்திடே. 106

பொதிந்துமே சலம்புகல விருநாழி
வதிந்தகியாழம் வாகா யிறக்கிடு
சதிந்த நிம்பத்தின் சாறுபடியரை
முதிர்ந்தவிளநீர் முறையாய்ச் சரிக்கூட்டே. 107

கூட்டுமெண்ணெய் குலாவுஞ் சரியெடை
முட்டுபாண்ட முதிரவே காச்சிடு
நீட்டுமண்டல நேராய் முழுகிடு
கூட்டுசன்னி குறிப்பாய்ப் பறக்குமே. 108

குறிக்குஞ்சன்னி குணமாமுக சன்னி
தெறிக்குநேத்திரந் தேர்ந்த புழுவெட்டு
முறிக்கும் நரம்பு முனையாம் பிடரியில்
தறிக்குமேபிணி தனியா தொடுங்குமே. 109

மலை வேம்புத் தயிலம்

ஒடுங்குமாந்தர்க் குறுதி பிணியற
நடுங்குமேசுரம் நவிலவே யோடிட
மடுங்குவேம்பு மலைவேம்பு சமூலமாம்
நடுங்கிடா சலந்தா னிருதூணியே. 110

தூணிநீரில் துணிவாய்க் கியாழஞ்செய்
காணீராடா தோடைக் கருதுஞ்சமன்
பூணிரெண்ணை பகன்றிட வவ்விடை
தோணெக்காச்சித் துடுப்பா யிறக்கிடே. 111

Koviloor Digital Library

துடுக்குமண்டலந் தோன்ற வொருமுறை
நடிக்கத்தானஞ்செய் நவிலும் பிணியறும்
முடிக்குமெண்ணெய் முறைதப்பா தொருநாளும்
படிக்கச்சன்னி பதிமூன்றும் போகுமே. 112

சன்னி பதின்மூன்றுக்கும் மேற்பூசுந் தயிலம்

போகசன்னி புகழாக மாந்தர்க்கு
ஆகவெள் ளெருக்கன் சமூலமெடு
பாகச்சாம்பிராணி பதமாய் பொடித்திடு
வேகக்கியாழம் விரும்பியே காச்சிடே. 113

காச்சும் வேப்பெண்ணை கருதுஞ்சரிசமன்
தீச்சிடாமல் சிறக்கப் பதமாய்
தேச்சுமேனி சிறக்கவே பூசிடில்
போச்சுசன்னி புகல்பதின் மூன்றுமே. 114

வாதுமைக்கொட்டைத் தயிலம்

புகலுந்தயிலம் புகழாக மாந்தர்க்கு
நிகலும்வாதுமைக் கொட்டை யறுபலம்
அகலுமாமணக் கெண்ணெய்ச் சரிசமன்
புகலும்ரண்டையும் பொருந்த வரைத்திடே. 115

அறைந்துமே குழித்தயில மிறக்கிடு
நிறைத்தயிலம் நேராய் முழுகிடில்
மறைத்தகண் புகைமாதர் பிணியறும்
முறைதப்பாமல் முழுகியே கண்டிடே. 116

கண்டமாலை கதறி யொடுங்கிடும்
கண்டமேற்படக் கழறும் வியாதிபோம்
கண்டகாந்தல் கதறி யலறிடும்
கண்ட சகலநோய் கடுகப்பறக்குமே. 117

Koviloor Digital Library

பறக்குமென்று பகர்ந்தே னாயுர்வேதம்
பறக்குமென்று பகர்ந்தேனே யிம்முறை
பறக்குமென்று பகர்ந்தேனே சித்தர்க்கு
பறக்குமென்று பகர்ந்தேனே மாந்தர்க்கே. 118

சித்தாமுட்டித் தயிலம்

மாந்தர்க்காக மறைந்தபொரு ளெல்லாம்
சாந்தமாகத் தனியா யுரைக்கிறேன்
தேர்ந்தமுட்டி சிறந்த சித்தாமுட்டி
போர்ந்தவே பலம்புகல் நூறுதூக்கிடே. 119

தூக்கிப்பாண்டத்திற் றுய்ய நறுக்கிடு
தாக்குமேசலந் தண்ணீ ரறுநாழி
போக்கில்லாமற் பொருந்தக் கியாழஞ்செய்
வாக்குதப்பாமல் வறையும் பழச்சாறே. 120

சாற்றிலெண்ணெய் தனியாஞ் சரியெடை
ஊற்றிப்பாண்ட முறையவே காச்சிடு
போற்றியம்பாள் புகழ்பாதம் போற்றியே
தூற்றிதூபந் துவளக் கொடுத்திடே. 121

கொடுத்துமண்டலங் குறிப்பாய் முழுகிடில்
இடித்துமே பித்தமகலுஞ் சிரோபாரம்
தடுத்தகாந்தலுங் கண்ணீ ரருகிலும்
தொடுத்தரோகமுந் தொடர்ந்தோடிப் போகுமே.122

லவங்கப்பட்டைத் தயிலம்

போகுமாந்தம் பொறும லீளையறும்
ஆகும்பட்டை யருஞ்சன்ன லவங்கமாம்
பாகுசீரம் பகரும் நற்சீரகம்
ஏகுமஞ்ச ளெழிலாம் பன்னீர்பூவே. 123

Koviloor Digital Library

பூவுங்கூட்டிப் புகல விடித்துமே
மேவுப்பாண்டத்தில் விரும்பி காச்சிடு
ஆவுமென்ற பசும்பால் சரியெடை
பாவுமெண்ணெய் பதமாகக் கூட்டிடே. 124

கூட்டுமெண்ணெய் குலாவியே காச்சிடு
சூட்டுமண்டலஞ் சுகமாய் முழுகிடு
வாட்டுபித்தம் வகையா யிருமல்போம்
பாட்டு தன்வந்திரி பாடினதுண்மையே. 125

நன்னாரித் தயிலம்

உண்மையாக வுரைக்கிறேன் மாந்தர்க்கு
வண்மையாக வகுக்கு நன்னாரியை
தண்மையாகத் தனிப்பலம் நூறெடு
திண்டையாகத் திறமா யெடுத்திடே. 126

எடுத்துப்பாண்ட மெழிலாய்ப் பொதிந்திடு
தொடுத்தமதுரந் தோன்று லவங்கமாம்
வடித்தபூஞ்சாந்து வகுக்குங் கிளியூறல்
நடித்த பச்சிலை கிச்சிலிதூக்கிடே. 127

தூக்கியகஸ்தூரி துய்ய தாளிசமும்
தாக்குமிருவேலி தனியக் கிராகாரம்
போக்கில்லாமற் பொருந்து முத்தக்காசு
வாக்குசந்தனம் வளமாகத் தூக்கிடே. 128

தூக்கியே சரக்கொன்று வரைப்பலம்
தாக்கியே பசும்பாலி லரைத்திடு
போக்கில்லாமற் பொருந்துங் கியாழத்தில்
தேக்குமெண்ணெய் திறமாய்ச் சரிகூட்டிடே. 129

Koviloor Digital Library

கூட்டுமுலி குறிக்கும் வல்லாரியாம்
வாட்டுங்கையான் வகையாப் பொன்னாங்கண்ணி
ஊட்டுமூலி யுழக்குச் சமன்சேரு
பாட்டுமேபதம் பாங்காய் வடித்திடே. 130

வடித்துயெண்ணெய் வளமாய் முழுகிடில்
நடித்தசோகை நவிலுங் காமாலைபோய்
வெடித்தமேனி விரும்பும் பொன்னிறமாம்
துடித்தபித்தமுந் தோன்று மேகம்போமே. 131

போமேமேகம் பொருந்தும் பிரமியம்
ஆமேகிரந்தி யறையும் நீரிழிவு
சாமேமருந்தீடு தணிய முறிந்திடும்
நாமேசொன்னோம் நலமான மாந்தர்க்கே. 132

மாம்பட்டைத் தயிலம்

மாந்தர்க்காகவே மாம்பட்டைத் தயிலமொன்
றேந்தப்பட்டை யிறுநூற் பலமெடு
சார்ந்தநிலப்பனை சாற்றும் பலமைந்து
போர்ந்தமிட்டான் புகலச் சரிகூட்டே. 133

கூட்டிப்பாண்டங் குலாவி யிடித்துமே
நீட்டுங்கியாழ நிறையாகக் காச்சிடு
பாட்டுமெண்ணெய் பகருஞ் சரியெடை
மூட்டிக்காச்சி முதிர வடித்திடே. 134

வடித்தயெண்ணெய் வளமாக மூழ்கிடு
நடித்தமேகம் நவிலும் பிரமியம்
கடித்தசில்விடங் காணா தொடுங்கிடும்
முடித்ததயில முறையும் பொய்யாதிதே. 135

Koviloor Digital Library

கையாந்தகரைத் தயிலம்

பொய்யாதையா புகலுங் குருமொழி
அய்யாதன்வந்திரி யறிய வுரைக்கிறேன்
கையாந்தகரை கருதுந் தயிலமாம்
மெய்யாமாந்தர்க்கு விரும்பி யளித்ததே. 136

விரும்புமூலி விளங்குந் தசபலம்
கரும்புந்தகரை காட்டுஞ் சரிபலம்
பொருந்துமிளகு பூண் வொருபலம்
திருந்துமே பசும்பாலிற் சமன்சேரே. 137

சோத்துக்கியாழந் திறமாய் வடித்திடு
பார்த்துமெண்ணெய் பகருமவ் விடையாம்
தீர்த்துமேபதந் தெளிவாகக் காய்ச்சிடு
ஆர்த்து மாயனடி யிணைபோற்றிடே. 138

போற்றிமண்டலம் புகழாய் முழுகிடு
தூற்றுமேகந் தொடர்ந்த பித்தமாறும்
ஆற்றுங் கோபமழலை தணலறும்
சாற்றுமித் தயிலஞ் சரிமுறைதப்பாதே. 139

மருதம்பட்டைத் தயிலம்

தப்பாதையா தரணியில் மாந்தர்க்கு
ஒப்பாமருதம் பட்டைத் தயிலங்கேள்
செப்பாமூலி சிறந்த பொடுதலை
அப்பா மூன்றுமறையப் பாண்டமிடே. 140

பாண்டந்தன்னிற் பதக்கு சலமிடு
பூண்டகியாழம் பொருந்தவே செய்திடு
ஆண்டுமெண்ணை யறியச் சமனதாம்
தீண்டுமேபதந் தெளியவே காச்சிடே. 141

Koviloor Digital Library

காச்சும்வாலை கருதும் மனோன்மணி
ஆச்சிபாத மடிவணங்கித் தொழு
மூச்சிடாமல் முறையுடன் றான்முழு
போச்சுமேகம் புகன்றோடிப் போகுமே. 142

போகும்பாண்டு புகலுங் காமாலைபோம்
ஏகும்ரோம மெழும்பும் பெருஞ்சிரங்
காகுமேசொறி கருமேகந் தானறும்
பாகுதன்வந்திரி பாடின துண்மையே. 143

கொழிஞ்சிப்பட்டைத் தயிலம்

உண்மையாக வுரைக்கும் பரஞ்சோதி
வெண்மையானதோர் வெண் கொழுஞ்சிரசம்
தண்மையான தனிநெல்லிக் காய்ரசம்
திண்மையான தெளிந்த கியாழமே. 144

மேவுமெண்ணெய் விளங்குஞ் சரிசமன்
தாவுமேபதந் தவறாமற் காச்சிடு
பாவுமண்டலம் பண்பாய் முழுகிடில்
ஏவும்பித்த மிறங்கியே யோடுமே. 145

ஓடுஞ்சூலை யொடுங்கு மேகச்சூலை
நீடுங்கிரந்தி நெருங்குஞ் சிரங்குபோம்
கூடும்ரோகமுங் கூண்டோ டொடுங்கிடும்
பாடுதன்வந்திரி பாட்டு பொய்யாதிதே. 146

அழிஞ்சில் தைலம்

பொய்யாதையா குருவின் பகர்மொழி
அய்யா அழிஞ்சில் தயில முறைக்கிறேன்
மெய்யாச மூலம் விரும்பும் நூறுபலம்
செய்யாநொச்சிச் சிறக்க சமன்கூட்டே. 147

Koviloor Digital Library

கூட்டுபாண்டங் குமுறப் பொதிந்துமே
நீட்டுக்கியாழம் நேராய்க் காய்ந்துமே
பூட்டுமெள்ளெண்ணெய் புகலவே காய்ந்தபின்
சூட்டுந்தயிலம் சுறுக்காய் முழுகிடே. 148

முழுகும்போது முசியாப் பெரும்பாடு
வழுகுமிசிவு வாங்காத் திமிர்நோயும்
தழுகும்பாண்டுவுந் தரியா தொடுங்கிடும்
தொழுகுமாந்தர்க்குத் தோன்ற வறைந்ததே.149

பஞ்சமூலித் தயிலம்

அறையும் பஞ்சமூலித்தயில முரைப்பேன்பார்
வரையுமூலி வகுக்கும் பொடுதலை
நிறையுந்தக்காளி தேர்ந்த முசுக்கையும்
திறையுமயிற்பீலி சேரவே தூக்கிடே. 150

தூக்குங்கொத்தான் துடியாய்ச் சமனெடு
தாக்குமூலி தணியக் கியாழஞ்செய்
நோக்குமெண்ணெய் நொறுங்குஞ் சமனெடை
வாக்குதப்பாமல் வாகாய் காச்சிடே. 151

காய்ச்சிமாயன் கருதும் பதாம்புயம்
மூய்ச்சிடாமல் முழுகவோர் மண்டலம்
போய்ச்சுவியாதி பொரும லீளையறும்
பாச்சுரோகம் பகரும் ரோகம்போமே. 152

போமேசூலை பொருந்தும் வாதசூலை
சாமேபிரமியம் சாரா தொருநாளும்
தாமேபித்தமும் தாண்டிப் பறந்திடும்
நாமேசொன்னோம் நவிலு முனிவரே. 153

Koviloor Digital Library

பஞ்சபூரணத் தயிலம்

முனிவர்வாக்கு முறைபொய்யா தொருநாளும்
கனிவுடன் மதுரம் லவங்கப்பட்டை
தொனியுநன்னாரி தோன்றுங் கருஞ்சீரம்
தனியமான தகுந்த முத்தக்காசே. 154

காசுடன்சமன் கருத யெடுத்திடு
மாசில்லாத மகிழச் சலம்படி
ஊசிநீரு முறையுஞ் சமனதாய்
வாசமெண்ணெய் வகுப்பாய்ச் சமன்கூட்டே. 155

கூட்டிப்பாண்டங் குமுற வடித்துமே
பூட்டுமண்டலம் புகழாய் முழுகிடில்
காடுமேகங் கதறியே யோடிடும்
கோட்டுவாயுங் குலைந்து பறக்குமே. 156

பறக்குஞ்சூலை பகருங் கசரோகம்
திறக்கும்பிரமியஞ் சேரா தொடுங்கிடும்
நிறக்கும்வியாதி நெருங்கு நேந்திராஞ்சனம்
சிறக்கப்போமெனச் செப்பினர் முனிவரே. 157

பித்தம் தீரத் தயிலம்

செப்பும்பித்தந் திறமாக நீங்கிட
ஒப்புஞ்சீரக மோங்கு மதுரமாம்
தப்பில்லாத தனி லவங்கமுடன்
மெப்புங்குடோரி விரும்புங் கொத்தமல்லி. 158

மல்லிசந்த மணக்கு மிருவேலி
கொல்லிமூலி குறிக்கு மகிற்கட்டை
மல்லிகோஷ்டம் வகுக்குங் கருவரவாம்
பல்லிமூலி பகருஞ் சமன்தூக்கே. 159

Koviloor Digital Library

தூக்கிச்செங்கழுநீர் கொத்த மல்லியாம்
தாக்கிப்பாண்டடந் தணியக் கியாழஞ்செய்
போக்கில்லாத பொருந்தும் பசும்பாலாம்
வாக்குத் தப்பாமல் வழங்குமிளநீரே. 160

நீராம்நிம்பத்தின் பழச்சார் சரியெடை
சாரமூலித் தனியச் சரியெடை
கூராமெண்ணெய் குறித்திடு மவ்விடை
நேராய்க்காய்ச்சி நெகிழ வெடுத்திடே. 161

எடுத்துவாணி யெழில்பதம் போற்றியே
தொடுத்து மண்டலந் தோன்றமுழுகிடில்
நடித்தரோகம் நவிலுங் க்ஷயரோகம்
துடித்தயிருமல் அகன்றோடிப் போகுமே. 162

சிலேத்துமந் தொண்ணூற்றாறுக்குத் தைலம்

போகுஞ்சேத்துமந் தொண்ணூற் றாறுமற
ஏகுஞ்சந்த மெழிலான நன்னாரி
ஆகுங்கோஷ்ட மறையு மதுரமாம்
வாகுபற்படம் வாகாய்ச் சமன்சேரே. 163

சேர்த்துக்கார்போகஞ் சிறந்த வாலுழுவை
பார்த்துப்பூண்டு பகருங் கருஞ்சீரம்
ஆர்த்துமிளகு அரிய சுக்குடனே
கோர்த்து விளங்கங் குலாவுமுந்திரியே. 164

ஏகும்பட்டை யெழிலான சங்கம்வேர்
ஆகுஞ்சீர மறையுஞ் சல்லிவேர்
பாகுஞ்சரக்கு பகர்ந்த சரியெடை
வாகுபாண்டம் வகையா யிடித்திடே. 165

Koviloor Digital Library

இடித்துக்கியாழ மெழிலா யிறக்கிடு
அடுத்துமே பசும்பாலிற் சமன்சேரு
தொடுத்து மெள்ளெண்ணெய் தோன்றிடவவ்விடை
சடுத்தமாகத் தனிப்பதங் காச்சிடே. 166

பதமாமெண்ணெய் பகருமோர் மண்டலம்
நிதமாம்வியாதி நெருங்க முழுகிடு
விதமாம்ரோகம் விரும்புஞ் சயரோகம்
மதமாமீளை யொடுங்கிடுஞ் சன்னியே. 167

சன்னிநேத்திரஞ் சாரும் பிடரிநோய்
வன்னிபித்தம் வகுக்குஞ் சயகாசம்
பன்னுரோகம் பகரும் பெருஞ்சூலை
சென்னிநீர்ப்பாய்ச்சல் சேரா தடங்குமே. 168

அடங்குரோக மறையும் பெருரோகம்
முடங்கும்வாயு முயன்ற பிடிப்பறும்
தொடங்குநீர்ப்பாய்ச்சல் தொடரா தடங்கிடும்
அடங்குமாந்தர்க் கறிய வுரைத்ததே. 169

சேர்கை காமாலைக்குத் தயிலம்

உரைக்குஞ்சுக்கு முயர்ந்த மிளகுடன்
திரைக்குமோமந் தெளிந்த சீரகமும்
உரைக்குஞ் சாதிக்கா யோங்குரோகணியும்
நிறைக்குந்தேக்கு நிறைந்த வரத்தையே. 170

அரத்தையிஞ்சி யறையுங் கடுக்காயும்
கரத்தையேலங் கழறும் கிராம்புடன்
குறைத்திடாமல் குறிக்குஞ் சமனதாய்
நிறைத்துமேபலம் நெகிழவே தூக்கிடே. 171

Koviloor Digital Library

நூக்கியேபசும் பாலி லரைத்திடு
தாக்குமெண்ணெய் தனியாய்க் கலந்துமே
போக்கில்லாமற் பொருந்தவே காச்சிடு
நோக்குமனோன்மணித் தாயைப் பணிந்திடே.172

பணிந்துபோற்றிப் பகருந் தயிலத்தை
துணிந்துமண்டலந் தோன்ற முழுகிடில்
அணிந்தமேனி யறையுங் காமாலைபோம்
பணிந்தவாய்வு பறந்தோடிப் போகுமே. 173

போகுங்குன்மம் பொருந்துநீர்ச் செரிப்பு
ஆகுமக்கினி மந்தம் நெஞ்செரிவு
வேகுமேனி வினை பறந்தோடிடும்
வாகுதன்வந்திரி வகுத்த முறைபாடே. 174

பித்தவாந்தி கண்ணோய்தீரத் தைலம்

பாடும்வாந்தி பகருங் கண்ணோயற
நீடுமாந்தர்க்கு நெருங்கும் பிணியற
கூடும்பொன்னாங் குறிக்குஞ் சிறுகீரை
ஆடுஞ்சண்பக மரிய சீரகமே. 175

சீரம்பூநாகஞ் சிறந்த மதுரமாம்
காரமாங் கருஞ்சீரம் நற்கோஷ்டமாம்
சாரமாஞ்சீந்தில் சாற்றுஞ் சண்பகமாம்
கோரநிம்பங் குலாவும் பசும்பாலே. 176

பாலுஞ்சரக்கு பகருமொரு பலம்
மேலுமவ்விடை மேவுஞ் சரியெடை
நாலுயெள்ணெண்ணெய் நவிலப் பதமதாய்
சாலுபாண்டந் தனிப்பத மிறக்கிடே. 177

Koviloor Digital Library

இறக்கியப்பா லெழில்பதம் போற்றியே
சிறக்கமண்டலஞ் சேர முழுகிடில்
முறக்கமான வியாதி முடியறும்
பறக்குங்கண்ணோய் பகருந் தயிலமே. 178

பகரும்வாந்தி பகர்பித்தம் நாற்பதும்
நுகரும்வெட்டை நொறுங்கு மயக்கமும்
நகருஞ்சேத்துமந் தாண்டிப் பறந்திடும்
முகருஞ்சோகை மொழியவே நீங்குமே. 179

கண்ணோய்க்குத் தயிலம்

நீங்குமதுர நெருகுஞ் சண்பகமாம்
ஓங்குசீர முயர்ந்த வாலுழுவை
வாங்குகார்போக வரிசி தேவதாரம்
ஆங்குசந்தன மகிற்கட்டை சேர்த்திடே. 180

சேர்த்துவேலி சிறக்கும் விலாமிச்சு
பார்த்துவறுகன் பகரும் மஞ்சள்
கோர்த்துநொச்சி குலாவுங் கருநொச்சி
ஆர்த்துசெங்கத் தாரி சமனெடே. 181

எடுத்துமேபசும் பாலி லரைத்திடு
தொடுத்துமெண்ணெய் துவளக் கலக்கியே
அடுத்துமண்டல மன்பாய் முழுகிடில்
விடுத்தரணத்தின் வியாதி யகலுமே. 182

அகலுங்கண்ணோ யறையுந் தொண்ணூற்றாறும்
பகலுஞ்சூரியன் பனிபோ லகன்றிடும்
நிகலுஞ்சூலை நெருங்கும் பீனிசம்போம்
ககலுந்தும்மல் கருதுங் கபாலமே. 183

Koviloor Digital Library

மேவுநாசிகா பீட ரோகமறும்
காவுதேசிகங் காதினிற் சீழறும்
நாவுதந்தம் நவிலு மரோகமறும்
சாவுஞ்சூலை சனிகுஷ்ட மேகுமே. 184

சொறிசிரங்குத் தயிலம்

ஏகுமாந்தர்க் கெழிலாஞ் சொறிசிரங்
காகுநாற்றங் கதறியே யோடிட
ஆகுஞ்சுக்கு வரிய ரோகணியும்
தேகுங்கண்டங் கத்திரியுந் தூக்கிடே. 185

தூக்கியேமருந் துடியாம் பெருமருந்
தாக்கிக்கூந்தல் தனியிரு வேலியாம்
போக்கில்லாமற் பொருந்து மிளநீரால்
வாக்குதப்பாமல் வாகா யரைத்திடே. 186

அரைத்துமேபசும் பாலிற் சமனெடை
திரைத்தமுக்கண்ணின் பாலுஞ் சரியெடை
உரைத்தயெண்ணெய் யோங்கு மிரண்டெடை
கரைத்துமேபாண்டங் கழறியே யூற்றிடே. 187

ஊற்றிப்பாண்டத்தி லோங்குங் காடாக்கினி
ஆற்றியே தயிலத்தை யிறக்கிமுன்
போற்றியீசனார் பொற்பதத் தாள்பணிந்
தேற்றி தீபதூபமுங் கொடுத்திடே. 188

கொடுத்துமண்டலங் குமுற முழுகிடில்
அடுத்துமேக சிரங்கு முதலறும்
தொடுத்துமேசொறி தோன்றா தொடுங்கிடும்
லடுத்ததன்வந்திரி வாக்கு பொய்யாதிதே. 189

Koviloor Digital Library

பொய்யாதையா புகலுந் தன்வந்திரி
அய்யாபத்திய மன்பா யுரைக்கிறேன்
மெய்யாய்வெள்ளாட் டிறைச்சி யுப்புக்கண்டம்
துய்யாநெய்யுந் துவளவே கூட்டிடே. 190

கூட்டுமேபசும் பச்சைப் பயறுடன்
நீட்டுமுள்ளங்கி நேர்ந்த பசும்பாலும்
ஆட்டுமூளை யறையும் புறாமுதல்
கூட்டுமாந்தர்க்கு குலாவ வறைந்ததே. 191

மேகம் 21க்கு தயிலம்

அறையுமேக மலறியே யோடுதற்
குறையும்பத்திரி கூறுங் கிராம்புடன்
நிறையுஞ்சாதிக்காய் நேர்ந்த பறங்கியு
மறையும்வேலி மதிப்பாகத் தூக்கிடே. 192

தூக்கிகோஷ்டமுந் துய்ய முத்தமுடன்
தாக்குந்தாளிசந் தனியா மிலாமிச்சு
தேக்குமாஞ்சில் திறமான சீந்திலும்
வாக்குதப்பாமல் வகையாய்ச் சமனெடே. 193

எடுத்துமே பசும்பாலி லரைத்திடு
தொடுத்துமெள் ளெண்ணெய் தோன்றவேநாலெடை
விடுத்தசெவ்விள நீரதிற் பாதிடை
அடுத்தநிம்பத்தின் சாற்றில்கால் கூட்டிடே. 194

கூட்டிப்பாண்டங் குமுறவே யூற்றிடு
நீட்டித்தீபாக் கினியா யெரித்திடு
பூட்டியேபதம் புகலவே காய்ச்சிடு
சூட்டிமாயன் றுகள்பதம் போற்றிடே. 195

Koviloor Digital Library

போற்றியெண்ணெய் புகலுமோர் மண்டலம்
ஆற்றிவார மறையு மிருமுறை
சாற்றுஞ்சித்தர் தனிவாக்கு பொய்யாமல்
போற்றியிருமுறை பொருந்த முழுகிடே. 196

பொருந்தயெண்ணெய்ப் புகழாய் வியாதிபோம்
குருந்தும்பிரமியங் குறுகி யடந்திடும்
திருந்துரோகமுந் தீராப் பிணியறும்
சொரிந்துமேபடை சுருக்காய்ப் பறக்குமே. 197

பறக்குமென்றல்லோ பாடினா ரென்குரு
பறக்குமென்றல்லோ பாடினா ரென்முனி
பறக்குமென்றல்லோ பாடினார் சித்தரும்
பறக்குமென்றல்லோ பாடினார் மாந்தர்க்கே.198

சகல வாய்வுக்குந் தயிலம்

மாந்தர்க்காக வறைகிறேன் தயிலங்கேள்
ஆர்ந்தசீ ரமரிய திப்பிலியும்
போர்ந்தசுக்கு பொருந்து நற்சீரகம்
தேர்ந்தமிளகு சிறந்த திப்பிலியே. 199

சிறந்தவிளங்கஞ் சிறிய தான்றிக்காயும்
வறந்தநெல்லி வகுக்கு மாசிக்காயும்
பறந்தரோசன் பகர் கடுக்காயுடன்
துறந்தநன்னாரி தோன்றச் சமன்கூட்டே. 200

கூட்டும்நொச்சிக் கியாழத்திற் றானரை
பாட்டுமே பசும்பாலிற் சமனெடு
ஆட்டும் வேப்பெண்ணெ யன்பாயதிற்பாதி
கூட்டுமெள்ளெண்ணெய் குறிப்பாய் நாலுகூட்டே201

Koviloor Digital Library

கூட்டிப்பாண்டங் குமுறவே காச்சிடு
நீட்டி மண்டலம் நேராய் முழுகிடு
வாட்டுகுன்மம் வரைகடந் தோடிடும்
மாட்டும்வாத மறைந்தோடிப் போகுமே. 202

போகும்வாயுவு பொல்லாக் கழல்வாதம்
ஏகும்வாயு விறங்கும் நரிவாதம்
பாகுமவர்தம் பகரும் பட்சவாதம்
நோகுமண்டத்தின் வாயு வகலுமே. 203

சூரிவித்துத் தயிலம்

அகலுமாந்தர்க் கறையுந் தயிலங்கேள்
நிகலுமே சூரிவித்து தசபலம்
புகலுமேபாண்டம் பொதிந்து விடித்துமே
தகலுமே தனிவிறகா லெரித்திடே. 204

எரித்துமே யதிலெண்ணை யொருநாழி
பொரித்துமே கற்கம் புகலுமுறைகேளு
அரித்துமே யாறுமாதக் காடிநாழி
கரித்துமேசுக்கு கடுகவோர் பலமிடே. 205

இட்டேயடுப்பி லிதமெழு கானபின்
தொட்டேயோர் மண்டலந் தோன்றமுழுகிடில்
விட்டேயகன்றிடும் வீறான கிரந்தியும்
பட்டேயோடி டும்பாழான குட்டமே. 206

குட்டமுடன் சூலைகுன்மம் பதினெட்டும்
திட்டமுடன் கிராணிதிறமான வுள்மூலம்
கெட்டசூடு முதல்கெக்கரித் தோடிடும்
சட்டமாகவே சாற்றின துண்மையே. 207

Koviloor Digital Library

உண்மையான மலக்கட் டகன்றிடும்
தண்மையான சகல வியாதியும்
கண்மையாகவே கலங்கிப் பறந்திடும்
வண்மையாக வகுத்தார் முனிவரே. 208

கீழ்க்காய்நெல்லித் தயிலம்

முனிவர்வகுத்த முறையான தயிலங்கேள்
கனிவாய்க்கீழ்காய் நெல்லிக் கருதுசமனதாய்
நனியா திடித்துநல் லாற்றுநீர்விட்டு
முனியாய்க் கியாழமுயற்சி யாய்ச்செய்திடே.209

செய்துமே யெட்டொன்றாய்ச் சிறக்கவேகாச்சிடு
வைதுமே யெள்ளெண்ணெய் வாகாய்ப்படிரண்டு
பெய்துமேசர்க்கரை புகழாய்ப் பலமைந்து
நைதுமெண்ணெய் நலமாகக் காச்சிடே. 210

தீரும்வியாதி

காச்சுமண்டலங் கருத முழுகிடில்
போச்சுபித்தம் புகலும் வாதமறும்
நீச்சுவாந்தி நெடிய கபமறும்
ஆச்சுதைல மறைந்தார் முனிவரே. 211

காசரோகத் தயிலம்

முனிவராயுறு வேத முறையிது
கனிவுடன் காசரோகத் தயிலங்கேள்
வனியும்நன்னாரி வரையுங் கோடாசிலை
தனியன் மூலமுஞ் சாற்றுமறுகெடே. 212

Koviloor Digital Library

எடுத்துநன்னாரி யெழிலான சுக்குடன்
தொடுத்த பூஞ்சாந்து தோன்றுங்கிளியூறல்
அடுத்தகொம் பறக்கான செஞ்சந்தனம்
கொடுத்துப்பாண்டங் குமுறப் பொதிந்திடே.213

பொதிந்துமேசலம் போற்று மறுநாழி
வதிந்துங் கியாழம்வளமாகக் காச்சியே
கதிந்துமண்டலங் கனிப்பாய் முழுகிடில்
கொதிந்தமேனி கொதிப்பு மடங்குமே. 214

அடங்கும்ரோக மறையுங் காசரோகந்
தொடங்குமேகந் தொல்லைப் பிரமேகம்
நடுங்குங்காச்சல் நவிலும் பித்தரோகம்
ஒடுங்கு(மே)மேனி யுடல் தளிர்காணுமே. 215

காணும்வெள்ளை கருதுங் கயரோகம்
தோணும்வாந்தி தொடரும் பித்தரத்தம்
ஊணுமூல வியாதிப் பிணியறும்
சாணுமேனிச் சடப்பிணி போகுமே. 216

போகும்பத்தியம் புகலுங் காடைபுறா
ஆகுமிறைச்சி யரியவுப்புக் கண்டம்
வாகுங்கச்சல் வகுக்கு முருங்கையும்
பாகுஞ்சீதளப் பண்ட மகற்றிடே. 217

கிராணிக்குத் தயிலம்

அகற்றுங்கிராணிக் கறையுந் தயிலங்கேள்
புகற்றும்பத்திரி போற்றுஞ் சாதிக்காயும்
நிகற்றும்லவங்கம் நேருங் கசகசா
சகற்றும்விடையஞ் சாற்றுஞ் சமன்தூக்கே. 218

Koviloor Digital Library

தூக்கிப்பாண்டத்திற் றுய்ய நொறுக்கிடு
தாக்கியேசலந் தண்ணீ ரறுபடி
போக்கில்லாமற் பொருந்தக் கியாழஞ்செய்
வாக்குத் தப்பாமல் வாலுமுவையெடே. 219

எடுத்துக்கியாழ மெழிலா யரைத்துமே
தொடுத்தவாமணக் கெண்ணெ யொருநாழி
விடுத்தவெள்ளெண்ணெய் மேவு மிருநாழி
அடுத்தபண்டத்தி லன்பாகக் காச்சிடே. 220

காச்சியம்பாள் கருது மனோன்மணி
ஆச்சிபாத மடிவணங்கித் தொழு
மூச்சிடாமல் முழுகுமோர் மண்டலம்
வீச்சுங்கிராணி வரைந்தோடிப் போகுமே. 221

போகுங்கிராணி புகலு மதிசாரம்
ஏகும்பாண்டு மெழும்பு நீராம்பலும்
வாகுபித்தம் வரையுங் காடுறங்கும்
போகமாமுனி புகன்றனர் சித்தரே. 222

சித்தர்வாக்குத் திசையிலும் பொய்யாது
பத்தர்மாந்தர்க்குப் பகரு மொருமுறை
சித்தமிரங்கித் தெளிய வுரைத்திட்டேன்
நித்தஞானி நெகிழ வறிந்திடீர் 223

திமிர் படைக்குத் தயிலம்

அறிந்தபோது அறையு மொருபாகம்
செறிந்ததாமரை சேரும் வெண்துளசி
முறிந்தவேம்பு முயலும் நிலவேம்பு
தறிந்ததிப்பிலி சாற்றும் பருத்தியே. 224

Koviloor Digital Library

பருத்திவெந்தோன்றி பகரும் நாகமல்லி
சிறுத்தசந்தனஞ் சிறந்த பொன்னாங்கண்ணி
தரித்தபுள்ளடி தாங்குஞ் சமுத்திரா
ஒருத்தர் சொல்லவும் வேணும்பறங்கியே, 225

பறங்கியாச்சா பகருஞ் சுரையுடன்
அறங்கமான வரையும் புல்லுருவி
முறங்கமாக முகழ்சிறு மாஞ்சியும்
துறங்கமாகவே தோன்று மேலந்தானே. 226

ஏலம்பட்டை யெழிலா மெட்டிக்கொட்டை
வேலம்பட்டை விரும்புங் கருவாவும்
தாலமேபுகழ் தாங்கும் பூனைக்காலி
கோலந்தில்லையாங் கூறச் சமன்கூட்டே .227

கூட்டிப்பாண்டங் குலாவி யிடித்துமே
நீட்டிக்கியாழம் நெருங்கவே காச்சிடு
பூட்டுமெண்ணெய் புகலுஞ் சரியெடை
தீட்டுமேபதந் திறமா யிறக்கிடே. 228

இறக்கியம்பா ளெழிலடி போற்றியே
உறக்குமண்டல முற்று முழுகிடில்
கிறக்கும்வியாதி கழறுந் திரிபலை
பறக்குமென்றல்வோ பாடினார் முனிவரே. 229

சூசிகா வாயுவுக்குத் தயிலம்

முனிவர்வாக்கு முழுமையும் பொய்யாது
கனிவுடன் மாந்தர் கழறும் வாயுவுக்கு
வனிதனாவலின் பட்டை விடையமாம்
தனியனாரை தழைக்கோரை கொன்றைவேர். 230

Koviloor Digital Library

கொன்றைதிப்பிலி கூறுங் கொல்லன்கோவை
அன்றெரித்தா னறையு மரத்தையாம்
குன்றுநெல்லி குலாவும் நிலவாகை
தன்றுபுன்கு தனிமா விலிங்கையே. 231

விலங்குதொண்டை விரும்புங் கரும்புடன்
அலம்புஞ்சீந்திலி னாவாரை பஞ்சாங்கம்
புலம்புமேசுரை புகலு மரசுடன்
சலம்புமுட்டியுந் தனியச் சமனெடே. 232

எடுத்துப்பானை யெழிலான சந்தனம்
அடுத்ததாமரை யான திரிபலை
தொடுத்தசூரையுந் தோன்றப் புளிமாவும்
விடுத்தமூங்கிலின் விரும்பு மெட்டியே. 233

எட்டிநீர்சுண்டி யெழிலாம் பூனைக்காலி
கட்டியானங் கருதும் விடத்தேற்றி
தொட்டிதும்பை துடரு நெருஞ்சிலும்
மட்டிப்பாலும் வளமாகத் தூக்கிடே. 234

தூக்கிவெட்டிவேர் துய்ய காத்தொட்டி
தாக்குகஸ்தூரி தனியா மரமஞ்சள்
போக்கில்லாத பெருங்காய நீர்முள்ளி
வாக்குதப்பாமல் வன்கடம்பன் கூட்டே. 235

கூட்டிநாயகங் குலவுஞ் சிலந்தியாம்
நீட்டுவெந்தயம் நேரும் பெருமருந்
தாட்டிநன்னாரி தகுந்த வெட்பாலையாம்
வாட்டிநொச்சி வகுக்கின்ற முல்லையே. 236

Koviloor Digital Library

முல்லைதான்றி முழுகி மிலந்தையாம்
அல்லிமாஞ்சி லரிய கடம்பனாம்
மல்லியின்பூரா மணக்கும் விலாமிச்சு
கொல்லிகோஷ்டமுங் கூறுமதுரமே. 237

கூறும்வேலி குறிக்குஞ் சதாவேலி
நீறும்வில்வம் நிகழும்நாய் வேளையாம்
தூறுந்துத்தியுந் தோன்றச் சமூலமாம்
ஆறுமிரஞ்சன மழகாகச் சேர்த்திடே. 238

சேர்த்துவொன்றாய்ச் சிறக்க யிடித்துமே
பார்த்துப்பாண்டம் புதமாய்ப் பொதிந்திடு
ஆர்த்துமேசல மாறிரு நாழியாம்
கோர்த்துக் கியாழங் குலாவியிறக்கிடே..239

இறக்கிக்கியாழ மெழிலாய் வடிசெய்து
சிறக்குமெள்ளெண்ணெய் சேர்த்திடு மவ்விடை
திறக்குமாமணக் கெண்ணெயாம் பாலிடை
உறக்கமூன்றையு மொன்றாய்க் கலந்திடே.240

இட்டேயெண்ணெ யெழில்பதங் காச்சிடு
கட்டாய் மண்டலங் கருதமுழுகிடில்
திட்டமாய் சூதவாயுவுந் தானறும்
சட்டமாக தன்வந்திரி யுரைத்ததே. 241

உரைத்தார் மாமுனியுற்ற வாயுர்வேதம்
திரைத்த நாலாயிரத்துச் சில்வானமும்
வரைத்தமேபிணி வாகாய் வினையறும்
குரைத்திடாது குறிக்கும் நளினமே. 242

Koviloor Digital Library

குறிக்கும்பத்தியங் கூறும்புளி தள்ளு
தெறிக்கும் வெள்ளாட்டிறைச்சி யுப்புக்கண்டம்
முறிக்குங்காடை முயலும் புறாவாகும்
தெறிக்கும் வவ்வாலுந் திறமாக வுண்டிடே.243

சீரகத் தயிலம்

உண்டபோது வுடலை விட்டேகவே
கண்டுமேசீரங் கழறுநற் றைலமாம்
அண்டுநற்சீர மறையுந் தசபலம்
விண்டுமதுரம் விளம்பிடக் காலெடே. 244

எடுத்துமே யெலுமிச்சம் பழத்தினில்
தொடுத்துமே சாமந்துவள வரைத்திடு
கடுத்துமே பசும்பாலி லரைத்திடு
அடுத்து யெள்யெண்ணெ யன்பாகக்கூட்டிடே. 245

கூட்டிப்பாண்டங் குலாவிப் பதம்வடி
நீண்டுமண்டலம் நேராய் முழுகிடில்
பூட்டுமேகம் புகலப் பறந்திடும்
வாட்டுநீர்ப்பாச்சல் வரைந்தோடிப் போகுமே. 246

போகும்பித்தமும் பொருமலுடன் வாய்வு
ஏகும்வெட்டை யெழிலான ரோகமும்
சாகும்பிரமியந் தணிவா வழலையும்
நோகுங்கண்ணோய் நொறுங்கியே யோடுமே.247

கிச்சிலித் தயிலம்

ஒடுமாந்தர்க் குறையுந் தலைவலி
நீடுமுடலைவிட் டேகுதற் கெண்ணெயொன்
றாடுமே தயிலமு முரைக்கிறேன்
பாடுகிச்சிலிப் பழம் நூறுதூக்கிடே. 248

Koviloor Digital Library

தூக்குமேபழச் சாற்றைப் பிழிந்துமே
தாக்குமே கருஞ்சீர மதுரமாம்
நோக்கும்வில்வமும் நொறுக்கு மேலமுடன்
போக்குவறுகும் புகல வெடுத்திடே. 249

எடுத்துமேயெடை யொன்றா யொருபலம்
அடுத்துமேபழச் சாற்றா லரைத்திடு
தொடுத்து மேபசும் பாலிற்கலக்கியே
கொடுத்துமெள்ளெண்ணெய் கூறச்சமன்கூட்டடே 250

கூட்டிப்பாண்டங் குமுறவே காச்சிடு
நீட்டிமண்டலம் நெருங்க முழுகிடில்
பூட்டும்பிரமியம் புகலப் பறந்திடும்
வாட்டும்ரோகம் வறையுங் கிரந்தியே. 251

கிரந்திமேசிரங் கேங்கிப் பறந்திடும்
நிரந்தரமாய் நொறுங்குங் கபாலநோய்
வரந்தவாய் நீரரூகலும் பித்தமும்
சிறந்தகாசமும் சேர்ந்த விரும்பாலே. 252

இருமலீளை யிசையுங் கபமுதல்
பொருமல்வாந்தியும் புகலு மயக்கமும்
கரும்வழலையுங் காணா தொடுங்கிடும்
பருகநேத்திர வாய்வு மகலுமே. 253

எலுமிச்சம்பழத் தயிலம்

அகலுமாந்தர்க் கறைவேன் றயிலமொன்
றிகலுமெலுமிச்சங் காயது நூறதாம்
புகலச்சாறதனைப் பூட்டிப் பிழிந்துமே
நிகலும்நன்னாரி நேராய்ப் பலமெடே. 254

Koviloor Digital Library

எடுத்துவேலி யெழிலாம் விலாமிச்சு
கொடுத்தமதுரமுங் கூறுநற்சந்தனம்
அடுத்தவாலுமுவை யகிற் கட்டையாம்
விடுத்துநிம்பத்தின் சாற்றா லரைத்திடே.255

அரைத்துமே யிளநீரிற் கலக்கியே
திரைத்தயெள்ளெண்ணெய் சேரச் சமனதாய்
குறைத்தவாமணக் கெண்ணையுங் காலதாய்
உரைத்தமூன்றையு மொன்றாகக் காச்சிடே256

காச்சியேபதங் கருத வடித்திடு
ஆச்சிபாதமடி வணங்கித் தொழு
மூச்சிடாமல் முசியவோர் மண்டலம்
தேச்சிமூழ்கத் தெறிக்கும் வியாதியே. 257

தெறிக்கும்பித்தந் தெளிந்திடு மூர்ச்சையாம்
கறிக்கும் நேத்திரங் கண்ணல்கீமுறும்
முறிக்குங்கைகால் முயன்ற வெரிச்சலும்
தரித்திடாமல் தரணி விட்டோடுமே. 258

ஓடுங்காச்ச லுறையுங் கிரந்தியும்
நீடும்வாதக் குடச்சலுந் தானறும்
சூடுமேனி சுகிக்கத் தழலறும்
பாடுமாமுனி பகர்ந்தது வுண்மையே. 259

கோரோசனைத் தயிலம்

உண்மைகேளு முறைமையாய் மாந்தர்க்கு
தண்மைகோ ரோசனந் தானொருபலம்
வெண்மையான விரும்புநல் வெண்ணையாம்
நண்மையாகவே நவிலப் பலந்தூக்கே.260

Koviloor Digital Library

துக்கியாமணக் கெண்ணை தசபலம்
தாக்குமெள்ளெண்ணெய் தனியவே யவ்விடை
போக்கில்லாமற் பொருந்த விருவிடை
நோக்கிவெண்ணெயில் நுவல வரைத்திடே.261

அரைத்துமுக்கூட்டு யெண்ணெய் கலக்கிடு
திரைத்தமாகவே திறமாகக் காச்சிடு
முறைதப்பாமலே முசியால் முழுகிடு
நிறையும்வியாதி நெருங்கப் பறக்குமே .262

பறக்குஞ்சன்னி பகரப் பதின்மூன்றும்
திறக்கமானதோர் தேர்ந்த காசரோகம்
சிறக்கப்பித்தமுஞ் சேர்ந்த கழல்வாதம்
வறக்குங்கிரந்தி வரைந் தோடிப்போகுமே. 263

போகும்வெட்டையும் பொல்லாத நீராம்பல்
ஏகுங்கிராணி யெழிலான குன்மமும்
வாகுமேசொறி வழங்கும் பெருஞ்சொறி
போகுமென்று புகன்றனர் முனிவரே. 264

கஸ்தூரி தயிலம்

முனிவர்வாக்கு முறைபொய்யா தொருநாளும்
கனிவுடனே கஸ்தூரியோர் வராகனாம்
தனியவேபசும் பாலா லரைத்துமே
வனிதமாயெண்ணெய் வறையு மாமணக்கே.265

ஆமணக்கு மறையுந் தயிலத்தில்
பூமணக்கவே புகலவே காச்சிடு
தாமணக்குந் தனிய வித்தயிலத்தை
வாமணக்கவே வளமாய் முழுகிடே. 266

Koviloor Digital Library

மூழ்கும்போது முறையும் பெருரோகம்
நீழுங்காந்தல் நெருங்குங் கபரோகம்
பாழுமேனி பகரும் பொன்னிறமாம்
வாழுமண்டல மன்பாய் முழுகிடே. 267

குங்குமப்பூத் தயிலம்

முழுகுமாந்தர்க்கு முறைபொய்யா தொருநாளும்
வழுகுங்குங்குமம் வாகா யொருபலம்
பழுகவெண்ணெயிற் பாங்கா யரைத்துமே
தொழுகுமாமணக் கெண்ணையிற் காச்சிடே.268

காச்சியேபதங் கமழ விறக்கிடு
தேச்சுமண்டலந் திறமாய் முழுகிடில்
போச்சுநாசியிற் புகலும் பீனிசமும்
ஆச்சியம்பா ளறைந்த முறையிதே. 269

அறைந்தார்மாமுனி யாயுறு வேதத்தில்
கறைந்தாருண்மையைக் கழறும் வடநூலில்
திறந்தார்பாகங்கள் தீரவே மாந்தர்க்கு
சிறந்ததயிலங்கள் சிறக்கு மின்னூலாமே. 270

சன்னி பதின்மூன்றுக்குமேற்பூசும் சாம்பிராணித்தயிலம்

நூலாஞ்சித்தர் நுகன்றிட்டார் மாமுனி
காலாஞ்சாம்பிராணி கழறு மரக்குடன்
வேலாம்வேப்பெண்ணை விரும்புந் தசபலம்
சாலாமூன்றையுந் தனிவாலை யிறக்கிடே. 271

இறக்குந்தயிலமெழி லாகப் பூசிடில்
பறக்குஞ்சன்னி பகரும் பதிமூன்றும்
சிறக்கயிசிவு சேரப் பறந்திடும்
உறக்கமான உயர்ந்த முறையிதே. 272

Koviloor Digital Library

கர்ப்பூரத் தயிலம்

முறையாம்பாக முறைக்கிறேன் மாந்தர்க்கு
நிறையாங்கற்பூரம் நேருமா லாத்தியாம்
பாறையாமுப்பு பகரும் வெடியுப்பு
துறையாமிளகு தோன்றச் சரியெடே. 273

எடுத்துக்காட்டா மணக்கன் பாலிலரை
கொடுத்துமேகுழி தயில மிறக்கிடு
அடுத்தசன்னிக் கியன்பாகப் பூசிடில்
படுத்தவியாதி புகலப் பறக்குமே. 274

பறக்குமென்றல்லோ பாடினார் மாமுனி
பறக்குமென்றல்லோ பாடினார் சித்தரும்
பறக்குமென்றல்லோ பாடினார் மாந்தர்க்கு
பறக்குமென்றல்லோ பகர்ந்தார் ரிஷிகளே. 275

பகர்ந்தேன் தயிலம் பகருமைஞ்ஞூறதாம்
பகர்ந்தேன்லேகியம் பகருமைஞ் ஞூறதாம்
பகர்ந்தேன்செந்தூரம் பகருமைஞ் ஞூறதாம்
பகர்ந்தேன்பற்பம் பகருமைஞ் ஞூறாமே. 276

ஐஞ்ஞூறோடு வறைந்தேன் கியாழமும்
ஐஞ்ஞூறோடு வறைந்தேன் கிருதமும்
பன்னூலெல்லாம் பகர்ந்து திரட்டியே
இன்னூல்மாந்தர்க் கெடுத்து வுறைத்ததே. 277

அண்டவாதத் தயிலம்

உரைத்தேன் மாந்தர்க்கு வுற்றதயிலமொன்
றிரைத்தேன் வாதத்தினண்டப் பிணியற
கரைத்த வெள்ளுள்ளி கழறுங் கழல்பருப்
பரைத்தகாயமும் பாங்காகத் தூக்கிடே. 278

Koviloor Digital Library

தூக்கிச்சிற்றண்டந் தோன்ற விருபதும்
தாக்குமாமணக் கெண்ணையிற் காச்சியே
போக்கில்லாமற் பொருந்த வடித்திடு
வாக்குதப்பாமல் வாகாகப் பூசிடே. 279

பூசியே பூவரசின் மூலியிலை
கூசிடாமல் குமுறவே கூட்டிடு
வாசிநீர்வற்றி வாகாய்ப் பிணியறும்
தேசில்மாந்தர்க்குத் தெளியச் செப்பினதே. 280

காமாலைக்குத் தயிலம்

செப்புங்காமாலை சிறக்கு மனிதர்க்கு
ஒப்புங்கையா னுயர்ந்த மிளகுடன்
அப்புஞ்சீர மறையு மதுரமாம்
கப்புமஞ்சளுங் காணச் சமன்சேரே. 281

சேர்த்துநீர்முள்ளிச் சாற்றா லரைத்திடு
பார்த்துமே பசும்பாலிற் சமனெடை
கோர்த்துமெண்ணெய் குலாவு மவ்விடையாம்
சார்ந்துபாண்டந் தனிப்பதங் காச்சிடே. 282

பதமாமெழுகு பதத்தில் வடித்திடு
நிதமாம்வரை மிருமுறை தப்பாது
சதமாமண்டலஞ் சார்ந்து முழுகிடில்
அதமாய்ப்போகு மறையுங் காமாலையே. 283

4448- வியாதிக்கும்-ஏகமூலித் தயிலம்

மாலையாந்தயிலம் முறையோர் பாகம்
காலைமல்லி கருதுந் தொரட்டியும்
வேலைநொச்சி விரும்பு முசுக்கையும்
ஆலைநெல்லி யறையும் பற்பாடமே. 284

Koviloor Digital Library

பாடம்வேலிப் பருத்தி யுத்தாமணி
நீடகத்தி நெருங்குங் காக்கணமாம்
பூடகத்திப் புகழுஞ் செவ்வகத்தி
ஆடங்கத்திரி யறையும் வுடுப்பையே. 285

உடுப்பைதொண்டை யுரைக்கு மாடாதோடை
கொடுப்பைமூலி குறிக்கு நற்பாலையாம்
வடுப்பையூமத்தை வளரு மிசங்குடன்
தொடுப்பையானதோர் தோன்றுந் துராப்பூண்டே286

பூண்டுவேலி புகலுங் கட்டுக்கொடி
ஆண்டுசென்ற அறையும் பெருவேம்பு
நீண்டுசென்ற நெடிய வசலையும்
தீண்டுபூராவுஞ் சேர்த்திடு தோடையே 287

தோடைதுய்யானுந் தோன்று மறுகனாம்
ஆடையொட்டி யலரி யாற்றலரி
நீடுங்குப்பி நெடியசங்கங் குப்பி
தேடுமேனி தெளிந்த வெட்பாலையே. 288

பாலைமூலை பகருங் குறிஞ்சானும்
ஆலைபுன்கு மறையு மூமத்தையும்
வாலைபீநாறி வகுக்கும் வெள்ளறுகுடன்
சோலைமுசுட்டை தொடரும் நிலவேம்பே.289

வேம்புயெழுத்தாணி விரும்புஞ் சாணாக்கியும்
பாம்புமூலி பகரு நன்முல்லையாம்
தீங்குசெய்யாத தேர்ந்த பொன்னாங்கண்ணி
ஓங்கு கையானு கரும்பூனைக்காலி. 290

Koviloor Digital Library

காலிமூலி பகரும் பெருமூலி
நீலிபத்திரி நெருங்கும் பெருங்குமிழ்
சோலிமிட்டான் சிறந்தபிரமியும் வாகுகொன்றை
வகுக்குங்கிளாவுடன்.
நீலிமூலி நெருங்குந் தூதுளையே. 291

தூதுவாகை துடிக்கும் பெருவாகை
வாதுதுளசி வகுக்கு மாதுளையாம்
நீதுமெட்டி நெருங்கு மாவாரையாம்
சாதுமேபனை சாற்று முருங்கையே. 292

முருங்கை காக்கணமுயலுஞ் சிறுகளா
கருங்கைகோவை கழறுஞ் செங்காலியாம்
பருங்கையுருவி பகரும் நற்புன்குடன்
பெருங்கைபாதிரி பெருகு நல்வில்வமே. 293

வில்வம்பாசி விரும்புங் கடற்பாசி
கொல்லிமூலி குறிக்குங் கலிகமாம்
வல்லிமல்லி வகுக்கு நாகமல்லி
வில்லினோசை விளங்குங் கிலுப்பையே .294

விளங்குங்கருணை மேவுங் கடம்பமாம்
தளும்புங் காக்கணந்தாங்கும் விடமூங்கில்
பளும்புகோங்கு பகருங் கற்றாழையாம்
நளும்புவீழியும் நாட்டில் பேயத்தியே. 295

அத்திகோரை யறையுந் தேள்கொடுக்கும்
சத்திமூலி சதாசிவன் மூலியும்
துத்திமூலியுந் தோன்று மருக்காரை
வெத்திகொள்ளும் விரும்பும் பேய்க்கும்மட்டி 296

Koviloor Digital Library

குமட்டி நரளை கூறும் புல்லுருவி
அமட்டி காயத்திரி கருங்காலியாம்
சமட்டிபாகலுஞ் சாற்றுகாஞ் சோறியும்
கமட்டிவாழை கானாங்கீரை மூலியே. 297

மூலிகார்கோழி முயலுங்காற் பாசமாம்
சோலிகாலகஞ் சோரும் புனல்முருங்
காலிகுவளை காட்டுக் கொழிஞ்சியாம்
வேலிக்கரி விரும்பும் பிரண்டையே. 298

பிரண்டைகூந்தல் பிறங்கு பாதிரியாம்
கரண்டைகோட சோலை கமுகுடன்
அரண்டைதாமரை யறையும் நாணல்குன்றி
பரண்டைதோன்றி பகரும் பூசனியே. 299

பகரும்நாளை பாட்டுந் தாளிசமாம்
நுகருந்தும்பை நுணாவுடன் காட்டத்தி
நகருஞ்சின்னியும் நன்மாவி லிங்குடன்
தகருந்தேக்குடன் தாங்குஞ் சிவதையே. 300

சிவதைநிலவாகை சேர்ந்த நிலக்கடம்
பவதைகூரண்டம் பகருஞ் செம்பூவுடன்
அவதைகுறிஞ்சான் அறையுங் குருக்கத்தி
நவரைவெந்தோன்றி நாட்டில் பேய்ச்சுரையே. 301

சுரையாங்காவட்டம் பூண்டு யிஞ்சியுடன்
நரையாஞ்சிறுதாளி நவிலுஞ் சிறுகாஞ்சி
சுரையாம்வெள்ளெலி தோற்றும் கோங்குடனே
பரையாம்துராவுடன் பகருஞ் சாணாக்கியே. 302

Koviloor Digital Library

சாணாய்ப்பூண்டு தரிக்கும் பேய்மிரட்டி
காணாமூலி கழறுந் தேள்கொடுக்கு
தோணாச்செங்கழு நீர்முள்ளி செங்கீரை
நாணாக்கொழுந்து நாட்டும் சோகமே.303

நாட்டும்நாய்வேளை நவிலும் வெள்ளாம்பலும்
கூட்டும்வெற்றிலை கூறும் கொடிமூலம்
நீட்டுமூலி நிகழும் நஞ்சறுப்பான்
கோட்டுநெருஞ்சி குறிக்குங் கடம்பமே.304

கடம்பங்கோரக்கர் கருது மூலிகையாம்
தடம்பம்பண்ணைத் தவிக்குங் கோழிக்கோடி
சடம்பமாமூலி சாற்றுஞ் சீதேவியாம்
அடம்படரு மறையுங் களாப்பூவே. 305

பூவுடசதாமூர்க்கன் தண்ணீர் மிட்டான்
நாவுநீர்ச்சுண்டி நவிலி மரிநெல்லி
பாவுந்தைவேளை பகருஞ் சடாதரி
ஆவுஞ்சடைச்சி யறையு மெருக்கையே.306

எருக்கைமூலி யெழிலாங் கவிழ்தும்பை
மருக்கைமுன்னை மகிக்குங் கொழுந்துடன்
பருக்கைவன்னியும் பகருஞ் சடைக்கஞ்சா
சருகையான சமுத்திரோ தயங்கூட்டே.307

கூட்டிவாத முடக்கி பெருமூலி
நீட்டுமுள்ளங்கி நிகழுஞ் செம்பருத்தி
காட்டுநொச்சிக் கருந் துளசியுடன்
பூட்டுமூலி புகலச் சமனதாய்
ஆட்டிச்சாற்களை யன்பாய்ப் பிழிந்திடே. 308

Koviloor Digital Library

இட்டேசாற்றை யெழிலான பாண்டத்தில்
திட்டமாகவே சேர வார்த்திடு
கட்டுமெள்ளெண்ணெய் கருது மவ்விடையாம்
சட்டமாகவே தனிப்பதங் காச்சிடே. 309

காச்சியேமெழுகு பதம் வடித்து
ஆச்சிபாதமடி வணங்கிப் போற்றி
முச்சுதப்பாமல் முசியவோர் மண்டலம்
காச்சியெண்ணெயில் கடுகத் தானஞ்செய்யே.310

செய்யும்போது திறமையாய்ப் பிணியறும்
வையுமீளை வரையும் பெருமீளை
தொய்யுங்காந்தலுந் தோன்று மிருமலும்
பெய்யுங்கண்ணீர் பெரும்பாச்ச லோடுமே. 311

ஓடுங்குன்ம முறையும் பதினெட்டு
நீடுமாந்தம் நிகலும் பெருமாந்தங்
கூடுங்குன்மங் குறைநோய் பெருங்குஷ்டம்
சாடும்வாதந் தனிப்பித்தம் நீங்குமே. 312

நீங்குங்காந்தல் நெடிய பெருநோயும்
தீங்குசெய்யுந் திமிர்வாத ரோகமும்
ஆங்குகாச மறையுஞ் சுவாசமும்
தேங்குகிரந்தி தெறித்தோடிப் போகுமே. 313

போகும்வெட்டுப் புகலும் படலமும்
ஏகுஞ்சூலை சாற்றும் பெரும்பாடு
சாகுமாந்தமுஞ் சாற்றும் பெரும்பாடு
வேகுமழலை விசையாய்ப் பறக்குமே. 314

Koviloor Digital Library

பறக்குஞ்சன்னி பகரப் பதின்மூன்றும்
திறக்கசேத்துமந் தோன்றத் தொண்ணூற்றாறும்
வறக்கமேசுரம் வாகா யறுபதம்
துறக்குபிரமியந் தோன்று நீரிழிவே. 315

தோன்றுவாதந் துடியாங் கழல்வாதம்
சான்றமேனியிற் சாற்றும் படைசொறி
நோன்றபீனிசம் நிகழும் நேத்திரவாய்வு
ஊன்றபல்நோ யுரையு மறையாப்பே. 316

ஆப்புடன் யுரையரையுங் கண்டமாலை
மூப்புநோயு முறையு முசல்வலி
சேப்புகண்டன் சிறக்குநமர்க் கண்டன்
வாய்ப்புண்ணாற்றவம் முறைந்தோடிப் போகுமே317

போகும் நாலாயிரத்துச் சில்வானமும்
ஆகுந்தயில மறைந்தேன் பெரும்பாகம்
சாகுமாந்தர் சடுதில் மாண்டிடார்
வாகுதன்வந்திரி வகுத்தது வுண்மையே. 318

புஷ்பபாணத் தயிலம்

உண்மைகேளு முரைக்கிறேன் மாந்தர்க்கு
தண்மையான தனிப்புஷ்ப பாணமாம்
கண்மையாமல்லி கழறு மூசிமல்லி
வண்மையாக வரையு மகிழமே. 319

மகிழுமன்னாசி மணக்கும் பன்னீர்ப்பூவாம்
நெகிழுங்கஸ்தூரி நேர்ந்த வாற்றலரி
தகிழுமுல்லையும் சாற்றும் பெருந்துரா
புகழும் தாமரைபுஷ்பம் அல்லியெடே. 320

Koviloor Digital Library

எடுத்துத் தசங்கமு நீருடனாம்பலும்
தொடுத்தபூவாஞ் சிறந்த செம்முருக்கன்
அடுத்த முருங்கையான வகத்தியும்
நடித்தபாதிரி நவிலும் பத்திராட்சியே. 321

பத்திராட்சி பகருங் கோங்கிலவன்
சத்திமேவுந் தனிச்செம் பருத்தியாம்
வெத்திகொள்ள விரும்பு மனோரஞ்சிதந்
துத்திப்பூவுடன் றோன்றும் நுணாப்பூவே. 322

பூவுடன் கலியாணங் காட்டாத்திப்பூ
நாவுதப்பாமல் நவிலச் சமனதாய்
ஏவும்பாண்ட மெழிலாய்ப் பொதிந்துமே
பாவுகியாழமும் பதமாகச் செய்திடே. 323

செய்யுங்கியாழஞ் சிறக்க வொருநாழி
பெய்யுமெள்ளெண்ணெய் பேசு மிருநாழி
துய்யுமே பசும்பாலு மரைநாழி
நையுமொன்றாக நவிலவே காச்சிடே.. 324

காச்சியே பதங் கழறவடித்திடு
பேச்சுதப்பாமல் பிரியமாய் முழுகிடு
போச்சுமேகம் புகலும் பிரமேகம்
நீச்சுதிரேகம் நெகிழ மணக்குமே. 325

மணக்கும் பித்தமும் வாய்நீரூரலறுத்
தணிக்குமே தழல்தரியாப் பிணியறும்
கணிக்கும்வியாதி கழறாம வோடிடும்
செணிக்குந்தயிலந் திறமாகப் பார்த்திடே.326

Koviloor Digital Library

44883

மகிழம்பட்டைத் தயிலம்

பாரத்துமாந்தர் பகரு மொருபாகம்
ஆர்த்தும்பட்டை யறையு மகிழமாம்
கோர்த்துவேர்ப்பட்டை குறிக்குந் தசபலம்
சேர்த்துக் கருஞ்சீரஞ் சிறக்கப்பலமெடே.327

எடுத்துமாந்தர்க் கெழிலாந் தைலமொன்
றடுத்திடாமலே தாக்கு மகிழமாம்
தொடுத்தபட்டையாந் தோன்றுந் தசபலம்
விடுத்தகியாழமும் வேண்டியே செய்திடே.328

செய்கியாழஞ் சிறக்கவே யெட்டிலொன்
றெய்துமே பசும்பாலு மிளநீரும்
கொய்திடாமற் குறிக்குமா மவ்விடை
பெய்துமெள்ளெண்ணெய் பேசச் சமன்தூக்கே.329

தூக்கிப்பாண்டத்திற் றுவளவே காச்சிடு
தாக்குமே பதந்தனிய விறக்கிடு
நோக்குமம்பாளி னுவல்பதம் போற்றியே
போக்கில்லாமற் பொருந்தத் தானஞ்செய்யே.330

செய்யும்போது சிறந்ததோர் பித்தமும்
நையும்வாத நவிலு மயக்கமும்
பொய்யும்வாய் நீர்பிதற்றல் மதமூர்ச்சை
தொய்யுமீளை துவண்டோடிப் போகுமே. 331

அகிற்கட்டைத் தயிலம்

போகுமாந்தர் புகலும் பிணியற
ஆகுங்கட்டை யறையு மகிற்கட்டை
வேகுமேபதம் வெய்யவே நூறதாம்
தேகுமே சலந்திறமாய்ப் பனிரண்டே. 332

Koviloor Digital Library

பன்னிரண்டுடன் பகருஞ் செங்கரும்பு
வன்னிபாண்டத்தில் வாகாகப் பூட்டியே
சொன்னகியாழந் திறமாக வெட்டிலொன்
றெண்ணியே பசும்பாலு மிளநீரே. 333

பாலுடன்கியாழம் பகருஞ் சமனதாம்
சாலுடனெண்ணிச் சாற்றிடு மவ்விடை
மேலுந்தயிலம் விளம்பவே காச்சிடு
நாலுசாமம் நவில விறக்கிடே. 334

இறக்கித் தாயாரெழில் பதம்போற்றியே
திறக்கமண்டலஞ் சிறப்பாய் முழுகிடில்
உறக்கமுள்ள வுயர்பத்து சன்னியும்
சிறக்கும்பீனிசஞ் சிதைந்தோடிப் போகுமே.335

போகும்பித்தம் புகலுங் கரும்பித்தம்
ஏகும்வாத மெழிலாஞ் சிலேத்துமம்
நோகுமாந்தை நுவலு மிருமலும்
போகுமென்று புகன்றனர் முனிவரே. 336

காஞ்சுறாத் தயிலம்

முனிவர்வாக்கு முறைகளிற் பொய்யாது
கனிவுடன் றயிலமு முரைக்கிறேன்
பனியுமூலி பகருகாஞ் சுறாவாம்
வனிதமாக வறையு மொருநாழி. 337

நாழிமூலி நவிலப் பிழிந்துமே
கோழியாவாரை குறிக்குஞ் சமனெடை
பாழிலாத பகரு மிளநீரும்
நாழியேபசும் பாலுங் கொடுத்திடே. 338

Koviloor Digital Library

கொடுத்துவொன்றாய்க் குமுறக் கலக்கியே
தொடுத்துமெள்ளெண்ணெய் தோன்ற வவ்விடை
அடுத்துப்பாண்ட மறையவே காச்சிடு
வடுத்துமேபதம் வாகாய் வடித்திடே. 339

வடித்துமாயன் மலரடி போற்றி
தொடுத்துமண்டலந் தோன்ற முழுகிடில்
அடுத்தகாச மறையும் ரத்தபித்தம்
கடுத்தமந்தார காசமு மேகுமே. 340

ஏகுபாண்டு மெழிலா மலசன்னி
நீகுஞ்சூலை நெகிழுங் கபரோகம்
சோகைபாண்டு சொறிசிரங் கேகிடும்
வாகுதன்வந்திரி வகுத்தது வுண்மையே.341

நிலக்கடம்புத் தயிலம்

உண்மையாக வுரைக்குந் தயிலமொன்
றண்மையாகவே சாற்றுவேன் மாந்தர்க்கு
வெண்மையான விரும்பும் நிலக்கடம்
பண்மையாம் பகரத் தசமெடே. 342

எடுத்துப்பாண்ட மெழிலாய்க் கியாழஞ்செய்
அடுத்தவாமணக் கெண்ணெய் தசபலம்
தொடுத்தமெள்ளெண்ணெய் தோன்றவே யவ்விடை
கொடுத்துத்தயிலங் கூறவே காச்சிடே.343

காச்சுமேபதங் கழற வடித்திடு
பேச்சுதப்பாமல் பிசகற மண்டலம்
மூச்சிடாமல் முசிய முழுகிடில்
போச்சுகுஷ்டமும் புகல பறக்குமே. 344

Koviloor Digital Library

பறக்குந்திமிர்நோய் பகருங் கழல்வாதம்
சிறக்குமாந்தர் சிறந்த நீராம்பலும்
திறக்குபீனிசந் தேர்ந்தநீர்ப் பாய்ச்சலும்
துறக்கக்கானகம் துவண்டோடி நீங்குமே.345

நீங்குமாந்தர் நிறையந் தயிலமொன்
றாங்குபட்டை யரிய நுணாப்பட்டை
பாங்குடன் பலம்பகரு மிருபதாம்
வாங்குதண்ணீர் வளைதூணி சேர்த்திடே.346

சேர்த்துக்கியாழஞ் சிறந்த விளநீரும்
பார்த்துநிம்பத்தின் பழச்சாறா மவ்விடை
ஆர்த்துமெள்ளெண்ணெ யறையச் சமனெடை
வார்த்துமெழுகு பதத்தி லெடுத்திடே. 347

எடுத்துத்தயில மெழிலா யிறக்கியே
அடுத்துமண்டல மன்பாய் முழுகிடில்
தொடுத்தகாச்சல் தொடரு முறைக்காச்சல்
படுத்தவியாதி பகர்குன்மம் போகுமே .348

போகுமேரணம் புகலு் மரையாப்பு
ஆகுங்கிரந்தி யரிய பெருஞ்சீரம்
காகும்வியாதி கழறப் பறந்திடு
மேகுதன்வந்திரி விரும்பி யுரைத்ததே. 349

உரைத்தாரிம்முறை யுலகத்தில் மாந்தர்க்கு
நிரைத்தார்தயிலம் நிறையச் சரிபாகம்
திரைத்தநூலிது தேறவே மாந்தர்க்கு
குரைத்த தைஞ்ஞாறுங் கூறியதுண்மையே.350

Koviloor Digital Library

மனோரஞ்சிதபாணத்தயிலம்

உண்மையாக வுரைக்கிறேன் மாந்தர்க்கு
தண்மையா மனோராஞ்சித பாணமாம்
திண்மையாகத் திறமா யொருசேரு
வெண்மையாய்ச்சலம் விரும்பிடக் காச்சிடே351

காச்சுராஜாளிப் பழஞ் சமனெடை
பேச்சுதப்பாமல் பிசகாப் பசும்பாலாம்
ஆச்சுமெள்ளெண்ணெ யறையு மவ்விடையாம்
மூச்சுதப்பாமல் முதிரவே காச்சிடே. 352

காச்சுமண்டலங் கருதி முழுகிடில்
போச்சுவியாதி புகலும் பிரமியம்
நீச்சுநாற்றம் நெருங்குங் கபமீளை
வீச்சுகுறைநோய் மிகவாப் பறக்குமே.353

பறக்கக்கூந்தல் பதமாய் வளர்ந்திடு
சிறக்கவெண்மயிர் சேரக் கறுத்திடும்
திறக்கத்திரேகந் தெளிந்த மணப்பாகம்
பறக்கப்பல்நோய் பறந்தோடிப்போகுமே.354

போகுமிரைப்புடன் பொல்லா விருமலும்
ஏகுங்காந்த லெழிலான பித்தமும்
ஆகும்வாத மறையுங் கபரோகம்
வாகுசேத்துமம் வாகாக நீங்குமே. 355

நீங்குமேகம் நெருங்கும் வாய்நாற்றம்
ஓங்குங்கிரந்தி யுயர்ந்த பெருநாற்றம்
தீங்குசெய்யுஞ் சிலைப்புடை புற்றுவும்
வாங்கிப்போமென வகுத்தார் தன்வந்திரி.356

Koviloor Digital Library

பரிமளகெந்தித் தயிலம்

வகுத்தார்மாந்தர் வறையுந் தன்வந்திரி
தொகுத்தார் பூஷான்றும் பரிமளம்
நிகுத்தார் குருவிவேர் நேருமருக்கொழுந்
தகுத்தாரிருவேலி தாமிலா மிச்சியே. 357

மிச்சிகிச்சிலி விரும்பும் தசபலம்
கொச்சிப்பன்னீர் குறிக்கு மிருநாழி
அச்சமில்லா தறையும் நல்லெண்ணெயாம்
உச்சிதமா யுறுதியாய்க் காய்ச்சியே. 358

காச்சுதயிலம் கருதப் பதனஞ்செய்
மூச்சிடாமல் முசியவோர் மண்டலம்
தேச்சுவார மிருமுறை முழுகிடில்
போச்சுகண்ணோய் புகலப் பறக்குமே.359

பறக்கும்வியாதி பரிமள கெந்தியாக
திறக்குங்கூந்தல் திறமாய் வளர்ந்திடும்
உறக்கும்பித்த முழங்கு மதமூர்ச்சை
சிறக்கும்வாயூறல் சிதறியே யோடுமே. 360

ஓடும்மேகம் பிரலாப சன்னியும்
நீடுமேதழல் வாரி யலறிடும்
கூடுமே கபமீளை யொதுக்கிடும்
சாடுநேத்திர வாயு வகலுமே. 361

அகலுங்கண்ணோ யறையுந் தொண்ணூற்றாறும்
நிகலும்பீனிசம் நேருநீர்ப் பாய்ச்சலும்
புகலுங்காக்கை பிறவலி சன்னியும்
சகல நோய்களுந் தாண்டு மடவிதே. 362

Koviloor Digital Library

சுகந்தவாரித் தயிலம்

அடவாய்மாந்தர்க் கறையுஞ் சுகந்தமாம்
சடமாங்கற்றாழை சாற்றுந் தண்ணீர்மிட்டான்
திடமாமன்னாசி சேர்ந்த பழரசம்
வடமாங்கிச்சிலிப் பழமும் ரசங்கூட்டே.363

கூட்டியொன்றாய்க் குலாவச் சமனெடை
நீட்டுமெள்ளெண்ணெய் நெகிழவே யவ்விடை
பூட்டியொன்றாய்ப் புகழ் மெழுகுபதம்
மூட்டிப்பாண்ட முசியவே காச்சிடே. 364

பாண்டம்விட்டுப் பதமாய் வடித்திடு
ஆண்டுகால மறையவே மூழ்கிடில்
மூண்டபித்த முதிரவே நாற்பதும்
நீண்டவாதம் நெகிழப் பறக்குமே. 365

பறக்கும்வியாதி பகரும் பெருநோயும்
திறக்கமானதோர் தேர்ந்த கபாலநோய்
இறக்கநீரிழிவு ரத்த மூத்திரம்
பறக்குமென்றல்லோ பாடினார் சித்தரே.366

மன்மதலீலைத் தயிலம்

சித்தர்வாக்கு திசையிலும் பொய்யாது
சித்தர்மாந்தர்க்குத் திறந்திட்டா ரிம்மூன்றும்
சித்தர்நூல்களிற் றெளிந்திட்டா ரென்னூலும்
சித்தரின்னூலிற் றெளியவே செப்பினார்.367

செப்புமன்மத லீலை தயிலமாம்
ஒப்புங்கிராம்புட னோங்குங் கருவாவாம்
தப்பில்லாத தனிப்பெருஞ் சாதிக்காய்
கப்பும்வெள்ளரி கருது முருங்கையே.368

Koviloor Digital Library

முருங்கையேல முகிழ்மருக் காரையாம்
கருங்கையான்மூலிக் கழறுஞ் சதகுப்பை
பெருகைமூலியும் பேசும் பிரண்டையாம்
தருங்கைமதுரந் தான்றி சமன்கூட்டே.369

கூட்டிச்சாம்பிராணி குலாவுங் கஸ்தூரியாம்
நீட்டுங்குங்குமம் நேரும் பச்சைப்பூரம்
பூட்டும்பன்னீர்ப்பூ புகலும் பேதானாவும்
காட்டுமல்லியும் கருதச் சமன்தூக்கே. 370

தூக்கியேசலந் தோன்றப் படியிடு
தாக்கிப்பாண்டந் தனியக் கியாழஞ்செய்
போக்கில்லாமற் புகலப் பசும்பாலும்
நோக்குமெள்ளெண்ணெய் நுவலச் சரியெடே.371

எடுத்துத்தயில மெழிலாகக் காச்சியே
அடுத்துமண்டல மன்பாய் முழுகிடில்
தொடுத்தலீலையிற் றோன்றாப் புணர்ச்சியாம்
கடுத்தமேகங் கழன்றோடிப் போகுமே. 372

போகும்பத்தியம் போற்றுங் காடைபுறா
ஆகுமுருங்கை யரிய கச்சலுடன்
பாகுங்கத்திரி பகருங் கொத்தமல்லி
வாகுவெள் ளாட்டிறைச்சியுஞ் சேர்த்திடே .373

சேர்த்துமேபசும் பாலுட னெய்யாகும்
கோர்த்துமேவாதுமை குலாவு முந்திரியாம்
தீர்த்தமாகவே சேர வருந்திடு
வார்த்தைத்தப்பாது வரையு மாமுனியே. 374

Koviloor Digital Library

சீதாதேவித் தயிலம்

அறைந்தார் முனிவ ராயுறுவேதமாம்
சிறந்தசீதேவித் தயில முறைக்கிறேன்
கறந்தநன்னாரி காட்டுக் கருஞ்சீரம்
முறந்தரம்வேலி முகிழ் நிலப்பனையே.375

நிலப்பனையுட னேருந் துளசியாம்
கலப்பையெட்டியுங் கருது ரோகணியாம்
பலப்பமாஞ்சில் பகருங் கிலுப்பையாம்
சுலப்பமாகவே தோன்றச் சமனெடே.376

எடுத்துக்கியாழ மெழிலாகக் காய்ச்சியே
தொடுத்த வெள்ளெண்ணெய் துகளக்கலக்கியே
அடுத்துப்பாண்ட மடுப்பினி லேற்றியே
சடுத்தமாகத் தனிப்பதங் காச்சிடே.. 377

காய்ச்சுமேதயில முழு மண்டலம்
மூய்ச்சிடாமல் முழுகியே வந்திடில்
நோய்ச்சிப்போகும் நுவலும் வியாதிகள்
கூச்சிடாமல் குறிப்பா யுரைத்ததே. 378

உரைக்கும்வியாதி யுறங்கும் வழிகேளு
திறைக்கும்பித்தம் தெளிந்து மயங்கிடும்
வரைக்கும்ரோகம் வகைகெட்டு ஓடிடும்
பறைக்குந்தன்வந்திரி பாடின துண்மையே.379

கோரைக் கிழங்குத் தயிலம்

உண்மையாக வுரைக்குந் தயிலமொன்
றிண்மையான திரையு முத்தக்காசு
வண்மையாக வகுக்கும் நூறுபலம்
பண்மையாகவே பாங்காகத் தூக்கிடே .380

Koviloor Digital Library

தூக்குங்கிச்சிலி துய்ய தசபலம்
தாக்கும்வேலி தனிய வறுபலம்
நோக்கும்பத்திரி நொருங்கத் தசபலம்
தேக்குதாளிசந் தெளிவா யெடுத்திடே. 381

எடுத்துச்சீரகம் எழிலாய்த் திரிபலம்
அடுத்துக்கியாழம் அன்பாகச் செய்திடு
தொடுத்துப் பாண்டந் துகளவடித்திடு
கொடுத்து எள்ளெண்ணெய் குமுறவடித்திடே.382

வடித்துமண்டலம் வாகாய் முழுகிடில்
பிடித்தரோகமும் போகு மயக்கமும்
நடித்தபித்தமும் நவிலும் கபரோகம்
வெடித்தசூலையும் விரைந்தோடிப் போகுமே.383

மகா கீழாநெல்லித் தயிலம்

போகும்நெல்லி புகலும் மகாநெல்லி
ஆகுந்தயிலம் அறையுங் கீழாநெல்லி
பாகுதூக்கிப் பகர்ந்திடு காலவாய்
ஏகும்வில்குத மெழில்பதஞ் சேர்த்திடே. 384

சேர்த்துவேலி சிறக்க வொருபலம்
கோர்த்துச்சீரகங் கூறு மிரண்டரை
பார்த்துமுந்திரி புகரு மொருபலம்
தீர்த்துச் சந்தனத்தூள் பலந் தூக்கிடே. 385

தூக்கிடுஞ்சலந் துய்ய படியெட்டாந்
தாக்கிப்பாண்டந் தனிலடுப் பேற்றிடு
போக்கில்லாமற் புகல வெட்டிலொன்றாய்
வாக்குத்தப்பாமல் வாகா யிறக்கிடே. 386

Koviloor Digital Library

இறக்கிக்கியாழ மெழிலெனு மெண்ணையும்
திறக்கச்சமனெடை சீராய்க் கலந்துமே
யிறக்குமேபதம் பேணிக் கடுகதாய்
இறக்கித்தயில மெழில்பதம் போற்றிடே.387

போற்றுங்கிச்சிலிப் புகலுங்கிழங்குடன்
ஏற்றும்பச்சிலை தூளதைத் தூவி
யேற்றுமே வடித்தே வடிகொண்டபின்
போற்றுமாயன் புகலப் பதம்பணிந்திடே.388

பணிந்துமண்டலம் பகர வொருமுறை
துணிந்துமுழுகிடத் துய்ய வினையறும்
கணிந்தபித்தங் கபாலச் சூடுமுதல்
கனிந்தவாரேம் வரையும் வினைபோமே.389

போகும்வியாதி புகலுங் காமாலையாம்
ஏகும்சூலை யெழில்கண் புகைச்சலும்
வேகுமேகம் விருதாப் பியமறும்
ஆகுந்தயில மறைவது உண்மையே. 390

மகாதேவரஞ்சிதத் தயிலம்

உண்மையாக வுரைக்குந் தயிலமொன்
றிண்மையா மிலவங்கப் பட்டைபலம்
வண்மையாக வகுக்கு மாலம்பட்டை
திண்மையானதோர் தில்லைப் பட்டையெடே. 391

எடுத்துமேசிவன் வேம்பின் பட்டைபலம்
தொடுத்துமேயகிற் பட்டை யறுபலம்
கொடுத்துமேபழச் சாற்றா லிடித்திடு
அடுத்துமே மலகச்சா றிடித்திடே. 392

Koviloor Digital Library

இடித்துச்சாறு யெடுப்பாய் தசபலம்
கொடுத்துமேபசும் பாலிற் சமனெடு
வடித்துஎள்ளெண்ணெய் வாகாய்ச் சமனெடை
கொடுத்துப் பாண்டத்திற் குமுறக்கலக்கிடே.393

கலக்கித்தீபம் கழறவே காச்சிடு
தலக்கிடாமல் நவிலுந் தயிலத்தை
பிலக்கமண்டலம் பேச முழுகிடில்
துலக்கவியாதிபோம் துய்யவினைகளே. 394

துய்யபித்தம் துடிபெறு வாதமும்
நையரோகம் நவிலுங் குன்மரோகம்
பெய்யசூலை பெரும்பாடு ரத்தமும்
செய்யநோய்கள்போம் தன்வந்திரி யுரைத்ததே.395

உரைத்தவாக்கு திசைநிலம் பொய்யாது
கரைக்கநாவு கிடையாது மானிலம்
விரைக்கவாகடம் விரும்பி யுரைக்கிறேன்
தரைக்கவாலுழுவைப் பலம் பத்தெடே. 396

வாலுழுவைத் தயிலம்

எடுத்தவாலுழுவைப் பலம் பத்துடன்
தொடுத்த சோம்புடன் துய்யமுத்தக்காசு
அடுத்த பேராமுட்டிப் பலமுமவ்விடை
கொடுத்துமே பசும்பாலி லரைத்திடே. 397

அரைத்து எள்ளெண்ணெ யாவின் படியரை
கரைத்துமே யிளநீரிற் கலக்கியே
திரைத்துப் பாண்டந் திறமாகக் காய்ச்சியே
முறைதப்பாமல் முதிர யிறக்கிடே. 398

Koviloor Digital Library

இறக்கிமண்டல மியல்பாய் முழுகிடில்
சிறக்கும் பித்தஞ் சிரநோ யனந்தமும்
பறக்கும்வாதம் பகரு மகாரோகம்
நிறக்குமேகப் படைகளு நீங்குமே. 399

நீங்குகுட்டம் நிலைக்குங் கடிரணம்
தீங்குசெய்யும் திமிர்ப்படை தானறும்
ஓங்குநோய்க ளுறைந்திடு கானகம்
பாங்கி தன்வந்திரி பாட்டுபொய்யாதிதே. 400

பொய்யாதையா புகலுங் குருமொழி
ஐயாதன்வந்திரி யன்பா யுரைக்கிறேன்
பையமானிடர் பாரிற் பிழைப்பதற்
கையனீசன் கழற வுரைத்ததே. 401

செந்நாவற்பட்டைத் தயிலம்

உரைக்குந்தயில முறையு முறைமைகேள்
திரைக்குஞ் செந்நாவற் பட்டையறுபலம்
கரைக்குமருதம் பட்டைத் தசபலம்
முரைக்க வெண்டோன்றிப் பட்டைசமனெடே.402

எடுத்துப் பஞ்சாங்கப் பட்டைதசபலம்
கொடுத்துமே பழச்சாற்றா லிடித்துமே
கொடுத்துமே பதக்கு சாறெடுத்திடு
அடுத்து எள்ளெண்ணெ யன்பாய்ச் சமன்கூட்டே.403

கூட்டியாவின்பால் கூறச் சமனெடை
நீட்டுப்பாண்ட நெருங்கிப் பொதிந்துமே
தீட்டியே பதமாகவே காய்ச்சிடு
வாட்டியீசன் மலர்ப்பதம் போற்றிடே. 404

Koviloor Digital Library

போற்றிமண்டலம் புகழாய் முழுகிடில்
தூற்றும்பெண்டிர் துடியாப் பெறும்பாண்டு
கூற்றும்பித்தம் குதிக்கும் பெரும்வாதம்
தோற்றும் பார்வைநீர் துலைந்தோடிப்போகுமே.405

போகுங்குட்டம் பொரும லிளைப்புடன்
ஏகும்வாந்தி யெழில்பெரு காசமும்
வேகுமேகம் விஷநீர் பறந்தோடும்
சாகும்வியாதி தளர்ந்தோடி நீங்குமே. 406

நீங்குங்காந்தல் நிகலுங் கைவீச்சுடன்
தீங்குசெய்கின்ற தீராப் பிணிகளும்
பாங்குமூலம் பகரு முளைமூலம்
ஏங்கிக்கானக மொழிலாய்ப் பறக்குமே. 407

உடல்தளர்ச்சி தீர சர்வாங்க ராஜயோகத் தயிலம்

பறக்கும்பாரில் பகர்ந்திடு மாந்தர்க்கு
சிறக்கும் ராசாங்கத் தயிலமுறைக்கிறேன்
சிறக்கச்சந்தனந் தேர்ந்த வகிற்கட்டை
நிறக்கப் பூலாநெருங்கப் பலந்தூக்கே. 408

தூக்கிப்பூலாவந் துய்ய செஞ்சந்தனம்
தாக்குக் காசுடன் தக்க விலாமிச்சு
தேக்குப்பத்திரி தேர்ந்த பஞ்சாங்கமும்
போக்கில்லாமற் பொருந்தப் பலங்கூட்டே.409

கூட்டிநன்னாரி கூறிட வவ்விடை
நீட்டிவாலுமுவை யரிசிபலம் நேராய்
கோர்த்துக் கிச்சிலி கூறிடுமவ்விடை
ஆர்த்துமஞ்ச ளறையுந் திரிசாதம். 410

Koviloor Digital Library

சாதம்வால்மிளகு வகையோர் பலம்
நீதமாக நெருங்குஞ் சதாபல்லி
வாதமான வகுக்கும் பற்படாகம்
பேதஞ்சொன்ன விதிப்படிப் பார்த்திடே.411

பார்த்துச் சாதுரியம் பலமவ்விடை
நேர்த்தியாக நெருங்கும் நந்திவர்க்கம்
பூர்த்தியாகப் புகலப் பழச்சாற்றால்
தீர்த்துமே யரைதீரச் சமனெடே. 412

எடுத்துயெள்ளெண்ணெ யெழிலாய்ச் சமனெடை
தொடுத்துப் பாண்டத்துட் டோன்றவேகாச்சிடு
அடுத்துமண்டல மன்பாய் முழுகிடில்
சடுத்தமான சகலநோய் தீருமே. 413

தீரும்ரோகம் திரையும் நேத்திரரோகம்
கூறுஞ்சன்னி குலாவு முத்ராங்கமும்
மீறும்பித்த மிசைந்த பிடரிநோய்
தூறும்கண்ணோரை தூலங் கவறுமே.414

அறுகுங்காச மறையுஞ் சயகாசம்
குறுகுங்கைகால் குறைநோய் குஷ்டங்களும்
மறுகுந்தேமல் மறையு மித்தயிலத்தால்
சுறுகுமேகப் பிணிகளுந் தாழுமே. 415

கபாலப்புற்றுபீநசம் காதிற்சீழ் தீர்வதற்கு மகாபூர்வக்கியான தயிலம்

தாழுமாந்தர்க்குத் தயில முறைக்கிறேன்
ஆழும் பூர்வக்கியான முறைமைகேள்
சூழுங்கோசலந் துய்ய வொருபடி
நீழுமே பசும்பாலும் படிசேரே. 416

Koviloor Digital Library

சேரும்வெள்ளாட்டி னீர்படி மூத்திரம்
　　கூறுமப்பாலுங் கூறப் படியெடு
சீரநிம் பழச்சார் படிதானெடு
　　வாறுமேமணித் தக்காளி யூத்திடே. 417

ஊத்தும்பூனை வணங்கி யொருபடி
　　சேர்த்துமுக்கண்ணின் பாலுஞ் சமனெடை
பேத்துயெள்ளெண்ணெய் பேச வொருபடி
　　மலத்துமாமணக் கெண்ணெய் சமன்கூட்டே 418

கூட்டுமாவினெய் கூறிட வவ்விடை
　　நீட்டும்பாண்டம் நெருக்கக் கலந்துமே
ஊட்டியேகம லாக்கினி யாகவே
　　காட்டியேமெழுகு பதங் காய்ச்சிடே. 419

காச்சிமண்டலங் களிப்பாய் முழுகிடில்
　　மூச்சிடாமல் முயன்றோடும் வியாதிகள்
பேச்சில்லாமல் பெருமூச் செறிவதும்
　　மாச்சிடும்பிணி மறைத்திடும் பித்தமே. 420

பித்தம்நீங்கும் பெருவயிர் நீங்கிடும்
　　நித்தமோர்முறை நாள்விட்டு மூழ்கிடில்
சத்திவாதமுஞ் சதுர்வாய்ப் பொருமலும்
　　வற்றிநீர்முதல் வரைந்து திகைக்குமே. 421

திகைக்குங்குன்மம் திசைவாயு வெண்பதும்
　　பகைக்குஞ்சூரியன் பனிபோற் பதுங்கிடும்
நகைக்குமாந்தர் நவிலும் பிணியறும்
　　வகைக்குத் தன்வந்திரி வாகாயுரைத்ததே. 422

Koviloor Digital Library

உரைத்தாரிந்நூலுக் குற்ற பெருநூலென்
றுரைத்தேன்காவிய மாயிரத் தைந்நூறாம்
திரைத்தமானதோ ராயுறு வேதமாம்
வரைத்ததன்வந்திரி வாக்கு மெய்யாகுமே.423

மகாமேரு கற்பகத்தரு தயிலம்

ஆகுங்கற்பக மறையு மகாமேரு
வாகுநெல்லி வறையு மகாநெல்லி
பாகுமேகடுக் காயுடன் வேலியும்
சேகுசெந் நாயுருவியுஞ் சேர்த்திடே. 424

சேர்த்துகையாந் தகரை கருணைவேர்
பார்த்துமே குமட்டிக்காய்வேர் தன்னுடன்
சேர்த்துப்பஞ்சாங்க வேருஞ் சமன்கூட்டி
தீர்த்துயீசுர மூலி யரைத்திடே. 425

அரைத்துவாமணக் கெண்ணெயிற் பூட்டியே
கரைத்துப்பாண்டத்திற் கருதவே காச்சிடில்
முரைத்துமண்டல முழுகிட நோய்கள்போம்
திரைத்தநோய்களுந் தீருவ துண்மையே.426

உண்மைகேளு முதிரப் பெருக்குண்டாம்
தண்மையான தயிலத்தாற் சாவில்லை
கண்மையீசன் கருதினா ரெனக்குமே
பண்மையாகப் பகர்ந்த தயிலமே. 427

தயிலப்பெருமையைச் சாற்றிட லாகுமோ
அகிலமெல்லா மறையு மகாமேரு
பயிலமாகவே பாரில் மனிதர்க்கு
கயிலைமாமுனி கண்டு வுரைத்ததே. 428

Koviloor Digital Library

உரைத்தவாக்கு வுலகினிற் பொய்யாது
திரைத்தவேழ்கடல் திசையெட்டும் பேர்பெற்றேன்
மறைத்தபொருளெல்லா மகாமுனி யெந்தனுக்
குரைத்ததாலேநான் கூறினே னுலகிலே.429

அஷ்டமூலித் தயிலம்

உலகில்மாந்தர்க் குபயோக மாவதற்
குன்மேனி யெழிலான கையானும்
அகிலழாமல் அறையும் பெருமூலி
சகலமான தனிக்கஞ்சா சேர்த்திடே. 430

சேர்த்துவாமணக் குறிஞ்சான் மூலிமுதல்
பார்த்துவாவாரை பகரும் கொத்தமல்லி
கோர்த்துமூலிகை கூறும் படியெடை
ஆர்த்தும்பாண்ட மரையப் படியெடே.431

எடுத்துஎள்ளெண்ணெ யெழிலாய்ச் சரிகூட்டி
கொடுத்துமெழுகு தோன்றும் பதத்தினில்
விடுத்துக்காச்சி விளங்க யிறக்கியே
தொடுத்து மீசர்திருப்பதம் போற்றிடே.432

போற்றுமண்டல பொருந்த முழுகிடில்
ஆற்றும்வியாதி யறையும் வினைகள்போம்
தூற்றுமஷ்டாங்க யோகத் தயிலத்தால்
வேற்றும்வியாதி வினைகள் பறக்குமே.433

பறக்கும்பித்தம் பகரும் வாதமுதல்
சிறக்கும்பீலிகை சேர்ந்த விருமலும்
நிறக்கும்குஷ்டம் நெருங்குஞ் சொறிமுதல்
பிறக்குமேகம் பிறமேகம் போகுமே. 434

Koviloor Digital Library

போகும்பத்தியம் பொன்னாங் கண்ணி
யேகுமத்தி யிளம்பிஞ் சவரையாம்
ஆகுமுருங்கை யரிய யெலுமிச்சை
பாருபச்சை பயர்முத லாகுமே. 435

பஞ்சமூலித் தயிலம்

ஆகுமேபஞ்ச மூலித் தயிலமா
மேகும்பெரன் னாவாரை மூலிதசபலம்
பாகுமேமுதியார் கூந்த லவ்விடை
தேகுநெய்ச்செட்டித் தெளிய வறுகனும். 436

அறுகுவல் லாரையம் மூலி யவ்விடை
பருகுமூலி பகர யிடித்துமே
சருகுஎள்ளெண்ணெய் தக்க நிறையதாய்
பெருகுவாமணக் கெண்ணெயுங் கூட்டிடே.437

கூட்டியேபசும் பாலுட னவ்விடை
நீட்டுஞ்செவ்விள நீர்படி யவ்விடை
பூட்டியொன்றாய்ப் புகலக் கலந்துமே
மூட்டிப்பாண்ட முதிர்பதங் காச்சிடே. 438

காச்சியேயீசன் கருதும் பதாம்புயம்
மூச்சிடாமல் முழுகவோர் மண்டலம்
நோய்ச்சும்வினையது நோக்கிடா தோடிடும்
வாச்சுதன்வந்திரி வாக்கு பொய்யாதிதே. 439

மகாநந்தி தயிலம்

பொய்யாதையா புகலுங் குருமொழி
ஐயாநந்தி அறையுந் தயிலமாம்
செய்யநந்தியா வட்ட நெருஞ்சியாம்
பொய்யவில்வத்தின் பத்திரி வேர்கூட்டடே.440

Koviloor Digital Library

கூட்டியேகண்டங் கத்திரி வேருடன்
நீட்டுமேசங்கங் குப்பியின் வேருடன்
தீட்டுமேசிறு வழுதலை வேருமாம்
பூட்டுச்சார்வேளை புகலுந் தழுதாழை. 441

தாழைநொச்சியுஞ் சாற்றுங் கொடுவேலி
வாழைக்கண்ணால் முருக்கன் வரமுள்ளி
பேழைபேய்ப்புடல் பேசுங் கீழாநெல்லி
மேழைநன்னாரி மேவும் தசமெடே. 442

எடுத்துமேசல மெண்ணியோ ரொன்பதாம்
அடுத்துப்பாண்ட மறையக் கியாழஞ்செய்
தொடுத்துமேசலந் தோன்றும் படியதாய்
கொடுத்துமேபதங் கூற விறக்கிடே. 443

இறக்குங்கியாழ மிதனி லொருபாகம்
துலக்குமேயாக்குப் பலமீ ரெட்டாம்
துலக்கும்பாண்டந் தெளிந்த சலமெட்டாம்
பறக்கக்காய்ச்சி பகரும் சலமிரண்டே. 444

இரண்டுகியாழம் நெருங்குமுன் கியாழமாய்
கண்டுநல்லெண்ணெய் கருதிட மூன்றதாய்
விண்டுமேபசும் பாலது மவ்விடை
மொண்டுமுப்பாக மூன்றையுஞ் சேர்த்திடே.445

சேர்க்கக்கலக்கிச் சிறக்கும் வகைகேளு
பார்க்குஞ்சந்தனம் பகருஞ் சடாமாஞ்சில்
ஏர்க்குந்தாளிச மெழிலான பத்திரி
பூர்க்கும்புஷ்கர மூலமுந் தூக்கிடே. 446

Koviloor Digital Library

தூக்குமேகுட சப்பாலை யவ்விடை
தாக்குவிடையமுந் தாழ்ந்தவ ரத்தையாம்
போக்கில்லாமற் புகழுஞ் செங்கழுநீர்
தேக்குகோஷ்டந் தெளிந்த கருவேலே.447

வேலிபீர்க்கு விளங்கும் வாய்விளங்கங்
காலவட்டத் திருப்பியும் சுக்குமாம்
கோலமோமங் குறிக்கு மிளகுடன்
சீலமான திரிபாலை சேர்த்திடே. 448

சேர்த்துமேபலம் சிறக்கவே யொன்றதாய்
பார்த்துக்கிச்சிலி பகர்ந்திடு மரோகணி
சேர்த்துமந்திஷ்டி சிறந்த வாயிலியம்
ஆர்த்துச்சீரகம் அன்பான மஞ்சளே. 449

மஞ்சளான மரமஞ்சள் தக்கோலம்
கஞ்சமேசிறு தேக்கு செவியமாம்
தஞ்சமான லவுங்கப் பத்திரியாம்
கொஞ்சத்திப்பிலி மூலமுங் கூட்டிடே.450

கூட்டியேலம் குலாவும் லவுங்கமாம்
நீட்டுமதுரம் நெருங்குங் கொத்தமல்லி
மூட்டுரேணுகம் முறிந்த சாதிக்காயாம்
ஈட்டுநாகேச் சுரமுங் கஸ்தூரியே. 451

தூரிமஞ்சள் துலங்கும் வராகன்மூன்
றாரிசூரணம் அன்பாகச் செய்துமே
வாரியேபசும் பாலி லரைத்திடு
மேமீரிகாச்சியே மீள வடித்திடே. 452

Koviloor Digital Library

வடித்துஎண்ணெய் வகை கரண்டிவீதம்
குடித்துமண்டலங் கூறிடக் காலதாய்
நடித்தமேகச் சுரங்க ளிருப்பதும்
துடித்துமேயேகுந் துய்ய வினையறும்.453

அறுத்திடுஞ்சுரம் அறையும் மாறல்சுரம்
பிரிந்திடுமெட்டு நாளைக்கோர் வட்டமாம்
சரிந்திடுமொன்றை விட்டுவோர் நாட்சுரம்
தெரிந்துமேசுரம் தீரவே யேங்குமே. 454

ஏங்குமேசுரம் எழிலான பட்சமாம்
தீங்குதிங்கள் திறமா மிருதிங்கள்
பாங்குமேயாண்டு பகருமீ ராண்டுமாய்
தேங்கியேசுரந் திரண்டோடிப் போகுமே.455

போகும்பித்தம் பொரும லிளைப்புகள்
ஏகும்வாந்தி யெழிற்பெருங் காசமும்
வாகுமீளை வருங்கய ரோகமும்
போகுமாந்தையும் பொல்லா விஷந்தானே.456

தானேசூலை தரியாரண சூலைமா
மேனேகேளு மகர பெரும்பாண்டுகள்
தேனேகுஷ்டம் பெருகுந் திசைவாய்வ்
ஊனேகொல்லு முரையும் விஷம்போமே.457

போமேயண்டம் பொரும லிடிவாய்வு
நாமேசொன்னோம் நயன ரோகமுதல்
தாமேகொள்ளுந் தனிச் சயரோகமும்
ஆமேகெண்டை யறையுங் கிரந்தியே. 458

Koviloor Digital Library

கிரந்திமேகங் கிளர்க்குஞ் சடலத்தில்
நிரந்தியான நெரிய பெருங்கெண்டை
வரந்தியான வகுக்கும் வாதசூலை
பரந்தியான பருக்குங் குதிக்காலே. 459

காலேவீச்சு கழறும் பிறவீச்சு
மேலேமூச்சு மெலியும ஷ்டகுன்மத்
தாலேவந்த தனிப்பெரும் ரோகமும்
மூலரோக முளையுந் தொலையுமே. 460

துலையுமஷ்டாங்க யோகசன்னி முதல்
நிலையுஞ்சேத்துமம் நேர்ந்த தொண்ணூற்றாறு
கலையும்பீனசங் கண்ணில் நீராஞ்சனம்
புலையும்புத்து பொரும விரைப்பதே. 461

இரைப்புவாந்தி யெழிலான பாண்டுவும்
திறக்குங்காமாலை தேர்ந்ததோர் வெள்ளையும்
பறக்குமேவிஷம் பகரு மெரிவிஷம்
தீர்க்குமெண்ணெயால் தெளியவே நீங்கும்.462

நீங்குயோனி நெருங்கு மிடிசூலை
தீங்குசெய்யுந் தெளியாப் பிணிகளும்
பாங்கநாலா யிரத்துச் சில்வானமும்
தேங்குகானகந் திறந்தோடிப் போகுமே.463

போகும்நந்தி புகலு மீசர்பதம்
ஏகும்பாத மெழில்பதம் போற்றியே
பாகுதன்வந்திரி பாடு முறைபெற்றேன்
ஆகுமீச ரருளினார் பாருமே. 464

Koviloor Digital Library

அருளினாரின்னூ லாயுரு வேதமாம்
தெருளினேனிது தேருமைந் நூறதாம்
குருவின் வாய்முறை குவலயந் தன்னிலே
மருளல்லாமலே மாந்தர்க் குறைத்ததே. 465

சன்னி பதின்மூன்றுக்குந் தயிலம்

உரைக்குஞ்சன்னி பதின்மூன்றுந் தானறும்
திரைக்குஞ்சன்னி வெள்ளுள்ளி தேர்ந்ததயிலமாம்
குரைக்கவெள்ளுள்ளின் கூறுமுழக் கதாம்
நிறைக்கும்வேலி நெருங்கும் பச்சையதே. 466

பச்சைவேர்பட்டை பகர்ந்த தசதயிலமாம்
இச்சையாக வெழில்பெறத் தானரை
பச்சையாம்பசு வெண்ணெய் சமன்கூட்டி
யிச்சையாங்கலை யத்தினி லப்பிடே. 467

அப்பியேரவி தன்னிலே வைத்திடு
செப்பிடுந் தயிலமு மிறங்கிடும்
எப்பிடுந்தயி லத்தின் சமனாக
வெப்பியாமணக் கெண்ணெய் சமன்சேரே. 468

சேர்த்துமே யெருக்கம் பாலுழக்கதாய்
பார்த்துவேப்பெண்ணெய் பகர்ந்திடு மவ்விடை
கோர்த்துநொச்சிக் குலாவு முழக்கதாய்
தீர்த்துமேபெருங் கற்க வகைகேளே. 469

கேளும்புங்கு கிளர்ந்த பெருங்கிழங்
காளுமேபெருங் காயங் கடுகுடன்
நீடுமிஞ்சி நெருங்கு முருங்கைவேர்
ஆடும்பட்டை யறையப் பழமொன்றே. 470

Koviloor Digital Library

ஒன்றாய்ச்சூரண மோங்கப் பொடித்துமே
நன்றாயெண்ணெய் நவிலக் கலக்கியே
குன்றாமற்பதங் கூற வடித்துமே
வன்றாமீசன் மலர்ப்பதம் போற்றிடே. 471

போற்றிமண்டலம் புகலவே காலதாம்
ஆற்றிகாலையி லறியக் கரண்டியில்
மாற்றும்வியாதி மடியவே யேங்கிடும்
தூற்றுமேபிணி தோன்றப் பறக்குமே. 472

பறக்கும்வியாதி பகருங் கிரந்தியாம்
நிறக்கும்சில்விஷம் நேருந் தசமேகமும்
பிறக்குமேகம் பிறவீச்சு ரோகமும்
உறக்கும்ருத்ராங்க சன்னியுந் தாழுமே. 473

தாழுமேபிடரி சன்னி தளமுதல்
வீழுமேசன்னி விளங்குஞ் சூரியவாதம்
நீளுஞ்சந்தில் நெருங்கு மகாவாதம்
கேளுமடவியின் கிளர்ந்தோடிப் புக்குமே.474

நேத்திரவாய்வுமண்டையிடிக்குத் தயிலம்

புக்குமே தயிலங்க ளுரைக்கிறேன்
உக்குங்கையாந் தகரை பொன்னாங்காணி
கைக்குமே காத்தொட்டி யிலையுடன்
பொக்கற்பூற வெற்றிலை சேர்த்திடே. 475

சேர்த்துமேமூலிச் சாறு வழக்கதாம்
பார்த்துமெள்ளெண்ணெய் பகரு மரையதாம்
கோர்த்துமாவினெய் கூறிட மவ்விடை
தீர்ந்துமேபசும் பாலுஞ் சமன்தூக்கே. 476

Koviloor Digital Library

துக்கிப்பாண்டத்திற் றுய்யவே யிறுத்திடு
தாக்கியேகற்கஞ் சாற்ற வகைகேளு
போக்கில்லாத புகலு மிளகுடன்
வாக்குதப்பாமல் கஸ்தூரி கூட்டிடே. 477

கூட்டிமஞ்சள் குலாவுங் கருஞ்சீரம்
நீட்டுமேலம் நெருங்கு நற்சீரகம்
பூட்டும்வெள்லுள்ளி புகலுங் கஸ்தூரியாம்
காட்டுசந்தனங் கருதுங் கிராம்பெடே.478

எடுத்திடும் வாய்விளங்கம் வகையெடை
தொடுத்திடும் நாலுதோன்றும் வராகனாம்
அரைத்துமுன்சாற்றி லறியப் பதமாய்
திரைத்துமே பதம்தீரவே காய்ச்சிடே. 479

காச்சிமண்டலங் களிப்பாய் முழுகிடில்
போச்சுபித்தம் பெரிய மயக்கமும்
மாச்சுமேயொளி மாறா மயக்கமும்
மூச்சிடாத முயன்ற வலிபோமே. 480

போகுமாம்பல் பொருமலுடன் வீக்கம்
ஏகும்வாந்தி யெழிற்பெருங் கவிசையும்
நோகுந்தந்த நொறுங்குந் தசைவலி
யேகும்வாந்தி யெழிலாய்ப் பறக்குமே. 481

நேத்திராஞ்சனத்தயிலம்

பறக்குமே நேத்திராஞ்சனத் தயிலமாம்
நிறக்குமாந்தர்க்கு நேராய்ச் சுகம்பெற
திறக்கும்சீந்தில் சிறுகீரை நிம்பமாம்
உரைக்குமே பொன்னாங்காணியுந் தூக்கிடே 482

Koviloor Digital Library

தூக்கிநாரத்த துய்யபழச் சாறாம்
காக்குமேபடி சாற்றும் நல்லெண்ணெயாம்
போக்கில்லாமற் புகலப் படிரண்டாம்
தேக்குசண்பகம் சிறந்த சிறுநாகம். 483

நாகம்பூவாம் லவுங்க மதுரமாம்
பாகமேலம் பகரும் வகைக்கது
போகமேபலம் புகலவே காலதாய்
காகவேபலங் கருத வரைத்திடே. 484

அசைத்துப்பாண்டத்தி லன்பாய்க் கலக்கியே
திரைத்துமே மெழுகுபதங் காய்ச்சியே
முறைதப்பாமல் முழுகிவர மண்டலம்
கரைதப்பாமல் கடுகூறும் வியாதியே. 485

ஏகும்ரோக மெழிலான கண்ரோகம்
பாகும்நேத்திரம் பகருந் தசவாய்வு
வாகுபுல்ல மவருக்கும் புழுவெட்டு
போகும்ஆணிப்பூ யெல்லாம் சவ்வுமே.486

சவ்வுமேபடலம் பில்லந் தள்ளுடன்
எவ்வுங்கண்ணி லுறுத்து நீர்வடிதலும்
செவ்வலரிசி சிறந்தோடிப் போய்விடும்
கவ்வுமாவுங் கருதுந் தயிலமே. 487

சகலபிணிதீரத்தயிலம்

மேவுமாந்தர்க் குறுதித் தயிலமுன்
றாவும்நற்சீரம் அரிய கருஞ்சீரம்
காவுசோம்பு கருதிடு மேலமாம்
பாவுமதுரம் பகர்ந்திடுங் கோஷ்டமே. 488

Koviloor Digital Library

பகரும்நன்னாரி பருத் தண்ணீர்மிட்டான்
நுகருமிருவேலி நொருகும் தசவேலி
தகருஞ்சாரணை சாற்றும் பஞ்சாங்கமாம்
மகரமானதோர் மதனப்பூ சோத்திடே.489

சேர்த்துப்பத்திரி சிறந்ததுய் யானுமே
பார்த்துமேகடுக் காயுடன் தளவசம்
பேர்த்துமஞ்சள் பிரிய முருங்கையாம்
பேர்த்துவம்மானுங் கூடப் பொதிந்துமே.490

பொதிந்துமேபசும் பாலிற் கொட்டாவியாம்
நதிந்துமேயிள நீரிற் கலக்கிடில்
சதிந்தவெள்ளெண்ணெய் சாற்று மொருபடி
வதிந்துமேயாவி னெய்யுஞ் சமன்கூட்டே.491

கூட்டியொன்றாய் குமுறவே வாட்டிடு
நாட்டிமண்டலம் நவிலு முழுகிடில்
மூட்டும்வியாதி முனைந்து கலந்தோடும்
பாட்டுதன்வந்திரி பாடின துண்மையே.492

உண்மையாக வுரைத்த வியாதிபோம்
தண்மையாகப் பித்தஞ்சாற்றிடும் சேத்துமம்
வண்மையான வறட்சி சொறிமுதல்
திண்மையாகத் திரண்டோடிப் போகுமே.493

போகுஞ்சன்னியும் பொல்லா விஷமறும்
ஏகுங்காந்த லெழில் பெருகவிசையும்
நோவுசெய்யும் நொருங்கும் பெருங்குஷ்டம்
வேகுமேகம் விரைந்தோடி நீங்குமே. 494

Koviloor Digital Library

நீங்குங்காமாலை நெருங்கிடும் பாண்டுபோம்
ஓங்கும்வாந்தி யுரைக்கும் பெருவலி
தீங்குசெய்கின்ற தீராப் பிணியறும்
வாங்குவெள்ளை வறைந்தோடிப் புக்குமே.495

புக்கும் நாலாயிரத்துச் சில்வானமும்
ஒக்கும்வியாதி யுடலைவிட் டேகிடும்
வைக்குமீசனார் வகுத்திட்டா ரெந்தனுக்
கைக்குளிந்த தயிலங்க ளுண்மையே. 496

உண்மையாக வுரைக்கு மிந்நூல்போலத்
தண்மையான தனிப்பெரு நூல்களாம்
வண்மையாக வகுத்திடும் லேகியம்
திண்மையாகத் தெளிந்த கியாழமே. 497

ஆமேசொன்னோ மறையும் பற்பநூலாம்
நாமேசொன்னோம் நவிலுஞ் செந்தூரமாம்
தாமேசொன்னோம் தனிப்பெருங் கிரந்தமாம்
தேமேநூற் கோர்வை செப்பினதுண்மையே.498

உண்மையாக வுரைத்தேன் தன்வந்திரி
வண்மையானதோ ராயுரு வேதமாம்
உண்மையாக வுரைத்த தயிலமாம்
நுண்மையாக விந்நூலுந்தான் முற்றதே.499

தன்வந்திரி தயிலம் முற்றிற்று

****

Koviloor Digital Library

உரைக் குறிப்புகள்

எழுதியவர் : டாக்டர் சேதுராமன்
அகஸ்தியர் கிளினிக், 285 பைக்ராப்ட்ஸ்ரோடு
திருவல்லிக்கேணி, சென்னை- 5

கடவுள் வாழ்த்து

2- 16 ***மகாசந்தனாதி தைலம்***

உரை

சந்தனம், தேவதாரு, கோட்டம், கருஞ்சீரகம், அதிமதுரம் சமன் எடை எடுத்து அதனுடன் வாலுளுவை அரிசி, சிறுதேக்கு, சாதிபத்திரி தாளிசபத்திரி ஏலம், சுக்கு, கார்போக அரிசி, சடாமஞ்சில், சதாவேரி, சுங்கங்குப்பி, நன்னாரி, சமுத்திரப்பச்சை, பாகு, நாட்டுசர்க்கரை ஒருபலம் சலித்துஎடுத்து சீரகம் அகில் கருங்காலிப்பட்டை, திப்பிலி, சீந்தில் கருவாப்பட்டை, நெல்லி, குடமல்லி, கிராம்பு, மஞ்சிட்டி, நாகதாளி, கொடிவேலி, இந்துப்பு, கோரைக்கிழங்கு, நீலி, பொன்னாங்காணி, கண்டங்கத்திரி அரத்தை, நெய்ச்சிட்டி, செண்பகப்பூ கஸ்தூரிமஞ்சள் நிலப்பனை சித்தாமுட்டி விலாமிச்சு, வெட்பாலை சமன்தூக்கிட செண்பகப்பூ பலம்1, இருவாட்சி தழுதாழை தாழம்பூச்சாறு, மயிர்மாணிக்கம், கொட்டாங்கரந்தை வரட்பூலாவும், பாதிரிப்பூ, சமுத்திராபச்சை, தேள் கொடுக்கிலை சித்திர மூலம், கார்த்திகைக்கிழங்கு, கடுகு ரோகணி, நிலக்குமிழ் சாரணை, வெள்ளருக்கு, அருகம் புல், இவைகள் சமன் எடுத்து இடித்து 5 லிட்டர் ஜலத்தில் போட்டு காய்ச்சி பசும் பால் சமன் கூட்டி எண்ணை சமம் சேர்த்துகாய்ச்சித்தெளிவாக

Koviloor Digital Library

வடித்து பச்சைக்கற்பூரம் கஸ்தூரி குங்குமப்பூ கோரோசனை பொடித்துப் போட்டு தூபதீபம் காட்டி மண்டலம் முழுகிட நாலாயிரத்து நானூறு வியாதிகள் தீரும்.

கையான், சந்தனம், பாலைவேர், கொடிவேலி, அதிமதுரம் சண்பகம், விலாமிச்சம்வேர், வாலுளுவை இடித்து கியாழம் 3200 லிட்டர் பத்தில் ஒருபாகம் ஆக்கி இதை பசுவின்பால் நல்லெண்ணை சமன் சேர்த்துக் காய்ச்சி மண்டலம் மூழ்கிடில் நோய்கள் தீரும்.

மகாவில்வாதித் தைலம்

21- 28 வில்வம்பழம் 200, சந்தனம், கருஞ்சீரகம் கோஷ்டம், சடாமாஞ்சில், கிராம்பு, கொடி வேலி, முசுமுசுக்கை சீந்தில், கருநெல்லி, வாலுளுவை, மஞ்சள், கஸ்தூரிமஞ்சள் சுக்கு சமன்சேர்த்து இடித்து தண்ணீர்சேர்த்து பதினாலில் ஒரு பாகமாக ஆக்கி பசும்பால் எண்ணை சமம் சேர்த்து மெழுகு பதமாக காய்ச்சியிறக்கி கோரோசனை குங்குமப்பூ, கஸ்தூரி சேர்த்து தேய்த்து முழுக பித்தம் 40, காந்தல் கண்ணின் ரோகம், பீனிசம், வெட்டை, கழலை அழல்ரோகம் கண்மாலை 96 இதர சன்னி தீரும்.

வெட்டிவேர்த் தைலம்

29-34 (பொ)

கொடிவேலி, வேலிப்பருத்தி, சுக்கு, கருஞ்சீரகம், கோஷ்டம் விலாமிச்சம்வேர், சந்தனத்தூள் சமஎடையுடன் 3500 லிட்டர் தண்ணீரில் கியாழமாகச் செய்து பசுவின்பால் எண்ணெய் சம அளவு சேர்த்து காய்ச்சவும். கோரோசனை, குங்குமப்பூ, கற்பூரம், பச்சைக்கற்பூரம் பொடிசெய்து எண்ணையில்கலந்து தேய்க்கவும். இதனால் தீரும் வியாதி பீனிசம், நீர்க்கோர்வை, கண்பூழை, கண் இமையில் வரும் பூழை

Koviloor Digital Library

போகும், கண் சிவப்பு, கண்ணின் அமரம், பூ, கண் புறை மங்கல் மேகம் 20ம், பித்தம் 40, கபம் போன்ற பல பிணிகள் தீரும்.

35- 88 *கருமுள்ளித்தைலம்*

கருமுள்ளி பலம் 100, அதிமதுரம், கோஷ்டம், ஆற்றுத் தும்மட்டிகாய், 200, 100 படி தண்ணீரில் கியாழம் செய்து குறுக்கி பசும்பால் எள்ளெண்ணை சமம் கலந்து எரிக்கவும். தயிலபத்தில் எடுத்து ஒரு மண்டலம் மூழ்க வாதம், சுவாசகாம் ஈளை, மந்தார, காசம், கிரந்தி, அரையாப்பு, வெள்ளைநோய், அண்ட வாதம், பாண்டு, உடல் வீக்கம் ஆகியவை தீரும்.

39- 42 *மகா சாட்டரணைத் தைலம்*

சாட்டரணை பலம் 300, வெள்ளருகு இடித்து மண்பாத்திரத்தில் இட்டு தண்ணீர் 43 லிட்டர் விட்டு பின் அதை 1 லிட்டராக குறைத்து காய்ச்சி அதற்கு சமம் பசும்பால், எள்ளெண்ணை சமமாகக்கலக்கி ஒருமண்டலம் வாரம் இரண்டு நாள்வீதம் தலை முழுக வாதரோகம், மேகரோகம் தீர்ந்து மேனி அழகு மிளிரும்.

43- 46 *கடுக்காய்த்தைலம்*

கடுக்காய் 100 பலம், கூகைநீர் பலம் 8, 2லிட்டர் தண்ணீர் சேர்த்துக் காய்ச்சி பின் பசும் பால், செவ்விளநீர், எள்எண்ணை சம எடை சேர்த்து மெழுகுபதத்தில் வடித்து ஒரு மண்டலம் தலை முழுக கண்நோய், பீனிசம், மண்டை சூலை, வாய்வு கபரோகம். மேகம், கழல்வாதம், காய்ச்சல் தீரும்.

47- 50 *சுக்குத் தயிலம்*

சுக்கு 2 சேர், 8 மரக்கால் தண்ணீரில் சுண்டவைத்து வாலுளுவை அரிசி, சேர்த்து பாமாக வடித்து ஒரு மண்டலம்

Koviloor Digital Library

முழுகினால் கண்ணெரிச்சல், சோபம், அழல்மேகம் தணியும் முத்தோடம், ஈளை, சய ரோகம் ஆகியவை தீரும்.

51-54 நெல்லிக்காய் தயிலம்

நெல்லிக்காய் 2 சேர், வல்லாரை 1 சேர், தண்ணீர் 6 சேர் இதை ஒரு படியாக காய்ச்சி 4-ல் 1 பாகமாக்கி பசுவின்பால், நல்லெண்ணை சமன்சேர்த்து காய்ச்சி தலைமுழுக பித்தம் 40 கரும்பித்தம், மூர்ச்சை ரோகம் உன்மத்தம், கிறுகிறுப்பு சன்னி தீரும்.

55- 60 அறுகன்வேர்தைலம்

அருகன்வேர் வரட்பூலாவேர் சமன் இடித்து பாண்டத்தில் இட்டு தண்ணீரை இருநாழி சேர்த்து 4லில் ஒரு பங்காக காய்ச்சி ஆவின்பால் எண்ணை சமன் சேர்த்து காய்ச்சி வடித்து ஒருமண்டலம் தலை முழுகிவர முறைச்சுரம் கண்ணில் நீரறுகல், நீர்ப்பாய்ச்சல் புழுவெட்டு, நரை, அரையாப்பு, விந்து இழிவு, மண்டைச்சூடு, கண் புகைச்சல் பித்தம், 40-ம் உடல் காந்தல், மாந்தரோகம் தீரும்.

61- 63 மிளகுத் தைலம்

நல்மிளகு பலம் 60, மணத்தக்காளி சமன் எடுத்து காயவைத்து கியாழம் செய்து பசும்பால் சமன் சேர்த்து எள்ளெண்ணை சமன் சேர்த்து குறுகக் காய்ச்சி மண்டலம் முழுக க்ஷயரோகம், மேகம் தீரும்.

64- 67 கருஞ்சீரகத் தைலம்

கருஞ்சீரகம் பலம் 100 எடுத்து 3 லிட்டர் தண்ணீரில் போட்டு கியாழம் செய்து எரித்து பசும் பால், எள்ளெண்ணை கலந்து காய்ச்சி மண்டலம் முழுக மேகம், கருமேகம், சீதளம், கபம், ஈளை, சொறி தினவு, பொடுகு, பித்தம் 40ம் தீரும்

Koviloor Digital Library

68- 72 கார்போகவரிசித் தைலம்

கார்போக அரிசி 100 பலம், நெல்லிவற்றல், மாசிக்காய் 25 பலம் இடித்து மண் பாண்டத்தில் போட்டு 3 லிட்டர் தண்ணீரில் கியாழம் செய்து அதை 1 லிட்டராக வற்றச் செய்து எள்ளெண்ணை பசும் பால் சமமாக சேர்த்து காய்ச்சி முழுக சூலை 18, கபசூலை, வாயு, பித்தம், சிலேத்துமம் 96, உன்மத்தம் மூர்ச்சை, வாந்தி, மாலைக்கண், கண்புகைச்சல், கண்திரை ஆகியன தீரும்.

73- 78 விஷமுட்டித்தைலம்

எட்டிக்கொட்டை பலம் 100, முசுமுசுக்கை 100 பலம் நெய்ச்சிட்டி 100 பலம், சேர்த்து கியாழம் செய்து வடித்து இளநீர், வேப்பம்சாறு, எள்ளெண்ணையைச் சமம் சேர்த்து பதமாக காய்ச்சி மண்டலம் முழுக காய்ச்சல், உளமாந்தை கணக்காய்ச்சல், கிரந்தி, பெருஞ்சூலை, வெள்ளை, அரையாப்பு, கழல்வாதம், தீர்ந்து மேனி படிகம் போல் மிளிரும்.

79- 82 பொன்னாங்கண்ணித் தைலம்

பொன்னாங்கண்ணி, துத்தி, பெருமூலி, கோரைக் கிழங்கு சமன் எடுத்து இடித்து பாண்டத்தில் போட்டு கியாழம் செய்து எலுமிச்சம்பழச்சாறு, இளநீர், நல்லெண்ணை சமன் சேர்த்து காய்ச்சி மூழ்க வேண்டும்.

83- 86 கீழாநெல்லித்தைலம்

கீழாநெல்லி, பொடுதலை, மணத்தக்காளி சமன் கலந்து எள்ளெண்ணை சமன் சேர்த்து பதமாகக் காய்ச்சி 48 நாள் முழுக வாதரோகம், பித்தம் 40, கண்ணீர், கண்மறைப்பு, சொறி சிரோபாரம், படை, மாந்தை, கண்வலி, பல்நோய் ஆகியவை தீரும்.

Koviloor Digital Library

87-91 ஓமத்தைலம்

ஓமம் பலம் 10, தண்ணீர் இருதூணி, நற்சீரகம், அரக்கு அரிதாரம் சமஎடை பானையில் போட்டு தண்ணீர் தூணி விட்டு குறுக்கி சமம் பசுவின் பால் சேர்த்து காய்ச்சி பதமுடன் இறக்கி வாரம் இரு முறை முழுகினால் சன்னி 13ம், நீர்பேதி தீரும்.

92- 96 ஏலக்காய்த்தைலம்

ஏலக்காய் பலம் 100, லவங்கம், மலாக்காய் அதில் பாதி கொள்ளு பாதி நொறுங்க இடித்து ஒருபடி தண்ணீரிட்டு காய்ச்சி சந்தனம் பலம் 3 போட்டு இறக்கி மண்டலம் முழுகினால் சன்னி 14, பித்தம், சிலேத்துமம், உடல்வலி அதிசுரம் பலரோகம் தீரும்.

97-99 ஆவாரைபஞ்சாங்கத்தைலம்

பஞ்ச மாவரை பசும்பாலில் காய்ச்சி எள்ளெண்ணை சமம் சேர்த்து மண்டலம் முழுகிடில் மேகம், மந்தாரகாசம், ஈளை, பொருமல், இளைப்பு வெட்டை, கபரோகம் தீரும்.

100- 102 துவரங்குச்சித் தைலம்

துவரை சுக்கு பறங்கிசக்கை அரக்கு சந்தனம் அகில்கட்டை, நன்னாரி சமன் சேர்த்து இடித்து இருதூணி நீர் சேர்த்து பதமுடன் காய்ச்சி சமன் எண்ணை சேர்த்து காய்ச்சி முழுகிட முறைக் காய்ச்சல் பித்தம் சன்னி, தீர்ந்து மேனிபலமாகும்.

103- 105 வேலம்பட்டைத்தைலம்

வேலம்பட்டை பலம் 6, அருகன்வேர் பலம் 6, தண்ணீர் படி 1 உழக்காக குறுக்கி எள்ளெண்ணை சமன் சேர்த்து காய்ச்சி இறக்கி தலை முழுகி சன்னி 13, மேகப்படை தீரும்.

Koviloor Digital Library

106- 108 நொச்சியிரலைத்தைலம்

நொச்சி சமூலம் பாண்டத்திட்டு இருநாழி தண்ணீர் சேர்த்து கியாழமாக வடித்து நிம்பத்தின் சாறு படி அரை இளநீர் முற்றியது சமன் சேர்த்து எள்ளெண்ணை சமன் சேர்த்து காய்ச்சி மண்டலம் முழுகிட சன்னி நேத்திரவலி, புழுவெட்டு, நரம்புவலி, பிடரிவலி, உடம்புவலி தீரும்.

110- 114 மலைவேம்புத்தைலம்

மலைவேம்பு சமூலம், தண்ணீர் 2 தூணி, கியாழம்செய்து ஆடாததோடை சமன் நீர், எண்ணை சமன் காய்ச்சி இறக்கி மண்டலம் முழுகிட சன்னி 13, நடுக்குசுரம் தீரும்.

சன்னிக்குமேற்பூச்சுத் தைலம்

வெள்ளெருக்கன் சமூலம் சாம்பிராணி கியாழம் செய்து வேப்பெண்ணை சமம் பதமுடன் காய்ச்சி மேனியில் பூச சன்னி 13ம் தீரும்.

115- 118 வாதுமைக்கொட்டைத் தைலம்

வாதுமைக் கொட்டை பலம் 6, ஆமணக்கு எண்ணை சரிசமன் இரண்டையும் சமமாக அரைத்து குழித்தயிலம் இறக்கி நேராய் முழுகிட கண்புகைச்சல் மாதர்பிணி, கண்டமாலை கண்டத்திற்கு மேற்பட்ட வியாதிகள் பல தீரும். காந்தல் தீரும்.

119- 122 சித்தாமுட்டி தைலம்

சித்தாமுட்டி பலம் 100 எடுத்து நய்ய நறுக்கி தண்ணீர் நாழி சேர்த்து கியாழம் செய்து பழச்சாறு எள்ளெண்ணெய் சமன் சேர்த்து காய்ச்சி மண்டலம் முழுகிட பித்தம் தீரும், சிரோபாரம், காந்தல், கண்ணீர் வடிதலும் போகும்.

Koviloor Digital Library

122- 125 லவங்கப்பட்டை தைலம்

சன்னல வங்க பட்டை, நற்சீரகம் மஞ்சள், பன்னீர்பூ இடித்து பாண்டத்தில் இட்டு காய்ச்சி பசுவின் பால் எண்ணை சமஎடை சேர்த்து காய்ச்சி மண்டலம் முழுக மாந்தம் பொறுமல், ஈளை, பித்தம், இருமல் தீரும்.

126- 132 நன்னாரித் தைலம்

நன்னாரி பலம் 100 பானையில்போட்டு அதிமதுரம் லவங்கம், பூஞ்சாந்துபட்டை, கிளியூரல்பட்டை சமுத்திரபச்சை, கிச்சலிக்கிழங்கு, கஸ்தூரி, தாளிசபத்திரி, கொடிவேலி, வேலிப்பருத்தி, அக்கிராகாரம், கோரைக்கிழங்கு சந்தனம் வகைக்குபலம் அரை எடுத்து பசுவின் பாலில் அரைத்து கியாழம் செய்து தேங்காய் எண்ணை சேர்த்து வல்லாரை, கையாந்தகரை, பொன்னாங்காணி, ஆவாரை சமன் சேர்த்து பதமாக வடித்து முழுகிடில் சோகை, காமாலை, மேனிவெடிப்பு தீர்ந்து மேனிபொன் நிறம் ஆகும். பித்தம், மேகம், பிரமியம், கிரந்தி அரையாப்பு, நீரிழிவு, முதலியன தீரும்.

133- 135 மாம்பட்டைத் தைலம்

மாம்பட்டை பலம் 200, நிலப்பனைபலம்5, குழி மிட்டான் பலம் 5, சேர்த்து இடித்து காய்ச்சி எண்ணை சமன் சேர்த்து வடித்து முழுக மேகம், பிரமியம், சில்விடம் காணாது ஓடும்.

136-139 கையாந்தகரைத் தைலம்

கையாந்தகரை 10, பலம் தகரை 10 பலம், மிளகு 9 பலம் பசுவின் பால் சமன் சேர்ந்து கியாழம் வைத்து வடித்து எண்ணை சேர்த்து வடித்து முழுக மேகம், பித்தம், கோபம் அழலை தணிக்கும்.

Koviloor Digital Library

140- 143 மருதம்பட்டைத் தைலம்

பொடுதலை மருதம் பட்டை, வசம்பு இவ்றை அரை பாண்டமிட்டு பதக்கு சலம் விட்டு கியாழம் செய்து எள்ளெண்ணை சமன் சேர்த்து பதமாக காய்ச்சி முழுக மேகம், பாண்டு, காமாலை, ரோமம் வளரும், பெருஞ்சிரங்கு சொறி, கருமேகம் போகும்.

144- 146 கொழிஞ்சிப்பட்டைத்தைலம்

வெண் கொழிஞ்சிச் சாறு. நெல்லிக்காய்ச்சாறு சேர்த்து கியாழம் செய்து எள்ளெண்ணை சரி சமன் சேர்த்து காய்ச்சி மண்டலம் முழுக பித்தம், சூலை, மேகசூலை, கிரந்தி, சிரங்கு போகும்.

147- 149 அழிஞ்சில்தைலம்

அழிஞ்சி சமூலம் 100 பலம், நொச்சி 100 பலம் கியாழம் செய்து எள்ளெண்ணை சேர்த்து காய்ச்சி முழுக பெரும்பாடு திமிர்நோய், சர்வாங்கவாதம், இசிவு, பாண்டு ரோகம் தீரும்.

152- 153 பஞ்சமூலித்தைலம்

பொடுதலை, மணத்தக்காளி, முசுமுசுக்கை மயிர்மாணிக்கம் தோகை சமம், முடக்கொத்தான், எண்ணை சம எடை சேர்த்துக் காய்ச்சி மண்டலம் முழுக பொருமல், ஈளை, நீர்பாய்ச்சல் ரோகம் சூலை வாத சூலை, பிரமியம், பித்தம் தீரும்.

154- 157 பஞ்சபூரணத்தைலம்

அதிமதுரம், லவங்கப்பட்டை, நன்னாரி, கருஞ்சீரகம் கோரைக்கிழங்கு சமன் எடுத்து மகிழம்சாறு படி ஊசிநீர் முறையும் சமன் எண்ணை சேர்த்து காய்ச்சி வடித்து

Koviloor Digital Library

மண்டலம் முழுக மேகம் கோட்டுவாய், சூலை, க்ஷயரோகம், பிரமியம், நேத்திர ரோகம் போகும்.

- ஊசிநீர் பனிநீர் என்பது
சிறு குழந்தை சிறுநீர்

158- 162 பித்தம்தீரத் தைலம்

சீரகம்,அதிமதுரம், லவங்கம், குடோரி, கொத்து மல்லி, சந்தனம், கொடிவேலி, கொல்லங்கோவை அகிற்கட்டை, கோஷ்டம், கருஞ்சீரகம், பல்லிமூலி, பூநீர்கியாழம் செய்து பசும்பால் சேர்த்து வேப்பம்பழச்சார் சமன், சாரணை மூலிச்சார் அதற்கு தனி எடை அவ்விடை எண்ணை சேர்த்து காய்ச்சி முழுகிட க்ஷயரோகம், இருமல் தீரும்.

163- 170 சிலேத்துமம் 96க்கு தைலம்

சந்தனம், நன்னாரி, கோஷ்டம், அதிமதுரம், பற்படாகம் சமன் சேர்த்து கார்போகி, வாலுளுவை, பூண்டு, கருஞ்சீரகம், மிளகு, சுக்கு, வாய்விளங்கம், முந்திரி, லவங்கப்பட்டை, சாயகம்வேர். சீரகம், சல்லி வேர் சம எடை இடித்து கியாழம் செய்து சமன் பசும்பால் சேர்த்து எள்ளெண்ணை சமம் சேர்த்து பதமாக காய்ச்சி மண்டலம் முழுகிட பலவிதமான நோய் சயரோகம், ஈளை, சன்னி, நேத்திரரோகம் பிடரி வலி, அக்கனி, பித்தம், சூலை 18, நீர்ப்பாய்ச்சல் தீரும்.

171- 174 சோகைகாமாலை தைலம்

சுக்கு, மிளகு, ஓமம், சீரகம், சாதிக்காய், கடுகு ரோகிணி, அரத்தை, சிறுதேக்கு, இஞ்சி, கடுக்காய், ஏலம், கிராம்பு சமன் சேர்த்து பலம் ஒன்று எடுத்து பசும்பாலில் அரைத்து எண்ணையில் கலந்துகாய்ச்சி மண்டலம் முழுகிட காமாலை போகும். வாய்வு குன்மம், நீர் செரிப்பு, அக்கினி மந்தம் நெஞ்செரிச்சல் தீரும்.

Koviloor Digital Library

175- 179 பித்தவாந்தி கண்ணோய் தீரத் தைலம்

பொன்னாங்காணி, சிறுகீரை, சண்பகம் சீரகம், அதிமதுரம், கருஞ்சீரகம், கோஷ்டம், சீந்தில், சாரணை வேர்கிழங்கு, வேப்பம்முத்து பசும் பாலில் ஒருபலம் அரைத்து எள் எண்ணையில் சேர்த்து பதமாகக் காய்ச்சி முழுக (மண்டலம்) வாந்தி, கண் நோய், பித்தம் 40, வெட்டை, மயக்கம், உடம்புவலி சேத்துமம், சோகை பறந்து விடும்.

180- 184 கண்ணோய்க்கு தைலம்

அதிமதுரம் சண்பகம், சீரகம் வாலுளுவை கார்போக அரிசி, தேவதாரம், அகிற்கட்டை, கொடிவேலி, விலாமிச்சு செங்கத்தாரி சமன் எடுத்து பசும் பாலில் அரைத்து எண்ணையில் கலக்கி மண்டலம் முழுகிட கண்ணோய் 96ம் தீரும், சூலை, பீனிசம், தும்மல், கபாலரோகம், நாசிகா பீடம்ரோகம், கவுசை, காதில்சீழ், நாக்கு, தந்தம் ரோகம் தீரும், சன்னி, சூலை, குஷ்ட ரோகம் தீரும்.

185- 191 சொறிசிரங்கு தைலம்

சுக்கு, கடுகுரோகணிகண்டங்கத்திரி, பெருமருந்து முதியார் கூந்தல், கொடிவேலி, வேலிப்பருத்தி இவைகளை இளநீரால் அரைத்து பசும்பால் சமன் சேர்த்து தேங்காய் பால் சேர்த்து இரண்டு பங்கு எண்ணை சேர்த்து கலக்கி காடாக்கினியா எரித்து எடுத்த தயிலம் மண்டலம் முழுகிட மேகம் 20, சிரங்கு, சொறி தீர்ந்திடும்.

பத்தியம் : வெள்ளாட்டிறைச்சி உப்புகண்டம் தூயநெய், பசும்பால், பச்சரிசி, பச்சைபயறு முள்ளங்கி, ஆட்டு மூளை, புறாக்கறி சேர்க்கலாம்.

Koviloor Digital Library

192- 198 மேகம் 21க்குத் தைலம்

ஜாதிபத்திரி, கிராம்பு, சாதிக்காய், பரங்கிசக்கை கொடிவேலி, கோஷ்டம், கோரைக்கிழங்கு தாளிசபத்திரி, மல்லி, விலாமிச்சு, சிறுதேக்கு, சடாமாஞ்சில், சீந்தில், சமஎடை பசும்பாலில் அரைத்து எள்ளெண்ணை நாலுபங்கு சேர்த்து அதில்பாதி செவ்விளநீர் சேர்த்து அதில் கால் வேப்பம்பட்டைசார் சேர்த்து பாண்டத்தில் ஊற்றி தீபாக்கினியாய் எரித்து பதமாக இறக்கி மண்டலம் முழுகிட பிரமியம், தீராத பலபிணிகள், சொறி மேகப்பட்டை போன்ற தோல் வியாதிகள் தீரும்.

199- 203 சகலவாய்வுக்குந் தைலம்

சீரகம், திப்பிலி சுக்கு, மிளகு, கண்டத்திப்பிலி வாய்விளங்கம், தான்றிக்காய் நெல்லிவற்றல் மாசிக்காய், கோரோசனை கடுக்காய் நன்னாரி சமன் சேர்த்து நொச்சி கஷாயத்தில் அரைத்து பசும்பாலில் சமன் சேர்த்து வேப்பெண்ணை அதில் பாதி எள்ளெண்ணை நாலுபங்கு கூட்டிகாய்ச்சிமண்டலம் முழுகிட குன்மம், வாதம் வாயு, கழல் வாதம், நரிவாதம், பட்சவாதம் சிரோவாயுதீரும்.

204- 208 சூரிவித்துதைலம்

நந்தை சூரி வித்து 10 பலம், எடுத்து ஒரே விறகால் எரித்து (வேப்பம் விறகு) அதில் எள்ளெண்ணை ஒருநாழி சேர்த்து ஆற்றுதும்மட்டி நாழி சேர்த்து சுக்கு ஒருபலம் போட்டு மெழுகு பதமாக வடித்து மண்டலம் முழுகிட கிரந்தி, குஷ்டம், சூலை, குன்மம் 18, கிராணி, உள்மூலம், சூடு தீரும் மலஜலகட்டுதீரும்.

209- 211 கீழ்க்காய் நெல்லித்தைலம்

கீழ்க்காய்நெல்லி எடுத்து ஆற்று நீர் சேர்த்து இடித்து கியாழம் செய்து எட்டில் ஒன்றாகக்காய்ச்சி எள்எண்ணை

Koviloor Digital Library

படி 2 சேர்த்து சர்க்கரை பலம் 5 சேர்த்துகாய்ச்சி மண்டலம் முழுக பித்தம் வாதம், வாந்தி, கபம் தீரும்.

212- 217 காசரோகத்தைலம்

நன்னாரி, கோடகசிலை, கொத்தமல்லிவேர், சுக்கு, கிளியூரல்பட்டை, சவரிகொத்தான் கொம்பரக்கு செஞ்சந்தனம் ஆறுநாழி தண்ணீர் விட்டு எண்ணை சமன் சேர்த்து மண்டலம் முழுகிட மேனிக் கொதிப்பு, காசரோகம், மேகம், பிரமேகம் குளிர்காய்ச்சல், பித்தரோகம், வற்றியமேனி பெறுக்கும், வெள்ளை க்ஷயரோகம் வாந்தி, ரத்தபித்தம், மூலம் மற்றும் ஜடத்தினை பற்றிய வியாதி தீரும்.

பத்தியம் :- காடை புறா இறைச்சி, உப்புகண்டம், கத்திரி முருங்கை சேர்த்து இதர பொருள் விலக்கவும்.

218- 223 கிராணித்தைலம்

ஜாதிபத்திரி, ஜாதிக்காய், லவங்கம், கசகசா அதிவிடையம் சமன் எடுத்து சூரணித்து ஆறுபடி தண்ணிசேர்த்து கியாழம் செய்து வாலுளுவை அரைத்து கலந்து ஆமணக்கு எண்ணை ஒருநாழி எள்ளெண்ணை 2 நாழி சேர்த்து காய்ச்சி மண்டலம் முழுகிட கிராணி. அதிசுரம் பாண்டு, நீராம்பல், பித்தம், தீரும்.

224- 229 திமிர்படைக்குத்தைலம்

தாமரை, வெண்துளசி, வேம்பு, நிலவேம்பு, திப்பிலி, வேலிப்பருத்தி, வெந்தோன்றி, நாகமல்லி சிறுசந்தனம், பொன்னாங்காணி, சிறுசெறுப்படி, சமுத்திராப்பச்சை, பறங்கி சிறுகாஞ்சோரி, அரசமர புல்லுருவி, சடாமாஞ்சி, மஞ்சிட்டம், ஏலம், பட்டை, எட்டிக்கொட்டை,வேலம்பட்டை, கருவாபட்டை, சிறுபூளைகாய், பால், சமன் கூட்டி கியாழம் செய்து எண்ணை சமன் சேர்த்து முழுகிட திமிர், படை தீரும்.

Koviloor Digital Library

230- 243 சூசிகாவாயுவுக்குத்தைலம்

நாவல்பட்டை, அதிவிடயம் ஆரைக்கீரை, கோரைக்கிழங்கு, நரிக்கொன்றை, திப்பிலி, கொல்லன் கோவை, அரத்தை, நெல்லி, நிலாவாரை, புனுகு, மாவிலிங்கம், கரும்பு, சீந்தில், ஆவரை, பஞ்சலவங்கம், சுரை, அரசு, ஜலமுட்டி சந்தனம்,தாமரை, திரிபலா, நத்தை, சூரை, புளி மா மூங்கில் எட்டிக்கொட்டை நீற்சுண்டி பூனைகாலி விடத்தேற்றி காதொட்டி, தும்பை, நெருஞ்சில், மட்டிப்பால் வெட்டி வேர், காத்தொட்டி கஸ்தூரி, மல்லி, மரமஞ்சள், பெருங்காயம், நீர்முள்ளி, கடம்பு, கிரந்தி, நாகம், வெந்தயம் பெருமருந்து நன்னாரி வெட்பாலை, நொச்சி முல்லை, மருதாணி இலந்தை அல்லி சடாமாஞ்சி மஞ்சகடம்பு மல்லி விலாமிச்சி கோட்டம் நிலா அதிமதுரம் கொடி வேலி தண்ணீர்மிட்டான் வில்வம் நாய்வேளை துத்திசமூலம் அஞ்சனம் சேர்த்து இடித்து தண்ணீர் 12 படி சேர்த்து குறுக்கி இறக்கி அவ்விடை எள்ளெண்ணை சேர்த்து மண்டலம் முழுகிட சூதகவாய்வு தீரும். புளி தள்ள வேண்டும். வெள்ளாட்டிறைச்சி உப்புகண்டம், காடை, முயல், புறா உண்ணலாம்.

244- 247 சீரகத்தைலம்

நற்சீரகம் 10 பலம், அதிமதுரம் கால்பலம் எலுமிச்சைச்சாற்றில் அரைத்து பசுப்பாலில் கலந்து எள்ளெண்ணை சமன் கூட்டி காய்ச்சி பதமாக வடித்து மண்டலம் முழுகிடில் மேகம் தீரும். நீர் பாய்ச்சல் பித்தம் பொருமல் வாயு, வெட்டை, பிரமியம், அழலை, கண் நோய் தீரும்.

248- 253 கிச்சிலித்தைலம்

கிச்சிலிப்பழம் நூறு எடுத்து சாறுபிழிந்து கருஞ்சீரகம் அதிமதுரம் வில்வம், ஏலம் அறுகு ஆகியவை ஒருபலம் எடுத்து

Koviloor Digital Library

பழச்சாற்றில் அரைத்து பசும் பாலில் கலக்கி எள்ளெண்ணை சமம் சேர்த்து காய்ச்சி பதமாக வடித்து மண்டலம் முழுக பிரமியம், கிரந்தி, சிரங்கு, கபாலநோய், வாய்நீர், ஊரல், பித்தம், காசம், இருமல், ஈளை, கபம், பொருமல், வாந்தி, தலைவலி, மயக்கம், கடும்வழலை நோய், நேத்திரவாய்வு தீரும்.

254- 259 எலுமிச்சம்பழத்தைலம்

எலுமிச்சம் காய் 100, நன்னாரி பலம் 1, கொடி வேலி, விலாமிச்சு, அதிமதுரம், நற்சந்தனம், வாலுளுவை அகிற்கட்டை இவைகளை எலுமிச்சம் பழச்சாற்றில் அரைத்து இளநீரில் கலக்கி எள்ளெண்ணை சமம் சேர்த்து ஆமணக்கு எண்ணை கால்பாகம் சேர்த்து காய்ச்சி மண்டலம் முழுக, பித்தம் மூர்ச்சை நேத்திர ரோகம், கண்ணறுகல், கை கால் வலி, எரிச்சல் காய்ச்சல், கிரந்தி, வாதகுடைச்சல், மேகச்சூடு தீரும்.

260- 264 கோரோசனை தைலம்

கோரோசனை பலம் 1, பசுவெண்ணை பலம்1, ஆமணக்கு எண்ணை பலம் 10, எள்ளெண்ணை பலம் 10, கலந்து காய்ச்சி முழுகிட சன்னி 13, காசரோகம், பித்தம், கழல்வாதம் கிரந்தி, வெட்டை, நீராம்பல், கிராணி, குன்மம், சொறி, பெருஞ்சொறி தீரும்.

265- 267 கஸ்தூரித்தைலம்

கஸ்தூரி வராகன் பசும்பாலில் அரைத்து ஆமணக்கு எண்ணை கலந்து காய்ச்சி முழுகிட பெரும்ரோகம் தீரும். காந்தல், கபரோகம் தீரும் மேனி பொன்னிறமாகும்.

268- 271 குங்குமப்பூத்தைலம்

குங்குமப் பூ பலம் 1 வெண்ணையில் அரைத்து ஆமணக்கு எண்ணையில் கலந்துகாய்ச்சி மண்டலம் முழுகிட நாசிரோகம் பீனிசம் தீரும்.

Koviloor Digital Library

271- 272 சன்னி 13க்கும்மேற்பூச்சுத்தைலம் சாம்பிராணித் தைலம்

சாம்பிராணி, அரக்கு, வேப்பெண்ணை பலம் 10 இவைகளை கலந்து வாலையில் வடித்து பூசினால் சன்னி 13ம் தீரும். இசிவு தீரும்.

273- 277 கற்பூரத்தைலம்

கற்பூரம், பாறையுப்பு முப்பு, வெடியுப்பு, மிளகு சமன் கூட்டி காட்டாமணக்கு பாலில் அரைத்து குழித்தயிலம் இறக்கி சன்னிக்கு பூச பறக்கும்.

278- 280 அண்டவாதத்தைலம்

வெள்ளுள்ளி கழற்சிப்பருப்பு காயம் சமன் கலந்து கோழிமுட்டை இருபது சேர்த்து ஆமணக்கு எண்ணையில் காய்ச்சி வடித்து பூசி பூவரசன் மூலிகூட்டி கட்டிவிட அண்டவாதம் தீரும்.

281 - 283 காமாலைத்தைலம்

கையான், மிளகு, சீரகம், அதிமதுரம், மஞ்சள் சமன் சேர்த்து நீர்முள்ளிச் சாற்றால் அரைத்து பசும்பால் சம எடை சேர்த்து எண்ணை சமஎடை சேர்த்து பதமாகக் காய்ச்சிசவாரம் இருமுறை முழுக காமாலை தீரும்.

284- 318 4448 வியாதிக்கு ஏகமூலித்தைலம்

மல்லி, நொச்சி முசுமுசுக்கை, நெல்லி, பற்படாகம், கொடி வேலி, வேலிபருத்தி, அகத்தி, காக்கனம், செவ்வகத்தி கண்டங்கத்திரி, கொடுப்பை, ஆதொண்டை ஆடாதோடை

Koviloor Digital Library

நற்பாலை ஊமத்தை, சங்கு, துராப் பூண்டு, பூண்டு, கட்டுக் கொடி, மலைவேம்பு பசலை இவை சமஎடையில் ஆடாதோடை அழலவணம், ஆடை ஒட்டி, ஆலரி, ஆற்றலரி குப்பி சங்கங்குப்பி குப்பைமேனி வெட்பாலை பாளை சிறுகுறிஞ்சான் புன்கு ஊமத்தை பீநாறி வெள்ளறுகு பொன் முசுட்டை நிலவேம்பு எழுத்தாணிபச்சிலை சாணாக்கீரை, முல்லை, நஞ்சு முறிச்சான், பொன்னாங்காணி கையாந்தகரை கரும்பூனைக்காலி பெருமூலி கருங்காலி அவுரி திருநீற்றுபச்சை பெருங்குமிழம் குழிமிட்டான் பிரம்பி, கொன்றை, கிளா அவுரிமூலி தூதுவேளை வாகை பெருவாகை துளசி மாதுளை ஆவாரை நெட்டி சிறுபனை முள்ளுமுருங்கை வெள்ளை காக்கணம் சிறுகளா கருஞ்செம்பை கோவை செங்காலி நாயுருவி புங்கம் பாதிரி வில்வம் கற்பாசி கடல்பாசி கொல்லிமூலி கழற்சி மல்லி நாகமல்லி கிலுகிலுப்பை காட்டுக்கருணை கடம்பம் சிவப்புகாக்கணம் மூங்கில் கோங்கு கற்றாழை பேயத்தி சிறுவிழி கோரை அத்தி தேள்கொடுக்கு இலை சத்திச்சாரணை சிறுகரந்தை சிறுதுத்தி மருக்காரை பேய்க்குமட்டி நரளை புல்லுருவி கருங்காலி வரிக்குமட்டி பேய்ப்பாகல் சிறுகாஞ்சோரி கல்வாழை கானாங்கீரை கோழியவரை சிறுசெறுப்படை முருங்கை குவளை காட்டுகொழிஞ்சி வேலிப்பருத்தி பிரண்டை முதியார் கூந்தல் பாதிரி கோடகசாலை பாக்கு தாமரை நாணல் குன்றி மருதோன்றி பூசணி புளி நரளை தாளிசம்தும்பை நுணாஇலை காட்டத்தி சின்னி மாவிலிங்கம் தேக்கு சிவதை நிலவாகை நிலக்கடம்பு காட்டுக் கோழிமுட்டை கரும்செம்பை பெறும்குறிஞ்சான் அவரை குருக்கத்தி வெண்தோன்றி பேயச்சுரை காவட்டம்புல் இஞ்சி சிறுதாளி சிறுகாஞ்சோறி வெள்ளெரி கோங்கு தூரா சுணாக்கி பேய்மிரட்டி காக்கணம் தேள்கொடுக்கு செங்கழுநீர், நீர் முள்ளி செங்கீரை அசோகம் நாணல் நாய்வேளை, வெள்ளாம்பல் வெற்றிலை

Koviloor Digital Library

கட்டுக்கொடி மூலம் (முடக்கெத்தான்) நஞ்சறுப்பான் நெறிஞ்சி கடப்பம் கஞ்சா, கோழியவரை, பெறுகடம்பம் சீதேவி (மஞ்சள்) களாப்பூ தண்ணீர்விட்டான், பெருநெல்லி, சிவதைவேளை சடாதரி சடைச்சி எருக்கு கவிழ்தும்பை பின்னை மரிக்கொழுந்து வன்னி, சடைகஞ்சி சமுத்திராபச்சை வாதமடக்கி பெருமூலி முள்ளங்கி செம்பருத்தி காட்டு நொச்சி, கருந்துளசி பூண்டுமூலி இவைகளை சமமாக எடுத்து இடித்து சார்பிழிந்து பாண்டத்தில் இட்டு எள்ளெண்ணை சமஎடை சேர்த்து மெழுகுபதம் வடித்து மண்டலம்முழுகிட ஈளை பெரும்பீளை, காந்தல், இருமல், கண்ணெரிச்சல் ரோகம், குன்மம் 18, மாந்தம் பெருமாந்தம், குறை நோய், பெருங்குஷ்டம் வாதம் பித்தம், திமிர்வாதம் காசம் சுவாசம் கிரந்தி புழுவெட்டு, கண்படலம், சூலை, மேகம் பெரும்பாடு, கழலை சன்னி 13, சேத்துமம் 96 மேகசுரம், பிரமியம் நீரிழிவு கழல் வாதம் படைசொறி பீனிசம் நேத்திரவாயு பல்நோய் அறையாப்பு கண்டமாலை மூப்புநோய் முயல்வலி கண்டவலி நமக்கண்டவலி வாய்ப்புண், நாற்றம், இவ்வாறு 4448 வியாதி தீரும்.

319- 326 புஷ்பபாணத்தைலம்

மல்லி ஊசிமல்லி மகிழம் பன்னீர்ப்பூ கஸ்தூரி ஆற்றலரி முல்லை பெருந்துரா தாமரை அல்லி ஆம்பல் செம்முருக்கன் முருங்கைப்பூ அகத்தி பாதிரிப்பூ பத்திராட்சி கோங்கிலவு செம்பருத்தி மனோரஞ்சிதம், துத்திப்பூ, நுணாப்பூ கலியாண முருங்கைபூ காட்டத்திபூ நாகப்பூ சமன் எடுத்து பாண்டத்தில் போட்டு கியாழம் செய்து எண்ணை இருமடங்கு கூட்டி பசும்பால் அரை பங்கு சேர்த்து காய்ச்சி வடித்து முழுக மேகம், பிரமேகம், பித்தம் வாய்நீர் ஊருதல், உடல்சூடு தீர்ந்து உடம்பு மணக்கும்

Koviloor Digital Library

327- 331 *மகிழம்பட்டைத்தைலம்*

மகிழம்பட்டை பலம் 10, கருஞ்சீரகம் கியாழம் செய்து எட்டில் ஒன்றாக்கி வடித்து பசும்பால் இளநீர் சமஅளவு சேர்த்து எள்ளெண்ணை கலந்து பதமாகவடித்து முழுக பித்தம், வாதம், மயக்கம் வாய் நீர் ஊரல், பிதற்றல், மதமூர்ச்சை ஈ.ளை தீரும்.

332- 336 *அகிற்கட்டைத்தைலம்*

அகிற்கட்டை பலம் 100 செங்கரும்பு சாறுடன் (படி 12) கஷாயம் செய்து எட்டில் ஒன்றாக்கி பசும் பால் இதனை சமன் சேர்த்து எள்ளெண்ணை சமன் சேர்த்து காய்ச்சி (நாலுசாமம்) மண்டலம் முழுகிட சன்னி, பீனிசம் மேகபற்று, பித்தம், கடும்பித்தம், வாதம், சிலேத்துமம், மாந்தை, இருமல் தீரும்.

337- 341 *காஞ்சுறாத்தைலம்*

காஞ்சுற ஒருநாழி பிழிந்து கோழியாவரை சமன் சேர்த்து இளநீர் பசும்பால் கலக்கி எள்ளெண்ணை சேர்த்து காய்ச்சி வடித்து மண்டலம் முழுகிட காசம், இரத்தபித்தம், மந்தாரகாசம், பாண்டு, சன்னி, சூலை, கபரோகம், சோகை, சொறி சிரங்கு தீரும்.

342- 345 *நிலக்கடம்புத்தைலம்*

நிலக்கடம்பு பலம் 10 எடுத்து கியாழம் செய்து ஆமணக்கு எண்ணை பலம் 10 சேர்த்துக் காய்ச்சி மண்டலம் முழுகிட குஷ்டம் திமிர்நோய் கழல்வாதம் நீராம்பல் பீனிசம் நீர்ப்பாய்ச்சல் விலகும்.

Koviloor Digital Library

346- 350 நுணாப்பட்டைத்தைலம்

நுணாப்பட்டை பலம் 20, தண்ணீர்துாணி சேர்த்து காய்ச்சி கியாழம் செய்து இளநீரும் வேப்பம் பழச்சாறை சமஎடை எள்ளெண்ணை சமன் சேர்த்து காய்ச்சிமெழுகு பதத்தில் வடித்து மண்டலம் முழுகிட முறைக் காய்ச்சல் குன்மம் ரணம், அரையாப்பு, காய்ச்சல், விடாக் காய்ச்சல், கிரந்தி தீரும்.

351- 359 மனோரஞ்சிதபாணத் தைலம்

மனோரஞ்சிதம் ஒரு சேர் சேர்த்துக் காய்ச்சி ராஜாளிபழம் சமம் பசும்பால் எள்ளெண்ணை சமம் சேர்த்து காய்ச்சி மண்டலம் முழுகிட பிரமியம் நாற்றம் கபஈளை குறைநோய் கூந்தல் வளரும் வெண்மயிர்கருத்திடும் மேனி மணக்கும் பலநோய்தீரும், இறைப்பு இருமல் தீரும், காந்தல் பித்தம் வாதம் சேத்துமம் மேகம் வாய்நாற்றம் கிரந்தி புற்று கண்ட மாலை நரம்புசிலந்தி தீரும்.

357- 362 பரிமளகெந்தித்தைலம்

குகுவேர் மரிக்கொழுந்து விலாமிச்சம் கொடி வேலி கிச்சிலி பலம் 10, பன்னீர் இருனாழி நல்லெண்ணை சேர்த்துக் காய்ச்சி மண்டலம் வார இருமுறை முழுகிட கண்ணோய் தீரும். கூந்தல் வளரும் பித்தம் மதமூர்ச்சை வாயூறல் மேகம் பிரலாப சன்னி, தழல் கபம் ஈளை நேத்திரவாயு கண்ணோய் நீர்பாய்ச்சல் பீனிசம் கால் கைவலி பிறவிசன்னி தீரும்.

362- 366 சுகந்தவாரிதைலம்

காற்றாழை தண்ணீர்விட்டான் அன்னாசிபழச்சார் கிச்சிலிபழச்சாறு சமன் கூட்டி எள்ளெண்ணை சமம் சேர்த்து

Koviloor Digital Library

மெழுகுபதம் காய்ச்சி பதமாகவடித்து முழுக பித்தம் 40, வாதம் பெருநோய் கபாலநோய் நீரிழிவு ரத்தமூத்திரம் தீரும்.

367- 374 மன்மதவலீலைத்தைலம்

கிராம்பு கருவாய்பட்டை ஜாதிக்காய் வெள்ளரி முருங்கை ஏலம் மருக்காபட்டை மகிழம்பூ கையான் சதக்குப்பை பொன்னாங்காணி பிரண்டை அதிமதுரம் தான்றிக்காய் மருத்தோனி சாம்பிராணி கஸ்தூரி குங்குமப்பூ பச்சைகற்பூரம் பன்னீர்பூ பேதா காட்டு மல்லி சமன் எடுத்து ஒரு படி தண்ணீர் விட்டு கியாழம் செய்து பசும்பால் எள்ளெண்ணை சமம் சேர்த்து காய்ச்சி மண்டலம் முழுகிட மேகம். தீரும் புணர்ச்சிக்கு உதவும்.

பத்தியம் :- காடை புறா முருங்கை கச்சல் கத்திரி கொத்தமல்லி வெள்ளட்டிறைச்சி பசும்பால் நெய் வாதுமை குலாவும் முந்திரிபழம் சேர்க்கலாம்.

375- 379 சீதாதேவித்தைலம்

நன்னாரி, காட்டுச்சீரகம், கொடிவேலி, நிலப்பனை துளசி, கலப்பை கிழங்கு, கடுகுரோகிணி, சடாமாஞ்சில், இலுப்பை சமன் எடுத்து கியாழம் செய்து காய்ச்சி எள்ளெண்ணையில் கலந்து பதமாக வடித்து மண்டலம் முழுகிட பித்தம் மற்றம் பல ரோகம் தீரும்.

380- 383 கோரைக்கிழங்குதைலம்

கோரைக்கிழங்கு பலம் 100, கிச்சிலிக்கிழங்கு பலம் 10, கொடிவேலி பலம் 6, ஜாதிபத்திரி பலம் 10 தேக்கு தளரிசபத்திரி, சீரகம் திரிபலை எடுத்து கியாழம் செய்து

Koviloor Digital Library

வடித்து எள்ளெண்ணை சேர்த்து வடித்து மண்டலம் முழுக நீண்டநாள் வியாதி மயக்கம் கபம், சூலை ரோகம் தீரும்.

384- 390 மகாகீழாநெல்லித்தைலம்

கீழாநெல்லி வில்வம் சமம் சேர்த்து கொடிவேலி பலம் 1 சீரகம் பலம் 2 அலை முந்திரிபலம் 1 சந்தனத்தூள் பலம் 1 தண்ணீர் 8 படி விட்டு 1 படியாக காய்ச்சி எள்எண்ணை படி சேர்த்து கடுகு பதமாகக் காய்ச்சி கிச்சிலிக்கிழங்கு சமுத்திராபச்சை, துரவி வடித்து மண்டலம் வாரம் ஒருமுறை முழுக கபாலச்சூடு, காமாலை சூலை கண்புகைச்சல் மேகம் வயது முதிர்ச்சி தீரும்.

391- 396 மகாதேவரஞ்சிதத்தைலம்

இலவங்கப்பட்டை பலம் ஆலம்பட்டை தில்லை பட்டை சிவனார் வேம்பு பட்டை வகை பலம்1 அகிற்பட்டை, 6 பலம் பழச்சாற்றில் இடித்து பத்து பலம் சாறு எடுத்து பசும் பால் சமம் எள்ளெண்ணை சமம் சேர்த்து மண்டலம் முழுகிட பித்தம், வாதம், குன்மம், சூலை, பெரும்பாடு, ரத்தபித்தம் தீரும்.

397- 401 வாலுழுவைதைலம்

வாலுழுவை பலம் 10, சோம்பு கோரைக்கிழங்கு பேராமுட்டி வகைபலம் 10 பசும் பாலில் அரைத்து ஆவின் பால் இளநீர் அரை படிகலக்கி எள்ளெண்ணை கலந்து! காய்ச்சி இறக்கி மண்டலம் முழுகிட பித்தம், சிரசுநோய் வாதம் மகாரோகம், மேகப்படை, குஷ்டம், கடுரோகம் திமிர்படை தீரும்.

402- 407 செந்நாவற்பட்டைதைலம்

செந்நாவற்பட்டை 6 பலம் இலந்தம்பட்டை பலம் 10

Koviloor Digital Library

வேண்தோன்றி பட்டை ஆவாரைபஞ்சாங்க பட்டை பலம் 10, எலுமிச்சம்பழம் சாற்றில் இடித்து பதக்குசாறு எடுத்து எள்ளெண்ணை சமன் சேர்த்து பசுவின்பால் கூட்டி காய்ச்சி முழுகிட பாண்டு, பித்தம் கபம் மார்வலி, குஷ்டம், பொருமல் ஈளை வாந்தி காசம் ரோகம், காந்தல், மூலம் மூளை மூலம் தீரும்.

408- 415 உடல்தளர்ச்சி நீங்க சர்வாங்கராஜ யோகதைலம்

சந்தனம், அகிற்கட்டை, பூலா, வகை பலம், 1 செஞ்சந்தனம் கோரைக்கிழங்கு, விலாமிச்சு, சிறு தேக்கு ஜாதிபத்திரி, ஆவாரை நன்னாரி, வாலுழுவை, கிச்சிலிக்கிழங்கு, மஞ்சள், வால்மிளகு வகைபலம் சதகுப்பை, பற்படாகம், பேதனா, நந்தியாவட்டம் பழச்சாற்றால் அரைத்து சமஎடை எள்எண்ணெய் கலந்து காய்ச்சி மண்டலம் மூழ்கிட நேத்திரரோகம், சன்னி, சர்வாங்க வாதம், பித்தம், பிடரிநோய் கண்பிறை, கண்காசம், சயகாசம், கைகால் குறைநோய் குஷ்டம் தேமல் இத்தைலத்தால் தீரும்.

416- 423 கபாலபுற்று, பீனிசம், காதிற்சீழ் தீர்வதற்கு மகாபூர்வக்கியானதைலம்

பசுமூத்திரம் படி, பசும் பால் படி 1, பழச்சார்படி 1 வெள்ளாட்டு நீர் படி, வெள்ளாட்டுப் பால் படி, மணத்தக்காளிச் சார் படி 1, பூனை வணங்கி (குப்பை மேனி) சார் படி 1, தேங்காய் பால் படி 1, எள்எண்ணை படி 1 ஆமணக்கு எண்ணை படி 1 ஆவின் நெய் படி 1 கமலாக்கினியாக எரித்து மெழுகு பதம் காய்ச்சி மண்டலம் மூழ்கிட பெருமூச்செறிதல் பித்தம், பெருவயிறு, சத்திவாதம் குன்மம் வாயு எண்பதும் தீரும்.

Koviloor Digital Library

424- 429 மகாமேரு கற்பகத்தருதைலம்

நெல்லி, கடுக்காய் கொடிவேலி, செந்நாயுருவி கையாந்தகரை கருணைகிழங்கு வேர், குமட்டிவேர் ஆவாரை வேர், ஈசுரமூலி வேர் அரைத்து ஆமணக்கு எண்ணையில் கலந்து மூழ்கிட இரத்த விருத்தி ஆகி உடம்பு பலமிகும்.

430- 435 அஷ்டமூலித்தைலம்

குப்பை மேனி, கையான், பெருமூலி, கஞ்சா குறிஞ்சான் ஆவாரை, கொத்தமல்லி படி 1, பாண்டத்தில் போட்டு எள்எண்ணெயை சரியாக்கூட்டி மெழுகு பதம் வடித்து மண்டலம் முழுகிட பித்தம், வாதம், இருமல், குஷ்டம், சொறி மேகம், பிறமேகம் தீரும்.

பத்தியம் :- பொன்னாங்காணி, பிஞ்சு அவரை, முருங்கை, எலுமிச்சை, பச்சை பயர் ஆகும்.

436- 439 பஞ்சமூலித்தைலம்

பொன்னாவரை பலம் 10, முதியார் கூந்தல் 10 நெய்சிட்டி, அறுகன், வெள்ளெருகு, வல்லாரை சமம் எடுத்து இடித்து எள்எண்ணை சமம் சேர்த்து ஆமணக்கு எண்ணை சமம் சேர்ந்து செவ்விளநீர் விட்டு காய்ச்சி மூழ்கிட எல்லா வியாதியும் தீரும்.

440- 465 மகாநந்தித்தைலம்

நந்தியாவட்டம், நெருஞ்சி, வில்வம், பத்திரி வேர் கண்டங்கத்திரி, சங்கங் குப்பிவேர், சிறுவழுதலை வேர், சார் வேளை வேர், தழுதாழை வேர், நொச்சி, கொடிவேலி முள்ளி, முருக்கன், வாழைக் கிழங்கு வேர், பேய்ப் புடல், கீழாநெல்லி,

Koviloor Digital Library

நன்னாரி வகைபலம் 10, ஒன்பதுபடி தண்ணீரில் போட்டு கியாழம்செய்து 1 படியாக குறுக்கி இறக்கி 6 பலம் கியாழம் பாண்டத்தில், தெளிந்த ஜலம் 8 படி இரண்டையும் காய்ச்சி நல்லெண்ணை மூன்றுபங்கு சேர்த்து பசும்பால் அவ்விடை ஆகிய மூன்றையும் சேர்த்து சந்தனம், சடாமாஞ்சில் தாளிசம், ஜாதிபத்திரி, புஷ்கரமூலம், குடசப்பாலை. அதிவிடையம், சித்தரத்தை செங்கழுநீர் கோஷ்டம், கருவேலம், பாகம், வாய்விளங்கம், வட்டத்திருப்பி, சுக்கு , ஓமம், மிளகு, திரிபலை, வகை பலம் 1 கிச்சிலி, கடுகுரோகிணி, மஞ்சிட்டி, ஆயில்பட்டை, சீரகம் மஞ்சள், மரமஞ்சள், தக்கோலம் சிறுதேக்கு செவ்வியம், லவங்கப்பத்திரி, திப்பிலிமூலம் லவங்கம் ஏலம் அதிமதுரம், கொத்தமல்லி, குரோசாணி ஓமம், சாதிக்காய், நாகேஸ்வரம், கஸ்தூரி மஞ்சள் ஆகியன வற்றுடன் 3 சூரணித்து பசுமபாலில் அரைத்து கலந்து காய்ச்சி அரைத்து எண்ணை ஒரு கரண்டி சாப்பிட்டு வர மேககரம் 20, மாறல்சுரம் ஒரு நாள்விட்டு ஒரு நாள் வரும்ஜுரம், பட்ச ஜுரம், ஆகியன தீரும்.

பித்தம், பொருமல் அரையாப்பு சயரோகம் மாந்தை, விரல் வாதம் குஷ்டம் திசை வாயு, அண்ட வாய்வு தனிசயம், கொண்டை வாயு கிரந்தி, மேகம், கழலை, வாதசூலை குதிகால் வாதம், புறவிச்சு, மேல் மூச்சு, அஷ்ட குன்மம் பெருரோகம், மூலரோகம், சன்னி, சேத்தும் ரோக பீனிசம் கண்ணில் நீர், பொருமல், இரைப்பு, வாந்தி, பாண்டு, காமாலை, வெள்ளை, எலிவிஷம், யோனி சூலை, இடி சூலை நாலாயிரத்து நானூறு வியாதியும் தீரும்.

466- 474 சன்னி 13க்குதைலம்

வெள்ளுள்ளி தயிலம் உலக்கு, கொடிவேலி, திருநீந்றுப்பச்சை வேர், பட்டை தயிலம் 10, பசுவெண்ணை சமன் கூட்டி கலயத்தில் சூரியபுடம் வைக்க தயிலம் இறங்கும்

Koviloor Digital Library

இத்தயித்திற்கு சமமாக ஆமணக்கு எண்ணெசேர்த்து எருக்கம் பால் உழக்கு வேப்பெண்ணை உழக்கு நொச்சிசார் உழக்கு, நொச்சிசார் உழக்குடன் புங்கு, பெருங்கிழங்கு பெருங்காயம், கடுகு, இஞ்சி, முருங்கைவேர், பட்டை பலம் 1 சூரணித்த எண்ணையில் கலக்கி பதமாக வடித்து மண்டலம் காலையில் 1 கரண்டி சாப்பிட கிரந்தி, சில்விஷம், மேகம் 10 பிற விச்சு, சன்னி, ருத்ராயகசன்னி., பிடரிசன்னி சூரியவாதம். சந்துவாதம், தீரும்.

475-481 நேத்திவைாய்வு மண்டையிடிக்குத் தயிலம்

கையாந்தகரை, பொன்னாங்காணி, காத்தொட்டி கற்பூர வெற்றிலை சாறு உலக்கு எள்ளெண்ணை உழக்கு ½ ஆவின் நெய் உழக்கு ½ பசும் பால் சமஎடை சட்டியில் போட்டு அத்துடன் மிளகு கஸ்தூரி மஞ்சள் கருஞ்சீரகம் ஏலம், நற்சீரகம் கஸ்தூரி வெள்ளுள்ளி, சந்தனம், கிராம்பு, வாய்விளங்கம், வராகன் எடை, எடுத்து கற்பூர வெற்றிலை சாற்றில் அரைத்து கலக்கி காய்ச்சி மண்டலம் மூழ்கிட மயக்கம், கண் இருளல், முயலகவலி, ஆம்பல் பொருமல், வீக்கம் வாந்தி பெருங்கவிசை தந்தரோகம் தசைவலி தீரும்.

482-487 நேத்திராஞ்சனத் தைலம்

சீந்தில் சிறுகீரை வேப்பம் பொன்னாங்காணி நாரத்தம் பழச்சாறு நல்லெண்ணை படி 2 சிறுதேக்கு சண்பகம், சிறுநாகம் நாகப்பூ, லவங்கம், அதிமதுரம் ஏலம் பலம் கால் எடுத்து அரைத்து பாண்டத்தில் கலக்கி மெழுகு பதம் காய்ச்சி மண்டலம் மூழ்கிட கண்ரோகம் நேத்திரவாயு தசவாயு புழுவெட்டு ஆணிப்பூ கண்திரை படலம், பில்லம், கண் உறுத்தல், நீர்வடிதல், கண்சிவப்பு ஆகிய நோய் தீரும்.

Koviloor Digital Library

488 - 500 சகல பிணி தீர தைலம்.

நற்சீரகம் கருஞ்சீரகம் சோம்பு ஏலம் அதிமதுரம் கோஷ்டம் நன்னாரி தண்ணீர்விட்டான், கொடி வேலி வேலிப்பருத்தி, சாரணை ஆவரை, மதனப்பூ, பத்திரி தும்பை கடுக்காய் வசம்பு மஞ்சள் முருங்கை அம்மான் பச்சிலை பசும்பாலில் வைத்து வேடுகட்டி ஆவியால் வேகவைத்து இளநீரில் கலக்கி எள்ளெண்ணை ஒரு படி சேர்த்து பசுநெய் சமன் சேர்த்து காய்ச்சி மண்டலம் முழுகிட பித்தம் சேத்துமம், வரட்சி சொறி, சன்னி விஷம் காந்தல் கவிசை, பெருங்குஷ்டம். மேகம், காமாலை, பாண்டு, வாந்தி, வலி, வெள்ளை போன்ற பல பிணிகள் தீரும்.

அகஸ்தியர் துணை.

KOVILOOR ANDAVAN LIBRARY, KOVILOOR
A. No. 44883

Koviloor Digital Library

Koviloor Digital Library

தாமரை
நூலகம்